सत्यमेव जयते

# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

# தமிழ்நாட்டில் மின்கொள்முதல் முறையின் அமலாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை

SUPREME AUDIT INSTITUTION OF INDIA

लोकहितार्थ सत्यनिष्ठा

Dedicated to Truth in Public Interest

## தமிழ்நாடு அரசு

*2023ஆம் ஆண்டின் அறிக்கை எண் 4*

# இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

# தமிழ்நாட்டில் மின்கொள்முதல் முறையின் அமலாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கை

**தமிழ்நாடு அரசு**

***2023ஆம் ஆண்டின் அறிக்கை எண் 4***

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | v |
| செயலாக்கச் சுருக்கம் | | vii |
| **அத்தியாயம் I - முன்னுரை** | | |
| முன்னுரை | 1.1 | 1 |
| மின்கொள்முதல் முறையின் (eProcurement system) நோக்கங்கள் | 1.2 | 2 |
| மின்கொள்முதல் அமைப்பின் விளக்கம் | 1.3 | 2 |
| GePNICன் தொகுதிகள் | 1.4 | 2 |
| மின்கொள்முதல் முறையின் பணி செயல்முறை | 1.5 | 4 |
| தணிக்கை நோக்கங்கள் | 1.6 | 4 |
| தணிக்கை அளவுகோல்கள் | 1.7 | 4 |
| தணிக்கையின் செயற்பரப்பு மற்றும் முறைமை | 1.8 | 5 |
| ஒப்புகை | 1.9 | 7 |
| அறிக்கை அமைப்பு | 1.10 | 7 |
| **அத்தியாயம் II - மின்கொள்முதல் மென்பொருளின் செயலாக்கம்** | | |
| முன்னுரை | 2.1 | 9 |
| மின்கொள்முதல் இணையதளத்தின் முழுமையற்ற செயல்பாடு | 2.2 | 10 |
| கொள்முதல் நிறுவனங்களால் மின்கொள்முதல் மென்பொருளின் பயன்பாடு | 2.3 | 11 |
| GePNICஐப் பயன்படுத்தும் பிற மாநில அரசுகளுடன் ஒப்பிடுகையில் தமிழக அரசால் வெளியிடப்பட்ட டெண்டர்களின் புதுப்பிப்பிற்கான நிலை | 2.4 | 15 |
| மின்கொள்முதல் மென்பொருளில் டேவணித் தொகை (Earnest Money Deposit) மேலாண்மை | 2.5 | 16 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| மின்கொள்முதல் மென்பொருள் பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வை அளித்தல் | 2.6 | 17 |
| போட்டியின் நிலை | 2.7 | 19 |
| டெண்டர்களைச் செயலாக்குவதற்கு எடுக்கப்பட்ட நேரம் | 2.8 | 20 |
| முடிவுரை | 2.9 | 21 |
| பரிந்துரைகள் | 2.10 | 21 |
| **அத்தியாயம் III - பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகள்** | | |
| முன்னுரை | 3.1 | 23 |
| அலுவல் விதிகளை மென்பொருளில் இணைக்காமை | 3.2 | 24 |
| மென்பொருளில் போதிய கட்டுப்பாடுகள் இல்லாமை | 3.3 | 30 |
| மின்கொள்முதல் முறையில் உள்ள பிற சிக்கல்கள் | 3.4 | 44 |
| முடிவுரை | 3.5 | 48 |
| பரிந்துரைகள் | 3.6 | 48 |
| **அத்தியாயம் IV - ஒப்பந்த செயல்முறை** | | |
| முன்னுரை | 4.1 | 49 |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு | 4.2 | 50 |
| டெண்டர்களின் மதிப்பீடு | 4.3 | 53 |
| முடிவுரை | 4.4 | 60 |
| பரிந்துரைகள் | 4.5 | 61 |
| **அத்தியாயம் V - ஒப்பந்த செயல்முறையில் கூட்டு ஏலங்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு** | | |
| முன்னுரை | 5.1 | 63 |
| ஒற்றை டெண்டருக்காக பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் எண்ணிக்கையின் பகுப்பாய்வு | 5.2 | 65 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| சுழற்சி முறையில் L1 ஆகும் ஒப்பந்ததாரர்கள் (ஏலமுறையில் சுழற்சி) | 5.3 | 66 |
| குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள் | 5.4 | 69 |
| ஒரே குழும நிறுவனங்களின் டெண்டர் பங்கேற்பு | 5.5 | 72 |
| IP முகவரியிலிருந்து கண்டறியப்பட்ட முரணான ஏல பங்கேற்பு முறைகள் | 5.6 | 73 |
| EMD செலுத்தல்களில் இருந்து அறியப்பட்ட ஏலமுறை பாங்குகள் | 5.7 | 75 |
| முடிவுரை | 5.8 | 78 |
| பரிந்துரைகள் | 5.9 | 79 |

# இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1.1 | மாதிரி மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் பட்டியல் | 81 |
| 1.2 | டெண்டர் தேர்ந்தெடுப்பில் பயன்படுத்தப்பட்ட இடர் அளவுருக்கள் | 82 |
| 2.1 | மின்கொள்முதல் இணையதள உபயோகத்தை இடைநிறுத்தம் செய்த கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள் | 83 |
| 2.2 | GePNIC பயன்படுத்தும் பிற மாநில அரசுகளுடன் ஒப்பிட்டு தமிழக அரசால் வெளியிடப்பட்ட டெண்டர்களின் புதுப்பிப்புக்கான நிலை | 84 |
| 3.1 | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவான காலவரம்புடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் கொள்முதல் நிறுவனம் வாரியான விவரங்கள் | 85 |
| 5.1 | ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள் | 87 |
| 5.2 | தொடர்ச்சியான EMD ஆவண எண்களுடன் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள் | 88 |
| | சுருக்கங்களின் சொற்களஞ்சியம் | 89 |

# முகவுரை

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் மார்ச் 2022 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்த அறிக்கை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 151(2)ன் படி மாநில சட்டமன்றத்திற்கு முன் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் இந்த அறிக்கையானது, 2016-22 வரையிலான காலப்பகுதியில் தமிழ்நாட்டில் மின்கொள்முதல் முறையின் அமலாக்கம் மீதான செயலாக்கத் தணிக்கையின் குறிப்புகளை உள்ளடக்கியது.

ஜூன் 2022 மற்றும் நவம்பர் 2022க்கு இடைப்பட்ட காலத்தில் தணிக்கை செய்த போது அறியப்பட்ட நேர்வுகள் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு பிற்பட்ட காலத்தில் அறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் துறைத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளை சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# செயலாக்கச் சுருக்கம்

## செயலாக்கச் சுருக்கம்

### எதற்காக இந்த தணிக்கை செய்தோம்?

பல்வேறு துறைகளில் திட்ட மேலாண்மை செயல்முறைத் திறனை மேம்படுத்தவும், திட்டங்களை செயல்படுத்துவதை விரைவுபடுத்தவும், தமிழ்நாடு அரசு ஒரு விரிவான திட்ட உருவாக்கம், செயலாக்கம் மற்றும் மேலாண்மை அமைப்பை திட்டமிட்டுள்ளது. இவ்வமைப்பு, மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் வேலைகளின் முழு செயல்முறையையும் ஒருங்கிணைத்து கணினிமயமாக்கலை நோக்கமாகக் கொண்டது. மேலும், அரசு செயல்முறையில் மின்கொள்முதல் இணையதளம் மற்றும் மின்னணு டெண்டர் நடைமுறைகளை பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

இதை அடைய, தமிழக அரசு, நிதித் துறை மூலம் மின்கொள்முதல் முறையை (GePNIC இணையதளம்) செயல்படுத்தியது. டெண்டர் செயல்முறைக்கான சுழற்சி நேரம், மறைமுக செலவுகள் ஆகியவற்றை குறைப்பதற்காகவும் கொள்முதல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்காகவும் இந்த அமைப்பு கருத்தாக்கப்பட்டது. மின்கொள்முதல் அமைப்பானது ஒப்பந்ததாரர்கள் டெண்டர் அட்டவணையை இலவசமாக மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து இணைய வழியில் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க உதவுகிறது.

மின் கொள்முதல் அமைப்பின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, 2016-22 வரையிலான ஆண்டுகளின் செயல்பாடுகளை உள்ளடக்கிய இந்த செயல்திறன் தணிக்கையை CAG மேற்கொண்டது. மின்கொள்முதல் இணையதளத்தின் (GePNIC) செயலாக்கம் மற்றும் 2016-22 வரையிலுள்ள காலத்திற்கான தரவு மற்றும் துறைகளிலுள்ள கைமுறை டெண்டர் ஆவணங்களின் அடிப்படையில் டெண்டர்களின் மதிப்பீடு மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திட்டமிடப்பட்ட அனைத்து எட்டு தொகுதிகளும் முழுமையாக செயல்பட்டன. இந்த தணிக்கையின் நோக்கங்கள், (1) போட்டி ஊக்குவித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான அதன் நோக்கங்களை அடைய மின்கொள்முதல் முறை திறம்பட செயல்படுத்தப்பட்டதா மற்றும் திறமையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பதை மதிப்பிடுவது; (2) அலுவல் விதிகள் மென்பொருளில் போதுமான அளவு இணைக்கப்பட்டுள்ளதா மற்றும் (3) தரவின் முழுமை, ஒழுங்கமைவு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த போதுமான கட்டுப்பாடுகள் மென்பொருளில் கட்டமைக்கப்பட்டுள்ளதா; ஆகியன.

## நாம் என்ன கண்டுபிடித்தோம்?

மாநிலத்தில் உள்ள அனைத்து கொள்முதல் நிறுவனங்களும் GePNIC இணையதளத்தின் மூலம் கொள்முதல் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்ட அரசு அறிவுறுத்தல்கள் இல்லாத நிலையில், மின்கொள்முதல் இணையதளத்தைப் பயன்படுத்தும் கொள்முதல் நிறுவனங்கள் உட்பட பயனர் துறைகள், கைமுறை கொள்முதல், GeM (அரசு மின்-சந்தை இடம்), MSTC போன்ற கொள்முதல் செய்வதற்கான மாறுபட்ட/மாற்று முறைகளை பயன்படுத்தின. மின்கொள்முதல் இணையதளத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து கண்காணிக்க 'பொறுப்பு மையம்' எதுவும் இல்லை. செயல்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் ஆன பிறகும், எழுபத்து நான்கு விழுக்காடு கொள்முதல் நிறுவனங்கள் மின்கொள்முதல் இணையதளத்தைப் பயன்படுத்தாமலேயே இருந்தன.

டெண்டர் மதிப்பீட்டு அறிக்கைகளை பதிவேற்றம் செய்யாதது, மின்கொள்முதல் முறையை முழுமையற்றதாகச் செய்து, டெண்டர் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் புறநிலையை பாதிப்பதோடு கைமுறையான பதிவுகளையே தொடர்ந்து சார்ந்திருக்கச் செய்கிறது. தொடங்கப்பட்டு 15 ஆண்டுகளுக்குப் பிறகும், மற்ற 15 மாநில அரசுகளுடன் ஒப்பிடும்போது, டெண்டர் செயல்முறைகளின் நிலைகளை GePNICல் நிகழ்நிலைப்படுத்துவதில் தமிழக அரசு பதினொன்றாவது இடத்தில் உள்ளது.

இணைய வழியில் EMD பெறும் முறை டிசம்பர் 2017ல் செயல்படுத்தப்பட்டாலும், அகநிலை பயன்முறையிலேயே (offline mode) EMD தொடர்ந்து வசூலிக்கப்பட்டது. இதனால், தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு EMD திரும்பப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.

மின்கொள்முதல் இணையதளத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இதில் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிக்க நிதித் துறை அல்லது பயனர் துறைகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விற்பனையாளரைப் பதிவுசெய்வதற்கான திட்டமிடப்பட்ட மையப்படுத்தப்பட்ட திறந்த இணைய பணிப்பாய்வு முறை இன்னும் செயல்படுத்தப்படவில்லை.

தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000 (TNTIT விதிகள்)ன் படி பரிந்துரைக்கப்பட்ட காலவரம்பை, துறைகள் பின்பற்றவில்லை மற்றும் TNTIT விதிகளின் காலவரம்பு தொடர்பான விதிகளை இணைக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்படவில்லை.

உள்நாட்டு நிறுவனங்களுக்கு கொள்முதலில் முன்னுரிமை வழங்குவதற்கான TNTIT விதிகளை இந்த அமைப்பு பூர்த்தி செய்யவில்லை. இதேபோல், கட்டண ஒப்பந்த காலத்தில் வழங்கப்பட்ட கொள்முதல் ஆணை (கள்) பற்றிய விவரங்களைப் பதிவேற்ற மென்பொருளில் எந்த ஏற்பாடும் இல்லை.

பொருட்களுக்கான அளவுப் பட்டியல் உருவாக்கத்திற்குப் பிறகு L1 ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் அதே விலையை மேற்கோள் காட்டியதால் கைமுறையாக தலையீடு தேவைப்படும் நேர்வுகளுக்கும் இந்த அமைப்பில் ஏற்பாடுகள் இல்லை.

மின்கொள்முதல் EMD மற்றும் டெண்டர் மதிப்புகளுக்கு 'பூஜ்ஜியம் அல்லாத' மதிப்புகள் மட்டுமே அனுமதிக்கப்படுவதை மென்பொருள் உறுதி செய்யவில்லை, இதன் விளைவாக வெளியிடப்பட்ட டெண்டர்களில் 10 விழுக்காடு, EMD மதிப்பை அல்லது டெண்டர் மதிப்பை 'பூஜ்ஜியம்' எனக் காட்டுகின்றன. மென்பொருளில் உள்ளீட்டுக் கட்டுப்பாடுகள் இல்லாததால், கட்டாயப் புலங்கள் மற்றும் பெயர் புலங்களில் NULL மதிப்புகளில் முரண்பாடுகள் இருந்தன.

ஒரே டெண்டருக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள் TNTIT விதிகளுக்கு முரணாக வெவ்வேறு தேதிகளில் மறைகுறியாக்கம் செய்யப்பட்டன. பொருட்களுக்கான அளவுப் பட்டியல் ஒப்பீட்டு விளக்கப்படம், மீள் கொள்முதல் இனங்களில் (buy-back cases), அதற்கான தொகையை மூன்று நேர்வுகளில் குறைப்பதற்குப் பதிலாக மேற்கோள் காட்டப்பட்ட தொகையுடன் சேர்த்தது.

பயனர் துறைகளால் பொறுப்புகள் உருவாக்கப்படுவதில் முரண்பாடுகள் காணப்பட்டன. நிறுவனங்கள் பல ஒருங்கிணைப்பு அதிகாரிகளை உருவாக்கியது. தடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் தடுக்கப்பட்ட துறை பயனர்கள் தடை செய்யப்பட்ட காலத்தில் டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்றனர். இவை, செயலாக்கக் கட்டுப்பாடு இல்லாததைக் குறிக்கும்.

ஏலத்தின் பாங்குகள், *அதாவது* ஏல சுழற்சி, குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள், கொள்முதல் நிறுவனத்தின் கணினிகளில் இருந்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல், வெவ்வேறு ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியில் இருந்து டெண்டருக்காக ஒப்பந்தப்புள்ளி சமர்பித்தல், இரட்டை EMD, ஒப்பந்ததாரர்களால் குறியிடப்பட்ட தகவல் பதிவேற்றம், ஒப்பந்த முறைகேட்டைக் குறிக்கும் தொடர்ச்சியான EMD ஆவண எண்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு கண்டறியப்பட்டது. ஒப்பந்ததாரர்களிடையே இந்த மோசடியான நடைமுறைகள் மற்றும் டெண்டர்களின் மதிப்பீடு மற்றும் ஒப்புதலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் தோல்வி ஆகியவை பங்கேற்பை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும், வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் மற்றும் கொள்முதல் முறையை மேம்படுத்தவும் GoTNன் முயற்சிகளை பாதித்தன.

1.34 இலட்சம் டெண்டர்களின் தரவு பகுப்பாய்வு, 208 டெண்டர்களில் சமர்ப்பிக்கப்பட்ட 444 ஒப்பந்தப்புள்ளிகள், மின்கொள்முதல் மென்பொருளில் பதிவுசெய்யப்பட்ட அதே முகவரியைக் கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டது மற்றும் அதே IP முகவரியிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டது.

(i) மாநிலத்தின் வெவ்வேறு புவியியல் இடங்களிலிருந்த ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பது அல்லது (ii) துறையுடனாக கூட்டுசேர்ந்து செய்யப்படுவது என்பதைக் குறிக்கும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகளைத் துறையின் வளாகத்திலிருந்தே சமர்ப்பிப்பது போன்ற கூட்டு ஏலத்தை மேற்கூறிய நேர்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. L1 என்பது அமைப்பு அல்லது சம்பந்தப்பட்ட துறையால் தீர்மானிக்கப்படவில்லை என்றும், பங்குபெறும் ஒப்பந்ததாரர்களால் முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது என்பதை இது காட்டுகிறது. எனவே, கொள்முதல் செயல்பாட்டில் போட்டி மற்றும் வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல் போன்ற மின்கொள்முதல் அமைப்பின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை.

## நாங்கள் என்ன பரிந்துரைக்கிறோம்?

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி 17 பரிந்துரைகளை நாங்கள் செய்துள்ளோம்:

**மின்கொள்முதல் மென்பொருளின் செயலாக்கம்:**

- ✓ முன்னுரிமை அடிப்படையில் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு ஒரு விரிவான தீர்வைக் கொண்டு வர வேண்டும்.
- ✓ அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளுக்கும், மின்கொள்முதல் மென்பொருளைப் பயன்படுத்த அனைத்து கொள்முதல் நிறுவனங்களுக்கும் தமிழக அரசு உத்தரவுகளை வழங்க வேண்டும்.
- ✓ கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், ஒவ்வொரு கட்டம் முடிந்தவுடன், இணையதளத்தில் உள்ள டெண்டர் நிலைகளை உடனடியாக புதுப்பிக்க வேண்டும். மேலும், இணையதளத்தில் உள்ள மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System - MIS) அறிக்கைகளைப் பயன்படுத்தி, துறையின் நிர்ணயிக்கப்பட்ட மைய அதிகாரிகளால் (Nodal Officers) கண்காணிக்கப்பட வேண்டும்.
- ✓ EMDயை பிற காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நேர்வுகளில் பொறுப்பை அரசாங்கம் நிர்ணயித்து, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் வெளியீட்டாளரை விட உயர்நிலை அதிகாரியால் அகல்நிலை (offline) கட்டணங்கள் அங்கீகரிக்கப்படும் வகையில் ஒரு வழிமுறையை கொண்டு வர வேண்டும்.
- ✓ பதிவு செய்வதற்கான மையப்படுத்தப்பட்ட திறந்த இணைய பணிசெயல்முறை மாதிரியை செயல்படுத்துவதற்கான செயல்முறையை அரசு விரைவுபடுத்த வேண்டும்.

- ✓ கொள்முதல் நிறுவனங்களின் அதிகாரிகளால், மின்கொள்முதல் மென்பொருளை திறம்படப் பயன்படுத்துவதற்கான, கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தை அரசு உருவாக்கி செயல்படுத்த வேண்டும். உதவி மையம் மற்றும் முன் கலந்தாய்வுக்கூட்ட நடவடிக்கைகள் மூலம் ஒப்பந்ததாரர் பங்கேற்பில் அதிகரிப்பை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகள்:**

- ✓ மென்பொருளில் பொருத்தமான விதிகளை நிதித் துறையுடன் கலந்தாலோசித்து, TNTIT விதிகளுக்கு இணங்க, அரசு இணைக்க வேண்டும், துறைசார் பயனர்கள்/ஒப்பந்ததாரர்களின் பதிவுத் தகவலைப் பதிவு செய்யும் போது, தேவையான உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளை மின்கொள்முதல் மென்பொருளில் வழங்க வேண்டும். மேலும், தேவையான சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் வெளிப்படைத்தன்மை, பாரபட்சமற்ற செயல்முறை மற்றும் இரகசியத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் தமிழ்நாட்டிற்கான மென்பொருளை தனிப்பயனாக்க வேண்டும்.
- ✓ வெளிப்படைத்தன்மை கொண்ட மென்பொருளில் உள்ள வெளியிடப்பட்ட தகவல்களை எந்தவொரு தடையுமின்றி பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஒப்பந்த செயல்முறை:**

- ✓ மின்கொள்முதல் இணையதளத்தில் உள்ள சிக்கல்களை NICக்கு தகுந்த தீர்வுக்காக எடுத்துச் செல்ல, ஒரு 'பொறுப்பு மையத்தை' அரசு நிறுவ வேண்டும்.
- ✓ ஒப்பந்ததாரர்கள் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவேற்றிய ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே டெண்டர்களை மதிப்பீடு செய்ய கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.
- ✓ டெண்டர் செயலாக்கத்தில் உள்ள முரண்பாடுகளுக்கு டெண்டர் அழைப்பு அதிகாரிகள் மற்றும் டெண்டர் செயல்பாட்டில் ஈடுபட்ட அலுவலர்கள் மீது அரசு பொறுப்பு நிர்ணயிக்க வேண்டும்.
- ✓ டெண்டர் மதிப்பீட்டாளர் மீதான பொறுப்பை நிர்ணயிப்பதற்கும், ஏல நிபந்தனைகளை அதன் கூறுகளாகப் பிரித்தளிப்பதற்கும், டெண்டர் மதிப்பீட்டிற்கான தானியங்கு முறை மற்றும் மீற முடியாத சரிபார்ப்புப் பட்டியலை உருவாக்குவதற்கும், மின்கொள்முதல் இணையதளத்தில் ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும்.
- ✓ அரசு, NIC மூலம், முழுமையான டெண்டர் மதிப்பீட்டை உறுதி செய்வதற்காக மின்கொள்முதல் இணையதளத்தில் SSIகள்/MSMEகள் ஒப்பந்ததாரர்கள் தொடர்பான கொள்கைகளை இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ✓ முறைகேடுகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- ✓ கொள்முதல் துறைகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள், டெண்டர் செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மைக்காக, அனைத்து மதிப்பீட்டு அறிக்கைகளும் முழுமையான வடிவில் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**ஒப்பந்த செயல்முறையில் கூட்டு ஏலங்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு:**

- ✓ ஒரே பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும்/அல்லது ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கும் ஒப்பந்தபுள்ளிகளை சுட்டிக்காட்டும் வகையில் மென்பொருளை அரசு மறுவடிவமைப்பு செய்ய வேண்டும்.
- ✓ தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட ஏலமுறையில் கூட்டு மற்றும் வணிகக் கூட்டமைப்பு நேர்வுகளுக்கு அரசு விசாரணை நடத்தி பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும்.
- ✓ டெண்டர்களை மதிப்பீடு செய்து இறுதி செய்வதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், MISன் 'டெண்டர் டிஸ்கர்சிவ் அறிக்கை' பயன்படுத்தி இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட ஆவணங்களை கவனமாக ஆராய வேண்டும். இவ்வறிக்கை, IP முகவரி, EMD, GST போன்ற அனைத்து ஒப்பந்தபுள்ளி தொடர்பான தகவல்களையும் வழங்குவதன் மூலம் ஒப்பந்ததாரர்களின் முறைகேடான கூட்டு செயல்முறைகளுக்கு எதிராக பாதுகாக்க உதவும். கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் தங்கள் அலுவலக கணினியில் ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்க ஒப்பந்ததாரர்களை அனுமதிக்கக் கூடாது.

## தணிக்கை பரிந்துரைகளுக்கு அரசின் மறுமொழி

தணிக்கை குறிப்புகளுக்கு அரசு பதிலளிக்கும் போது, தேவையான இடங்களில் தேவையான திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்தது. 1 ஏப்ரல் 2023 முதல் தமிழ்நாடு அரசின் பொது கொள்முதல் நிறுவனங்களால் மின்கொள்முதல் இணையதளத்தின் மூலம் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு, மின்கொள்முதல் அமைப்பில் தேவையான கட்டுப்பாடுகள் மற்றும் வசதிகளை கொண்டு வர அரசு மேற்கொண்ட/அரசால் முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கையை தணிக்கை ஒப்புக்கொண்டு பாராட்டுகிறது.

# அத்தியாயம் I

# முன்னுரை

# அத்தியாயம் I

# முன்னுரை

## 1.1 முன்னுரை

தமிழக அரசின் நிதித் துறையானது (Department of Finance - DoF), மின்னணு ஒப்பந்தப்புள்ளி செயல்முறையை (e-tendering process) படிப்படியாக செயல்படுத்தும் நோக்கில், அக்டோபர் 2007 முதல், ₹10 இலட்சத்துக்கும் அதிகமான மதிப்பு கொண்ட முக்கிய உள்கட்டமைப்பு துறைகளின்[1] ஒப்பந்தப்புள்ளிகளை முன்னோடி அடிப்படையில் (pilot basis) இணைய தளம் மூலமாக சமர்ப்பிக்க (e-submission) ஆணைகளை[2] வெளியிட்டது. சோதனைக் கட்டம் வெற்றிகரமாக முடிந்ததும், ஜனவரி 2008[3] முதல் நியமிக்கப்பட்ட இணையதளத்தில் கொள்முதல் மேற்கொள்ள தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை (Tamil Nadu Transparency in Tenders - TNTIT) சட்டம், 1998ன் கீழ் வரும் அனைத்து கொள்முதல் நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இணையம் வாயிலான மின்னணு கொள்முதலை எளிதாக்குவதற்காக, தேசிய தகவல் மையமானது (National Informatics Centre- NIC), இந்திய அரசின் நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையுடன் (Department of Expenditure, Ministry of Finance) கலந்தாலோசித்து, தேசிய தகவல் மையத்தின் அரசாங்க மின் கொள்முதல் அமைப்பு (Government eProcurement system of National Informatics Centre - GePNIC) என்ற ஒரு நியமிக்கப்பட்ட மென்பொருளை உருவாக்கியது. தமிழக அரசின் தேவைக்கேற்ப GePNIC மாற்றியமைக்கப்பட்டு, 2008-09 நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டது. தமிழக அரசுக்கு NIC இம்மென்பொருளை இலவசமாக வழங்கியது.

பின்னர், இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அறிவிப்பை வெளியிடுதல், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பித்தல், மின்–சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களை திறப்பது மற்றும் டிஜிட்டல் கையொப்பம் மூலம் ஆவணங்களை அங்கீகரிப்பது ஆகியவற்றின் தொடர்பான துணை விதிகளின் மாற்றங்களுடன், TNTIT விதிகள், 2000 திருத்தியமைக்கப்பட்டது.

---

இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள சுருக்க சொற்களஞ்சிய திரட்டு 89ம் பக்கத்தில் உள்ளது.

[1] பொதுப்பணி, நெடுஞ்சாலை, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை மெட்ரோ நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம்.

[2] 30-09-2007 தேதியிட்ட நிதி (சம்பளங்கள்) துறை G.O. Ms. எண். 471 பார்க்கவும்.

[3] 28-12-2007 தேதியிட்ட நிதி (சம்பளங்கள்) துறை G.O. Ms. எண் 599 பார்க்கவும்.

டிசம்பர் 2022 நிலவரப்படி, இந்த இணையதளம் (https://tntenders.gov.in,), தொடங்கப்பட்ட நாளிலிருந்து, ₹2,92,050 கோடி மதிப்பிலான 2.97 இலட்சம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

## 1.2 மின்கொள்முதல் முறையின் (eProcurement system) நோக்கங்கள்

பின்வருவன மின்கொள்முதல் முறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள்.

- டெண்டர் அறிவிப்புகள்/விளம்பரங்களின் அணுகலை விரிவுபடுத்துதல்.
- ஒப்பந்ததாரர்களிடையே பாகுபாடு காட்டாமை மற்றும் போட்டியை ஊக்குவித்தல்.
- மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை.
- பொது நிதி விதிகள் (General Financial Rules) 2017, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (Central Vigilance Commission), உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) போன்ற அரசாங்க விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் இணங்குதல்.
- பொது விசை உள்கட்டமைப்பு (Public Key Infrastructure - PKI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பாதுகாப்பான ஒப்பந்தப்புள்ளிச் சமர்ப்பிப்பு.
- அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்றல்.

## 1.3 மின்கொள்முதல் அமைப்பின் விளக்கம்

திறந்த மூல (Open-Source) PostgreSQL தரவுத்தளத்துடன் Linux OSல் Java/JEE தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மின்கொள்முதல் இணையதளம் (eProcurement Portal) NICஆல் உருவாக்கப்பட்டது. தற்போது, TN டெண்டர் தளத்திற்கான (TN tender site) தரவுத்தள அளவு, தொடர்புடைய ஆவணங்களின் சேமிப்பகத்தையும் சேர்த்து சுமார் 14 TB ஆகும். புதுதில்லி, சாஸ்திரி பூங்காவில் உள்ள தேசிய தரவு மையத்தில் (National Data Centre at Shastri Park - NDCSP) உள்ள NIC, மின்கொள்முதல் இணையதளத்தின் முதன்மை தளமாகும் (Primary site). NIC-அலுவல் தொடர்ச்சித் திட்டத்தின்படி (Business Continuity Plan-BCP), முதன்மை தளம் முற்றிலும் செயலிழந்தால், அதே செயல்பாடுகள் ஹைதராபாத்தில் உள்ள தேசிய தரவு மையத்தின் பேரிடர் மீட்பு தளத்தில் இருந்து வழங்கப்படும்.

## 1.4 GePNICன் தொகுதிகள் (modules)

பின்வரும் எட்டு தொகுதிகள் GePNICல் உள்ளன:

- பதிவுத் தொகுதி: டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழ்கள் (Digital Signature Certificate) கொண்ட அரசு அதிகாரிகள் மற்றும்

ஒப்பந்ததாரர்கள் (இந்தப் பயனர்கள் மட்டுமே அமைப்பில் உள்நுழைந்து டெண்டர் செயல்முறையில் பங்கேற்க அங்கீகரிக்கப்பட்டவர்கள்) மற்றும் DSC இல்லாதவர்கள் (MIS அறிக்கைகளைப் பார்க்க) ஆகியோரின் பதிவு/சேர்க்கை.

- **டெண்டர் வெளியிடுதல்:** டெண்டர் உருவாக்கம் மற்றும் வெளியிடுதல், பிழைத்திருத்தப்பட்டி (corrigendum) வெளியீடு, முந்தைய கலந்தாய்வுக் கூட்டத்திற்கான (pre-bid meeting) ஆவணங்களை வெளியிடுதல், வெளியிடப்பட்ட டெண்டர்களின் தெளிவுரைகள்.

- **ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு:** இணையதள வாயிலாக ஒப்பந்திப்புள்ளி சமர்ப்பிப்பு/பல முறை மறு சமர்ப்பித்தல் (சமர்ப்பிப்புக்கான காலம் முடிவடையும் முன், இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மட்டுமே கருதப்படும்), ஒப்பந்தப்புள்ளி இறுதிபடுத்துதல், வங்கி கட்டண நுழைவாயில் (bank payment gateway) மூலம் இணைய வழியில் பணம் செலுத்துவதற்கான வசதி, ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் குறியாக்கம் (encryption), ஒற்றை/பல உறை ஏல முறை (single/multiple cover bid system).

- **டெண்டர் திறப்பு:** டெண்டர் உருவாக்கத்தின் போது ஏலத் திறப்பாளராக நியமிக்கப்பட்ட அலுவலரால், சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்தில் திறக்கப்படும்.

- **தொழில்நுட்ப மதிப்பீடு:** ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த ஆவணங்களை வலைதளம் மூலம் பதிவிறக்கம் செய்து அவற்றை கைமுறையாக மதிப்பீடு செய்தல். இம்மதிப்பீட்டின் முடிவுகள் (selection of bidders) மற்றும் நிதி ஏலம் (financial bid) திறக்கப்படும் தேதி ஆகியவை அமைப்பில் பதிவேற்றப்படும்.

- **நிதி ஏலத் திறப்பு:** டெண்டர் உருவாக்கத்தின் போது ஏலத் திறப்பாளராக நியமிக்கப்பட்ட அலுவலரால், தொழில்நுட்பத் தகுதிபெற்றவை என்ற தேர்வுசெய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே, மீண்டும் இணையத்தில் திறக்கப்படும்.

- **நிதி மதிப்பீடு:** மின்கொள்முதல் முறையில் பொருள் அளவிற்கான பட்டியல் (Bill of Quantity - BoQ) கொண்டு தன்னியக்கமாகவே நிதி ஏலங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு L1 ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுத்தல். நிதி மதிப்பீட்டுக் குழு (financial evaluation committee) விலை ஏலங்கள் (price bids) மற்றும் ஒப்பீட்டு விளக்கப்படம் (comparative chart) ஆகியவற்றை ஆராய்கிறது. ஒப்பந்ததாரர்களின் தேர்வு, உறுப்பினர் விவரங்கள் மற்றும் பரிந்துரை அறிக்கை ஆகியவற்றுடன், மதிப்பீடு முடிவுகள் வலைதளத்தில் பதிவேற்றப்படும்.

- **ஒப்பந்தம் வழங்குதல்:** வெற்றிகரமான ஒப்பந்ததாரருக்கு (L1) ஏற்பு கடிதம் (Letter of Acceptance LoA) வழங்கப்படும். நிதி மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஒப்புதல் பெற்ற பிறகு, டெண்டர் அழைப்பு ஆணையம் (Tender Inviting

Authority TIA), ஒப்பந்த விவரங்களுடனான ஆணையை கைமுறையாக தயாரித்து வழங்குகிறது.

## 1.5 மின்கொள்முதல் முறையின் பணி செயல்முறை

GePNIC மென்பொருளின் பணி செயல்முறை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 1.1: GePNIC மென்பொருளின் பணி செயல்முறை




## 1.6 தணிக்கை நோக்கங்கள்

தணிக்கையின் நோக்கங்கள் பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்காகும்:

- போட்டி ஊக்குவித்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைய மின்கொள்முதல் மென்பொருள் திறம்பட செயல்படுத்தப்பட்டதா மற்றும் திறமையாகப் பயன்படுத்தப்பட்டதா.
- மென்பொருளில் அலுவல் விதிகள் போதுமான அளவு இணைக்கப்பட்டுள்ளதா.
- அமைப்பில் உள்ள தரவின் முழுமை, ஒருங்கமைவு மற்றும் நம்பகத்தன்மை (completeness, integrity, and reliability) ஆகியவற்றை மதிப்பிடுதல் மற்றும் போதுமான கட்டுப்பாடுகள் அமைப்பினுள் கட்டமைக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

## 1.7 தணிக்கை அளவுகோல்கள்

தணிக்கை முடிவுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்கள் பின்வருமாறு:

- தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை(TNTIT) சட்டம் 1998.
- தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள் 2000.
- கொள்முதல் தொடர்பாக மாநில அரசால் வெளியிடப்பட்ட அரசு ஆணைகள், சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுநெறிமுறைகள்.
- இந்திய அரசின், தகவல் தொழில்நுட்பத் துறையின், தரநிலை சோதனை மற்றும் தரச் சான்றிதழ் (Standardisation Testing and Quality Certification - STQC) இயக்குநரகத்தால் வெளியிடப்பட்ட மின்கொள்முதலுக்கான வழிகாட்டுநெறிமுறைகள்.
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (CVC) வழங்கிய மின்–ஒப்பந்த தீர்வுகள் குறித்த வழிகாட்டுநெறிமுறைகள்.

## 1.8 தணிக்கையின் செயற்பரப்பு மற்றும் முறைமை

தகவல் தொழில்நுட்ப (Information Technology - IT) தணிக்கையானது, ஜூன் 2022 முதல் நவம்பர் 2022 வரை நடத்தப்பட்டது, இது, NIC வழங்கிய 2016-2022 ஆண்டுகள் தொடர்பான தரவுகளின் அடிப்படையில், GePNIC தொகுதிகளின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு செய்யப்பட்டது. தணிக்கை முறை பின்வருவனவற்றை உள்ளடக்கியது -

- மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் மாதிரி அலகுகளில் டெண்டர் செயலாக்கம் தொடர்பான கைமுறை ஆவணங்கள் ஆகியவற்றின் பகுப்பாய்வு.
- பயன்பாட்டுக் கட்டுப்பாடுகளின் பகுப்பாய்வு.
- GePNIC தரவுத்தளத்திலுள்ள தரவின் பகுப்பாய்வு.

தணிக்கை நோக்கங்கள் (objectives), தணிக்கை அளவுகோல்கள் (criteria) மற்றும் தணிக்கைக்கு உட்படுத்தப்படுபவை (coverage) உள்ளிட்ட தணிக்கைத் திட்டமானது (Audit Plan) 26 ஜூலை 2022 அன்று நடைபெற்ற நுழைவுக் கூட்டத்தின் மூலம் தமிழக அரசுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. களப்பணியில், தொடர்புடைய கோப்புகளின் ஆய்வு, ஆவண மற்றும் மின்னணு ஆதாரங்களின் சேகரிப்பு ஆகியவை அடங்கும். தணிக்கை கண்டுபிடிப்புகள் பற்றி அரசாங்கத்துடன் விவாதிக்க 2023 பிப்ரவரி 15 அன்று நிறைவுக் கூட்டம் நடைபெற்றது.

இன்றைய நிலவரப்படி, கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழக அரசின் கீழ் உள்ள 53 துறைகள்/நிறுவனங்கள் (கொள்முதல் நிறுவனங்கள்) மின்கொள்முதல் இணையதளத்தில் டெண்டர்களை வெளியிட்டுள்ளன. 2016-17 முதல் 2021-22 வரையிலான காலகட்டத்தில், மின்கொள்முதலை செயல்படுத்திய அனைத்து கொள்முதல் நிறுவனங்களின் தொடர்பான 1.78 இலட்சம் டெண்டர்களின் முழு தரவுக் குவிப்பும் (data dump), தணிக்கை நோக்கங்களைக் கருத்தில் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. TNTIT விதிகள் மற்றும் பயனர் துறைகளின் ஒப்பந்த நிபந்தனைகளுக்கான சரிபார்ப்புக் கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையை சரிபார்க்கும் பொருட்டும், ஒப்பந்தப்புள்ளி செயல்முறைகளில் முறைகேடுகள் மற்றும் வணிகக்கூட்டமைப்பு (cartelisation) ஏதேனும்

இருந்தால் அவற்றை கண்டறியும் பொருட்டும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தரவு பகுப்பாய்வின் முடிவுகளை கைமுறையான ஆவணங்களுடன் உறுதிப்படுத்தவும், மின்கொள்முதலில் கள அளவிலான சிக்கல்களைப் புரிந்து கொள்ளவும், தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்கள் (கீழே விளக்கப்பட்ட மாதிரி) கள ஆய்வு செய்யப்பட்டன.

மாதிரிக்கான செயல்முறை மூன்று நிலைகளில் செய்யப்பட்டது:

(i) **கொள்முதல் நிறுவனங்களின் மாதிரி எடுத்தல்:** வெளியிடப்பட்ட டெண்டர் எண்ணிக்கையின் அடிப்படையில் பதினான்கு கொள்முதல் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன **(இணைப்பு 1.1)**. 500 டெண்டர்களுக்கு மேல் அல்லது அதற்கு சமமாக வெளியிட்ட கொள்முதல் நிறுவனங்களிலிருந்து ஏழும், 500க்கும் குறைவான டெண்டர்களை வெளியிட்ட கொள்முதல் நிறுவனங்களிலிருந்து ஏழும், தொடர்பற்ற மாதிரி (random sampling) முறையில் தெரிவுசெய்யப்பட்டன. டிசம்பர் 2022 நிலவரப்படி, 53 கொள்முதல் நிறுவனங்கள் இணையதளத்தில் மின்கொள்முதலுக்கான இணையதளத்தைப் பயன்படுத்தி, 1.78 இலட்சம் டெண்டர்களை (மொத்த மதிப்பு: ₹2,15,060 கோடி) வெளியிட்டது. இதன் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 14 கொள்முதல் நிறுவனங்கள், வெளியிடப்பட்ட மொத்த டெண்டர்களில், 76 விழுக்காடாகவும் (1.32 இலட்சம் ஒப்பந்தப்புள்ளிகள்) மொத்த டெண்டர் மதிப்பில் 71 விழுக்காடாகவும் (₹1.52 இலட்சம் கோடி) அமைகின்றன.

(ii) **ஒப்பந்தங்களின் மாதிரி எடுத்தல்:** பன்னிரண்டு இடர் அளவுருக்கள் பரிசீலிக்கப்பட்டு மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டு, (அ) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (ஆ) IP முகவரி மற்றும் (இ) நிதி அளவுருக்கள் அடிப்படையில் அவற்றின் மதிப்பு (weightage) ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆபத்து அளவுருவிற்கும் அதற்குரிய மதிப்பெண் **இணைப்பு 1.2**ல் கொடுக்கப்பட்டுள்ளது. மேலே உள்ள இடர் அளவுருக்களின் கீழ் வரும் டெண்டர்கள், PostgreSQL வினவல்களின் (queries) தொகுப்பைப் பயன்படுத்தி அடையாளம் காணப்பட்டன, மேலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 14 கொள்முதல் நிறுவனங்களில், ஒவ்வொரு நிறுவனத்தாலும் வெளியிடப்பட்ட டெண்டர்களில் 25 விழுக்காடு (அதிகபட்சம் 100 டெண்டர்களுக்கு உட்பட்டது) அதாவது 1,183 டெண்டர்கள்[4] தேர்ந்தெடுக்கப்பட்டன.

(iii) **மாவட்டங்களின் மாதிரி எடுத்தல்:** கொள்முதல் நிறுவனங்களின் மாவட்ட வாரியான பரிவர்த்தனைகளின் அளவின் அடிப்படையில், சென்னை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர் (வரிசையில் முதல் 4) மற்றும் கரூர், கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் (வரிசையில் கீழே உள்ள 3) ஆகிய ஏழு மாவட்டங்கள், தொடர்பற்ற மாதிரி முறை மூலம் களப் பார்வைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன.

[4] களப் பார்வையின் போது மொத்தம் 1,260 டெண்டர்கள் சரிபார்க்கப்பட்டன, இதில் 1,183 மாதிரி டெண்டர்களும், மாதிரி டெண்டர்கள் தொடர்பான 77 டெண்டர்களும் அடங்கும்.

## 1.9 ஒப்புகை

IS தணிக்கையை நடத்துவதில், தமிழ்நாடு அரசு, DoF, NIC மற்றும் மாதிரி களப் பிரிவுகள் வழங்கிய ஒத்துழைப்பை தணிக்கை நினைவு கூறுகிறது.

## 1.10 அறிக்கை அமைப்பு

தணிக்கை முடிவுகள் பின்வரும் அத்தியாயங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன:

- அத்தியாயம் II : மின்கொள்முதல் மென்பொருளின் செயலாக்கம்
- அத்தியாயம் III : பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகள்
- அத்தியாயம் IV : ஒப்பந்த செயல்முறை
- அத்தியாயம் V : ஒப்பந்த செயல்முறையில் கூட்டு ஏலங்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு

# அத்தியாயம் II

# மின்கொள்முதல் மென்பொருளின் செயலாக்கம்

# அத்தியாயம் II

# மின்கொள்முதல் மென்பொருளின் செயலாக்கம்

**மாநிலத்தில் உள்ள அனைத்து கொள்முதல் நிறுவனங்களும், மின்கொள்முதல் இணையதளத்தின் மூலம் மட்டுமே பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதை அரசு கட்டாயமாக்கத் தவறிவிட்டது. செயல்படுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட போதிலும், இம்மென்பொருளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் கண்காணிக்கவும் 'பொறுப்பு மையம்' இல்லை. இதன் விளைவாக, மின்கொள்முதல் இணையதளம் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது/ பயன்படுத்தப்படவில்லை. இது, டெண்டர் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையின் நோக்கத்தை பாதித்தது.**

## 2.1 முன்னுரை

மின்கொள்முதல் முறை அக்டோபர் 2007ல் தொடங்கப்பட்டாலும், தமிழக அரசின் அனைத்து கொள்முதல் நிறுவனங்களிலும் அது கட்டாயமாக்கப்படுவதை தொடர்ந்து வெளியிடப்பட்ட அரசு ஆணைகள் தெளிவுபடுத்தவில்லை. தமிழக அரசு வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக மாநில/துறை மட்டத்தில் 'பொறுப்பு மையம்' இருக்கவில்லை.

மின்கொள்முதல் முறையில் தங்கள் ஒப்பந்த அறிவிப்புகளை வெளியிடுவதிலும், செயலாக்குவதிலும் உள்ள தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்க, பயனர் துறைகள் NICஐ நேரடியாக தொடர்புகொண்டன. மென்பொருளின் நிர்வாகி (DoF) இந்தச் செயல்பாட்டில் ஈடுபடவில்லையாதலால், இம்மென்பொருளிலுள்ள சிக்கல்கள் மற்றும் அதன் பயன்பாடு குறித்து அத்துறை அறிந்து கொள்ளவில்லை.

இந்தச் சிக்கல்கள், தொழில்நுட்ப மற்றும் நடைமுறை குறைபாடுகள் காரணமாக ஏற்பட்டன. இக்குறைபாடுகளை வலியுறுத்தும்படியான பொருத்தமான குறிப்புகள், **அத்தியாயங்கள் III** மற்றும் **IV**ல் சேர்க்கப்பட்டுள்ளன. குறை நிவர்த்திக்கும், நிதி மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கான தன்னியக்க சரிபார்ப்பு அம்சங்களுக்கும், விரிவான தொழில்நுட்ப மற்றும் நடைமுறை தீர்வு தேவைப்படுகிறது. இத்தீர்வில், அலுவல் செயல்முறை மறுசீரமைத்தல் (Business Process Re-engineering), நேர முத்திரைகள் (time stamps / time locks) போன்றவை அடங்கும்.

கொள்முதல் நிறுவனங்கள், பயனர் துறைகள் மற்றும் DoF அளவிலான மின்கொள்முதல் முறையை செயல்படுத்துதல் மற்றும் பயன்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் அறிக்கையின் பின்வரும் பத்திகள் மற்றும் அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. பலவீனமான நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பு, திட்டமிடல் மற்றும் திட்டத்தைத்

தொடங்குவதில் இருந்த குறைபாடுகள் இதற்கான முக்கிய காரணங்கள் ஆகும்.

## 2.2 மின்கொள்முதல் இணையதளத்தின் முழுமையற்ற செயல்பாடு

அக்டோபர் 2007ல் முன்னோடி கட்டத்தை (pilot phase) வெற்றிகரமாக முடித்தவுடன், 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை (TNTIT) சட்டம், 1998ன் கீழ் அனைத்து கொள்முதல் நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்ட மென்பொருளான GePNIC மூலம், மின்கொள்முதலுக்கான வசதி அளிக்கப்பட்டது. நிதித் துறை (DoF) மின்கொள்முதல் இணையதளத்தை செயல்படுத்துவதற்கான நிர்வாகி ஆகும். மின்கொள்முதல் அமைப்பில் உள்ள கொள்முதல் நிறுவனங்கள் சுயாதீனமான கொள்முதல் மையங்களாகும் (independent procurement centres). இது தொடர்பாக பின்வருவன கண்டறியப்பட்டன.

- டிசம்பர் 2022 நிலவரப்படி, 201 கொள்முதல் நிறுவனங்களுள் 148ல் மின்கொள்முதல் இணையதளம் பயன்படுத்தப்படவில்லை.
- 2016–17 முதல் 2021–22 வரையிலான காலத்திற்கான தரவு பகுப்பாய்வு, மின்கொள்முதல் இணையதளத்தின் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்ற 53 கொள்முதல் நிறுவனங்களில் 18, இதைப் பயன்படுத்துவதை பின்னர் நிறுத்தியது கண்டறியப்பட்டது (**இணைப்பு 2.1**).

இவ்வாறு, மின்கொள்முதல் முறை தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்த பிறகும், 74 விழுக்காடு கொள்முதல் நிறுவனங்களால் இது பயன்படுத்தப்படவில்லை. மேலும், டிசம்பர் 2007ல் வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவின் படி, "*1–1–2008 முதல், ₹10 இலட்சத்துக்கும் அதிகமான அனைத்து கொள்முதல்களுக்கு மின்னணு முறையிலும் (electronic mode) டெண்டர்கள் சமர்பிக்க வழிவகை அளிக்கப்பட வேண்டும்*" என்ற தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், மின்கொள்முதல் முறையை கட்டாயமாக்குவதில் GoTN தவறியதை சுட்டிக்காட்டுகிறது. இது, இந்த இணையதளத்தின் மூலம் கொள்முதல் செய்வதை ஒரு கூடுதல் பயன்முறையாக மட்டுமே மாற்றியது. மேற்கூறப்பட்ட அரசு ஆணை, சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு 'பொறுப்பு மையம்' ('Centre of responsibility') ஏதும் வழங்கவில்லை.

மின்கொள்முதல் முறையை பின்பற்றுதல் தொடர்பாக தமிழக அரசு உத்தரவுகளை (பிப்ரவரி 2016) பிறப்பித்துள்ளது என்றும், ஏப்ரல் 2023 முதல் மின்கொள்முதல் முறை கட்டாயமாக்கப்படும் என்றும் DoF தெரிவித்துள்ளது (டிசம்பர் 2022). இந்த பதில், நிறைவுக் கூட்டத்தின் போது அரசால் அங்கீகரிக்கப்பட்டது (பிப்ரவரி 2023).

2016 பிப்ரவரியில் மின்கொள்முதல் திட்டத்தை அமல்படுத்துவதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும், இதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. மின்கொள்முதல் செயல்முறையை அமல்படுத்துவதில், தரவு பகுப்பாய்வு மற்றும் மாதிரி கைமுறையான

பதிவுகளின் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட குறைபாடுகள் பின்வரும் அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 2.3 கொள்முதல் நிறுவனங்களால் மின்கொள்முதல் மென்பொருளின் பயன்பாடு

டிசம்பர் 2022 நிலவரப்படி, 2016–22ல் GePNICஐ பயன்படுத்திய 53 கொள்முதல் நிறுவனங்கள் மொத்தம் ₹2,15,060 கோடி மதிப்பில் 1.78 இலட்சம் டெண்டர்களை வெளியிட்டன. இருப்பினும், GePNIC பயன்படுத்திய 53 கொள்முதல் அலகுகளிலும் கூட, இம்மென்பொருளின் பயன்பாடு ஓரளவு மட்டுமே இருந்தது. தெரிவுசெய்யப்பட்ட ஆறு அலகுகளில், 2019–22ல், மொத்த கொள்முதலில் (₹5,959.70 கோடி) 21.06 விழுக்காடு (₹1,255.54 கோடி) மட்டுமே மின்கொள்முதல் இணையதளத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மாநிலத்தில் உள்ள கொள்முதல் நிறுவனங்கள் அனைத்து கொள்முதல்களையும் GePNIC மூலம் மேற்கொள்ள வேண்டும் என்ற குறிப்பிட்ட வழிமுறைகளை அரசு வெளியிடவில்லை. எனவே, மின்கொள்முதல் முறையை பின்பற்றிய கொள்முதல் நிறுவனங்கள், கைமுறை கொள்முதல், GeM (அரசு மின்-சந்தை இடம் (Government e–Market place)), MSTC போன்ற மாற்று கொள்முதல் முறைகளையும் பயன்படுத்தின. இதன் அடிப்படையில், தரவு பகுப்பாய்வு மற்றும் பதிவுகளின் ஆய்வு மூலம் கொள்முதல் செய்யும் நிறுவனங்களால் , மின்கொள்முதல் மென்பொருள் பயன்பாட்டின் நிலை மற்றும் செயல்திறனை தணிக்கை ஆய்வு செய்தது. இது தொடர்பான கண்டுபிடிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (அ) மென்பொருளின் டெண்டர் செயலாக்க நிலையை நிகழ் நிலைப்படுத்தாதது

**பத்தி 1.5ல்** விவரிக்கப்பட்டபடி, ஒப்பந்த வழங்குதல் (Award of Contract – AoC) என்ற நிலையை எட்டும் வரையான பல கட்ட செயல்முறையாக டெண்டர் செயல்பாடு GePNICல் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இணைய டெண்டர் செயல்பாட்டில் AoC நிலையினை அடைவது, GePNICன் முழுமையான மற்றும் பயனுள்ள பயன்பாட்டிற்கான ஒரு குறிகாட்டியாகும். 2016–22 வரையிலான ஆண்டுகளில் இந்த இணையதளத்தில் வெளியிடப்பட்ட டெண்டர்களில், 12 விழுக்காடு (1.78 இலட்சத்தில் 20,758) மட்டுமே AoC நிலையை எட்டியதாக தரவு பகுப்பாய்வில் கண்டறியப்பட்டது. தரவுகளின்படி, செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள டெண்டர்களின் விழுக்காடு, **விளக்கப்படம் 2.1**ல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

விளக்கப்படம் 2.1 : செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளிலான டெண்டர்களின் விழுக்காடு



அனைத்து டெண்டர்களும் அவற்றின் செல்லுபடியாகும் காலத்தை கடந்துவிட்டதால் அவற்றின் உண்மையான நிலை இணையதளத்தில் பிரதிபலிக்கப்படவில்லை என்பதை இது குறிக்கிறது. 1,260 மாதிரி டெண்டர்களின் கைமுறையான பதிவுகளை ஆய்வு செய்ததில், 643 இனங்களில் ஒப்பந்தம் வழங்கப்பட்ட போதிலும், 404 டெண்டர்கள் மட்டுமே இணையதளத்தில் AoC நிலை எட்டியுள்ளதை பிரதிபலிக்கிறது. ஒப்பந்தத்திற்கான ஆவணங்களும், அமைப்பால் உருவாக்கப்பட்ட (system generated) ஒப்பந்த விலை ஒப்பீட்டு அறிக்கையும் பதிவிறக்கம் செய்யப்பட்டவுடன், இணையதளத்தில் தொடர்புடைய நிலைகள் நிகழ்நிலை படுத்தப்படாமல் (without updating), AoC வரை டெண்டர்கள் கைமுறையாகவே செயலாக்கப்பட்டன.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது, இணையதளத்தை நிகழ்நிலை படுத்தாததற்கு, துறை சார் பயனர்களிடையே விழிப்புணர்வு இல்லாமை மற்றும் மனிதவளப் பற்றாக்குறையே காரணம் என பயனர் துறைகள் குறிப்பிட்டன (அக்டோபர் 2022). சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பணியிடமாற்றம்/ஓய்வு மற்றும் DSCகளின் செல்லுபடிக் காலம் முடிவடைந்ததால், மின்கொள்முதல் இணையதளத்தில் புதுப்பிக்க முடியவில்லை என்றும் கூறினர்.

நிறைவுக் கூட்டத்தில், ஏப்ரல் 2023 முதல் முன்மொழியப்பட்ட புதிய மென்பொருளில், இணைய வழியில் மட்டுமே ஒப்பந்தம் வழங்கப்படும் என்பதால் எதிர்காலத்தில் இச்சிக்கல் ஏற்படாது என்று அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023).

இவ்வாறு, கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், மின்கொள்முதல் முறைக்கு மாறியிருந்தாலும், இணைய வழியில் வெளியிடப்பட்ட பெரும்பாலான டெண்டர்ளை பொறுத்தவரை, அவற்றின் வெவ்வேறு கட்டங்களில், கைமுறையான செயலாக்கத்திற்கே மாறுகின்றன. இதன் விளைவாக, மின்கொள்முதல் இணையதளம் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது/பயனற்றதாயிற்று. இது டெண்டர் செயல்பாட்டின் நோக்கமான வெளிப்படைத்தன்மையை பாதித்தது. தெரிவுசெய்யப்பட்ட கொள்முதல் அலகுகளில் டெண்டர் ஆவணங்களை ஆய்வு செய்யும் போது, கைமுறையாக மதிப்பீடு செய்யப்பட்ட டெண்டர்களில் கண்டறியப்பட்ட முரண்பாடுகள் இந்த அறிக்கையின் **அத்தியாயம் IVல்** விவரிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) ஒப்பந்த சுருக்க அறிக்கைகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யாதது

**அட்டவணை 2.1**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, டெண்டர் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும், சுருக்க அறிக்கைகளை பதிவேற்றுவதற்கு மின்கொள்முதல் இணையதளம் வழிவகுக்கிறது.

அட்டவணை 2.1: பதிவேற்றப்பட வேண்டிய சுருக்க அறிக்கைகளின் விவரங்கள்

| நிலை | மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடு | பதிவேற்றப்பட வேண்டிய சுருக்கம் | சுருக்கத்தின் விவரங்கள் |
|---|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு | ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியில் திறக்கப்பட்டு அவற்றின் எண்ணிக்கை மற்றும் கட்டண விவரங்கள் சரிபார்க்கப்படும் | ஒப்பந்தப்புள்ளி திறப்பு சுருக்கம் | ஒப்பந்தப்புள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையான பிற விவரங்கள், ஒப்பந்தப்புள்ளிகளின் திறப்புக்கான நடவடிக்கைகள். |
| தொழில்நுட்ப மதிப்பீடு | டெண்டர் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அளவுகோல்களுக்கு எதிராக ஒப்பந்தப்புள்ளிகள் சரிபார்க்கப்படும். | தொழில்நுட்ப மதிப்பீட்டின் சுருக்கம் | தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட/நிராக ரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அதற்கான காரணங்களுடன், நிதி ஏலத்தைத் திறக்க தகுதியுடைய ஒப்பந்ததாரர்களின் பட்டியல். |
| நிதி ஏலத் திறப்பு | தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். | நிதி ஏல திறப்பு சுருக்கம் | நிதி ஏலத் திறப்பு, ஒப்பந்தப்புள்ளிகளின் திறப்புக்கான நடவடிக்கைகள் பற்றிய மொத்த சுருக்கம். |
| நிதி நிலை மதிப்பீடு | ஒப்பந்ததாரர்களின் அளவு பட்டியல் (BoQ) திறக்கப்பட்டு மென்பொருளில் உருவாக்கப்பட்ட BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்திலிருந்து L1 ஒப்பந்ததாரர் அடையாளம் காணப்படும். | நிதி மதிப்பீடு சுருக்கம் | பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய ஒப்பந்ததாரர்களின் நிலை (L1, L2 போன்றவை). |
| ஒப்பந்த வழங்கல் | L1 ஒப்பந்ததாரரை அடையாளம் கண்ட பிறகு, ஒப்பந்த மதிப்பு மற்றும் ஒப்பந்தத்தின் தேதி ஆகியவை உள்ளிடப்படும். | AoC சுருக்கம் | பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய ஏற்புக் கடிதம் (Letter of Acceptance - LoA)/பணி ஆணை |

(ஆதாரம்: அமைப்புத் தேவை விவரக்குறிப்பு)

மேலே உள்ள அனைத்து செயல்முறைகளும் பின்பற்றப்பட வேண்டும். இதனால் டெண்டரின் ஒவ்வொரு கட்டத்தின் விவரங்களும், வெளிப்படைத்தன்மை மற்றும் எதிர்கால குறிப்புக்காக, அனைத்து நேரங்களிலும் இணையதளத்தில் கிடைக்கக்கூடியதாக இருக்கும். டெண்டர் செயல்முறையின் முந்தைய கட்டத்தை முடித்து, தொடர்புடைய சுருக்க அறிக்கையைப் பதிவேற்றினால் மட்டுமே அதன் அடுத்த கட்டத்தை இயக்க முடியும்/அணுக முடியும். மதிப்பீட்டு சுருக்க அறிக்கைகளைப் பதிவேற்றுவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**(i) அட்டவணை 2.2ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, ஒப்பந்த செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளுக்கான சுருக்க அறிக்கைகள் பதிவேற்றப்படவில்லை என்று தரவு பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

அட்டவணை 2.2: சுருக்க அறிக்கைகளை இணையதளத்தில் பதிவேற்றாமை

| விவரங்கள் | இந்த கட்டத்தில் உள்ள மொத்த டெண்டர்களின் எண்ணிக்கை | சுருக்க அறிக்கைகள் இல்லாத டெண்டர்களின் எண்ணிக்கை ((2)ல் குறிப்பிட்டவைகளிலிருந்து) | இணக்கத்திற்கான விழுக்காடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொழில்நுட்ப ஏல திறப்பு சுருக்கம் | 1,26,459 | 29,742 | *76* |
| தொழில்நுட்ப மதிப்பீட்டின் சுருக்கம் | 88,721 | 33,867 | *62* |
| நிதி ஏல திறப்பு சுருக்கம் | 64,036 | 28,376 | *56* |
| நிதி மதிப்பீடு சுருக்கம் | 31,611 | 9,759 | *69* |
| AoC (ஒப்பந்தம் வழங்கல்) | 20,758 | 1,513 | *93* |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுத்தளம்)

உதாரணமாக, தெரிவுசெய்யப்பட்ட கொள்முதல் அலகுகளில் ஒன்றான, DRDA, கரூரில், 2016-21 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 858 ஒப்பந்த அறிவிப்புகளின் தரவு பகுப்பாய்வு, 781 ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக பதிவேற்றப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சுருக்கத்தில் குழு உறுப்பினர்களின் பட்டியல் மட்டுமே இருந்ததை வெளிப்படுத்தியது.

**(ii)** தெரிவுசெய்யப்பட்ட DRDAக்களின் மென்பொருள் தரவை தணிக்கை பகுப்பாய்வு செய்து, **அட்டவணை 2.3**ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாளிலிருந்து 'தொழில்நுட்ப மதிப்பீடு' மற்றும் 'விலை ஏலத் திறப்பு' (price–bid opening) ஆகியவற்றை முடிக்க எடுக்கப்பட்ட நாட்களின் விவரங்களைத் தொகுத்தது.

அட்டவணை 2.3: பல்வேறு கட்டங்களில் டெண்டர்களைச் செயல்படுத்தவும் பதிவேற்றவும் எடுக்கப்பட்ட நேரம்

| DRDA ன் கீழ் மாதிரி அலகுகள் | மொத்த டெண்டர்களின் எண்ணிக்கை | ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | டெண்டர் திறக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் தொழில்நுட்ப மதிப்பீட்டு சுருக்கம் பதிவேற்றப்பட்டது | டெண்டர் திறக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் தொழில்நுட்ப மதிப்பீட்டு சுருக்கம் பதிவேற்றப்பட்டது | டெண்டர் திறக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் விலை ஏலம் திறக்கப்பட்டது | டெண்டர் திறக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் விலை ஏலம் திறக்கப்பட்டது |
| கோயம்புத்தூர் | 970 | 400 | 212 | 113 | 0 |
| கரூர் | 781 | 591 | 333 | 141 | 15 |
| கிருஷ்ணகிரி | 1,457 | 1,015 | 909 | 133 | 5 |
| பெரம்பலூர் | 318 | 55 | 41 | 0 | 0 |
| சேலம் | 1,781 | 278 | 11 | 7 | 0 |
| தஞ்சாவூர் | 808 | 141 | 41 | 1 | 0 |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுத்தளம்)

**அட்டவணை 2.3**ல் இருந்து டெண்டருக்கான ஒரு கட்டத்தை முடிக்கும் முன் கருத்துச் சுருக்கங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டன என்பதும், டெண்டர் செயல்முறையின் சரியான நிலைகளை பிரதிபலிக்கவில்லை என்பதும் தெளிவாகிறது. ஏனெனில், 24 மணி நேரத்திற்குள், தொழில்நுட்ப மதிப்பீட்டு சுருக்கத்தை தயாரித்து பதிவேற்றி, அதைத் தொடர்ந்து, விலை ஏலத்தை திறப்பது சாத்தியமான காரியம் அல்ல. பணி ஒப்பந்தம் தொடர்பாக பெறப்பட்ட பெரும்பாலான ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடுவதற்கு நியாயமான கால அவகாசம் தேவைப்படும்.

இதை சுட்டிக்காட்டியதன் பேரில், DRDA, கிருஷ்ணகிரி குறிப்பை ஏற்றுக்கொண்டு, ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட பிறகு, தொழில்நுட்ப/நிதி மதிப்பீட்டு சுருக்கமாக ஒப்பந்த குழு உறுப்பினர்களின் பட்டியல் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட்டது என்றும், உண்மையில், ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த கைமுறையான ஆவணங்களின் அடிப்படையிலேயே தொழில்நுட்ப/நிதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது என்றும் கூறினார் (நவம்பர் 2022). தொழில்நுட்ப/நிதி மதிப்பீட்டு அறிக்கைகள் கைமுறை பதிவுகளில் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன என்றும் அவை இணையதளத்தில் பதிவேற்றப்படவில்லை என்றும் மேலும் பதிலளித்தார்.

மதிப்பீட்டு அறிக்கைகளை பதிவேற்றம் செய்யாதது, IT அமைப்பை முழுமையாகப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், டெண்டர் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையையும் கொள்கையையும் பாதித்து, கைமுறையான பதிவுகளையே சார்ந்திருப்பதை நிலைத்திருக்கச் செய்கிறது. மேலும், ஒப்பந்ததாரர்களால் அமைப்பிற்கு வெளியே சமர்ப்பிக்கப்பட்ட கைமுறையான ஆவணங்களின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடு செய்வது, திட்டமிடப்பட்ட மின்கொள்முதல் செயல்முறையை வேண்டுமென்றே தவிர்ப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

நிறைவுக் கூட்டத்தின் (பிப்ரவரி 2023) போது டெண்டர் நிபந்தனைகளுடன் பயனர் துறைகளைப் பழக்கப்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்படும் என்றும், அனைத்து துறைகளும் மின்கொள்முதல் முறையின் கீழ் கொண்டு வரப்படும் என்றும் அரசு கூறியது.

## 2.4 GePNICஐப் பயன்படுத்தும் பிற மாநில அரசுகளுடன் ஒப்பிடுகையில் தமிழக அரசால் வெளியிடப்பட்ட டெண்டர்களின் புதுப்பிப்பிற்கான நிலை

2020-21 மற்றும் 2021-22 ஆம் ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டும் 10,000 க்கும் மேற்பட்ட டெண்டர்களை வெளியிட்ட தமிழக மற்றும் பிற மாநில அரசுகளின், மின்கொள்முதல் இணையதளத்தில் AoC நிலை எட்டிய டெண்டர்களின் ஒப்பீடு, மின்கொள்முதலின் முகப்புப்பெட்டியில் (eProcurement Dashboard) பெறப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. (**இணைப்பு 2.2**). ஒப்பீட்டின் விளைவு **விளக்கப்படம் 2.2**ல் விவரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.2:** வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், மின்கொள்முதல் முகப்புப்பெட்டியின்படி ஒப்பந்தம் (contract) வழங்கப்பட்ட நேர்வுகளின் விழுக்காடு - 2020-2022




(ஆதாரம்: GePNICன் முகப்புப்பெட்டித் தரவு)

2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு, 15 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், மின்கொள்முதல் மென்பொருளில் வெளியிடப்பட்ட டெண்டர்களில், 11.27 விழுக்காட்டை மட்டுமே புதுப்பித்ததால், 15 மாநிலங்களில், தமிழ்நாடு 11வது இடத்தில் இருப்பதை **விளக்கப்படம் 2.2ல்** காணமுடிகிறது.

தொடங்கப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரும், மற்ற 15 மாநில அரசுகளுடன் ஒப்பிடும் போது, GePNICல் ஒப்பந்தம் வழங்குவது வரையிலான செயல்முறைகளின் கட்டவாரியான நிலைகளை புதுப்பிப்பதில், தமிழக அரசு 11வது இடத்தில் உள்ளது.

## 2.5 மின்கொள்முதல் மென்பொருளில் டேவணித் தொகை (Earnest Money Deposit) மேலாண்மை

டேவணித் தொகை (Earnest Money Deposit - EMD) என்பது ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கான விருப்பத்தைக் குறிக்கும் அவரது ஒப்பந்தப்புள்ளியுடன் ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டிய தொகையாகும். EMDஐ இணைய வழியாக பெற்றுக்கொள்ளவும், மனித தலையீடு இல்லாமல், தோல்வியுற்ற ஒப்பந்ததாரருக்கு உடனடியாக பணத்தைத் திரும்பவழங்கவும் மின்கொள்முதல் மென்பொருள் வசதியளிக்கிறது.

தமிழக அரசு மற்றும் பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India - SBI) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding), டெண்டர்க்காக இணையவழியில் பெறப்படும் டேவணித் தொகை (Earnest Money Deposit-EMD) மற்றும் பிணை வைப்புத் தொகை (Security Deposit-SD) ஆகியவற்றை செலுத்துவதற்காக, பலதரப்பட்ட கட்டண செலுத்த வசதி கொண்ட (Multi Option Payment System MOPS) ஒரு நுழைவாயிலை (payment gateway) வழங்கியது. இந்த நோக்கத்திற்காக ஒரு திரட்டல் வங்கி கணக்கு (Pooling Bank Account) (SBI, சென்னை) திறக்கப்பட்டது. இணைய வழியில் EMD மற்றும் SDயை வசூலிப்பதற்கும் திரும்ப செலுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு உத்தரவுகளை வழங்கியது (டிசம்பர் 2017).

ஒப்பந்ததாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கான அசல் நிதி ஆவணங்களை[1] (original financial instruments) அலுவலகத்தில் சமர்ப்பித்து, அதன் நகலை தங்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் மின்கொள்முதல் மென்பொருளில் பதிவேற்ற வேண்டும். தவறினால் பொறுப்பற்றதாக (unresponsive) கருதப்பட்டு நிராகரிக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட EMD, கொள்முதல் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் கணக்கில் செலுத்தப்பட்டு, தோல்வியுற்ற ஒப்பந்ததாரருக்குத் திருப்பியளிக்கப்படும்.

1.34 இலட்சம் டெண்டர்களில், 0.98 இலட்சம் டெண்டர்களுக்கு (73.13 விழுக்காடு), 2.17 இலட்சம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து EMDயாக மொத்தம் ₹3,328.49 கோடி அகல்நிலை முறையில் (offline) வசூலிக்கப்பட்டது என்று தரவு பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

இணைய முறையில் EMD வசூலிப்பது டிசம்பர் 2017ல் செயல்படுத்தப்பட்டிருந்தபோதிலும், அகல்நிலை முறையில் (offline mode) EMD வசூலிப்பதும், தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சரியான நேரத்தில் EMD-ஐத் திருப்பிச் செலுத்தாததும், இந்நிறுவனங்கள் பராமரிக்கும் வங்கிக் கணக்குகளில் அவற்றிற்கு சொந்தமில்லாத நிதி குவிப்பிற்கு வழிவகுக்கிறது.

மேலும், EMDயாக வசூலிக்கப்பட்ட ₹31.40 கோடியில், ₹16.93 கோடியை, சேலம் மற்றும் பெரம்பலூர் DRDAக்கள், நிர்வாகச் செலவுக்காக பயன்படுத்தியது கண்டறியப்பட்டது. பதிலில், நிதிப் பற்றாக்குறை காரணமாக, EMD கணக்கிலிருந்து பணம் தற்காலிக நடவடிக்கையாகப் பயன்படுத்தப்பட்டதாக DRDAக்கள் தெரிவித்தன (செப்டம்பர் 2022).

ஒப்பந்ததாரர்கள்/விற்பனையாளர்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்தி, பின்னர் திரும்ப அளிப்பதே EMD கணக்கின் நோக்கமாக இருப்பதாலும், துறைக்குச் சொந்தமில்லாத நிதியை பிற காரணங்களுக்காக பயன்படுத்துவது முறையாக இல்லாததாலும் பதில் ஏற்புடையதாக இல்லை.

நிறைவுக் கூட்டத்தில், இனி இணைய வழி EMD செலுத்தம் கட்டாயமாக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023). நிராகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் EMD-ஐ AoCக்குப் பிறகு 30வது நாளில் தானாகவே திருப்பிச் செலுத்தும் வகையில் புதிய மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளதால், EMD கணக்கிலிருந்து நிதியை பிற காரணங்களுக்காக திருப்புவது, எதிர்காலத்தில் சாத்தியமில்லை என்றும், EMDஐத் திரும்பச் செலுத்தாததற்கான காரணமும் பதிவு செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

## 2.6 மின்கொள்முதல் மென்பொருள் பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வை அளித்தல்

அரசாங்கத்தின் நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், (Additional Chief Secretary to Government, Finance Department)

[1] வரைவோலை, வங்கியாளர்கள் காசோலை மற்றும் நிலையான வைப்புத்தொகை

தலைமையில், துறைகளுக்கிடையேயான துணைக் குழுவை (sub-committee) அமைப்பதற்கான ஆணைகளை தமிழக அரசு வெளியிட்டது (பிப்ரவரி 2016). ஒவ்வொரு விற்பனையாளருக்கும் தனித்த அடையாள எண்ணை வழங்குவதற்கு, மின்கொள்முதல் இணையதளத்தில் விற்பனையாளர் விவரங்களை சரிபார்த்து பதிவு செய்வதற்கான பரிந்துரைகள் அளிப்பது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக இந்த துணைக்குழு அமைக்கப்பட்டது.

ஆயினும், துறைகளுக்கிடையேயான துணைக்குழு, ஜூன் 2016ல் ஒருமுறை மட்டுமே கூடி, விற்பனையாளரைப் பதிவுசெய்வதற்கான, மையப்படுத்தப்பட்ட திறந்த இணைய பணிசெயல்முறை மாதிரியை (centralised open online workflow model) மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு விற்பனையாளருக்கும் தனிப்பட்ட அடையாள எண் (Unique Identification Number) ஒதுக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்தது.

மின்–ஒப்பந்த செயல்முறை கையேடு (e-Bidding manual) தயாரித்தல் மற்றும் சென்னையிலுள்ள ELCOT/அண்ணா மேலாண்மை நிறுவனத்தில் (Anna Institute of Management), அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு, துறை வாரியாக பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் NIC இடம் ஒப்படைக்கப்பட்டது (பிப்ரவரி 2016). 2019-21 ஆம் ஆண்டில், கொள்முதல் நிறுவனங்களில் பதிவுசெய்யப்பட்ட 13,081 அதிகாரிகளில், 732 (6 விழுக்காடு) பேருக்கு 1-2 நாட்கள் பயிற்சியை NIC வழங்கியது.

தணிக்கை விசாரணைக்கு, மாதிரிப் பிரிவுகள், ஒப்பந்ததாரர்களிடம் மின்கொள்முதல் முறைக்கு மாறுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், தற்போதுள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களையும் (manual அமைப்பில் உள்ளவர்கள்) மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பதிலளித்தனர்.

ஒப்பந்ததாரர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவு செய்ய அவர்களை ஊக்குவிக்கவும் நிதித் துறை (DoF) அல்லது பயனர் துறைகளால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விற்பனையாளரைப் பதிவுசெய்வதற்கான திட்டமிடப்பட்ட மையப்படுத்தப்பட்ட திறந்த இணைய வழி பணிசெயல்முறை மாதிரி இன்னும் செயல்படுத்தப்படவில்லை. இது ஒப்பந்ததாரரின் (எண்ணிக்கையிலான) அடிப்படை விரிவாக்கத்திலும், விற்பனையாளர்களின் பங்குபெறுதலை ஊக்குவிப்பதிலும் தோல்வியைக் கண்டது.

போதுமான பயிற்சி இல்லாதது மற்றும் அதன் விளைவாக விழிப்புணர்வு இல்லாமை ஆகியவை நிலைவாரியான ஒப்பந்த செயல்முறையினை மின்கொள்முதல் இணையதளத்தில் புதுப்பிக்காததற்கு, மாதிரியாக தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களால் கூறப்பட்ட காரணங்களில் ஒன்றாகும். வருங்கால ஒப்பந்ததாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த DoF மற்றும் கொள்முதல் நிறுவனங்களால் பயனுள்ள நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததால், ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை

அதிகரிக்கவில்லை, மேலும் தகுந்த மலிவான விலை (competitive rates) பெறுவதற்கு, விற்பனையாளர் பங்கேற்பும் மேம்படுத்தப்படவில்லை.

நிறைவுக் கூட்டத்தில், இ–சேவை மையம் மூலம் ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது குடிநீர் வழங்கல் மற்றும் பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர்களின் பதிவு நடைபெற்று வருவதாகவும் அரசு கூறியது (பிப்ரவரி 2023). அற்ப காரணங்களுக்காக நிராகரிப்பு ஏற்படாது என்ற நம்பிக்கையை வழங்க ஒப்பந்ததாரர்களுக்கு நியாயமான தளம் உறுதி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. மேலும், அனைத்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கவும், வாராந்திர பயிற்சியைப் பற்றி விவாதிக்க காணொளிக் கருத்தரங்கு அமர்வுகளை (Video Conference sessions) நடத்தவும் திட்டமிட்டுள்ளதாகவும், அனைத்து செயலகத் துறைகள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு அகல்நிலை முறையில் (offline mode) ஒலி-ஒளிமுறை அமர்வில் (Audio-Video sessions) பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், NIC தெரிவித்துள்ளது. மேலும், எதிர்காலத்தில், சுயக் கற்றல் தொகுதிகளைச் (self–learning modules) சேர்ப்பதற்கான தணிக்கையின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டது. இது பல்வேறு வகையான பயனர்கள் எளிதாக அணுகுவதற்காக பல தகவல் தொழில்நுட்ப அமைப்புகளில் பின்பற்றப்படுகிறது.

## 2.7 போட்டியின் நிலை

மின்கொள்முதல் அமைப்பின் பிரதான நோக்கங்களில் ஒன்று போட்டியை அதிகரிப்பதாகும். **அட்டவணை 2.4ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 1.34 இலட்சம் டெண்டர்களின் தரவு பகுப்பாய்வு, ஒவ்வொரு டெண்டருக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து இருந்து 89 வரை இருந்தது.

**அட்டவணை 2.4: ஒவ்வொரு டெண்டருக்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் எண்ணிக்கையின் விவரங்கள்**

| பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் எண்ணிக்கை | டெண்டர்களின் எண்ணிக்கை | விழுக்காடு |
|---|---|---|
| ஒற்றை ஒப்பந்தப்புள்ளி | 22,338 | *16.62* |
| இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் | 61,533 | *45.77* |
| மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் | 23,542 | *17.51* |
| 3க்கும் மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | 27,016 | *20.10* |
| **மொத்தம்** | **1,34,429*** | |

* இதில் 17,212 டெண்டர்களில், தமிழகத்திற்கு வெளியில் இருந்து பங்கேற்ற ஒப்பந்ததாரர்களும் அடங்குவர்

(ஆதாரம்: மின்கொள்முதல் இணையதளத்தின் தரவுத்தளம்)

தரவுகளின் பகுப்பாய்வு, செல்லுபடியாகும் ஒப்பந்தப்புள்ளிகளைப் பெற்ற 1.34 இலட்சம் டெண்டர்களில், 0.84 இலட்சத்தில் (62.39 விழுக்காடு) ஒப்பந்ததாரர்களின் பங்கேற்பு குறைவாக இருப்பதைக் குறிக்கும் வகையில் ஒன்று அல்லது இரண்டு ஏலங்கள் மட்டுமே பெறப்பட்டன.

கைமுறையான டெண்டர் செயல்முறையுடன் ஒப்பிடும்போது, மின்கொள்முதல் முறையை அறிமுகப்படுத்திய பிறகு, ஒப்பந்ததாரர் பங்கேற்பு அதிகரித்திருக்கிறதா என்பதைக் கண்டறிய, மாதிரி அலகுகளில் இருந்து மின்கொள்முதல் முறைக்கு மாறுவதற்கு முன் கைமுறையான டெண்டர் செயல்முறையில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்களின் விவரங்கள் தணிக்கையால் கோரப்பட்டது. இருப்பினும், மாதிரி அலகுகள் தகவலை வழங்கவில்லை. எனவே, மின்கொள்முதல் முறையைச் செயல்படுத்துவதில் போட்டியின் அதிகரிப்பு/குறைவை தணிக்கை மூலம் சரிபார்க்க முடியவில்லை.

## 2.8 டெண்டர்களைச் செயலாக்குவதற்கு எடுக்கப்பட்ட நேரம்

டெண்டர் செயலாக்க நேரத்தைக் குறைப்பதும் மின்கொள்முதல் அமைப்பின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். வெளியிடப்பட்ட டெண்டர் அறிவிப்புகளில், 88 விழுக்காடு, (1.78 இலட்சத்தில் 1.57 இலட்சம்) ஒப்பந்தம் வழங்கப்பட்ட விவரங்களுடன் புதுப்பிக்கப்படவில்லை என்று தரவு பகுப்பாய்வு வெளிப்படுத்தியது. உரிய விவரங்கள் இல்லாததால், 1.57 இலட்சம் டெண்டர்களை செயலாக்க எடுக்கப்பட்ட, உண்மையான நேரத்தை தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை. ஆயினும், மீதமுள்ள 20,758 டெண்டர்களுக்கான தொடக்கம் முதல் ஒப்பந்தம் வழங்குதல் வரையான செயலாக்கத்தின் நேரத்தை பகுப்பாய்வு செய்தபோது, **அட்டவணை 2.5ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, 5,726 டெண்டர்களின் செயலாக்கக் காலமானது, அதன் செல்லுபடியாகும் காலத்தை, 3 முதல் 36 மாதங்களுக்கும் மேலாக தாண்டியது கண்டறியப்பட்டது:

**அட்டவணை 2.5 : டெண்டர்கள் செயலாக்குவதில் தாமதம்**

| வ.எண் | தாமதம்- மாதங்களில் | டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 3 மாதங்கள் வரை | 693 |
| 2 | 4 முதல் 6 மாதங்கள் | 2,425 |
| 3 | 7 முதல் 12 மாதங்கள் | 1,640 |
| 4 | 13 முதல் 24 மாதங்கள் | 714 |
| 5 | 25 முதல் 36 மாதங்கள் | 197 |
| 6 | 36 மாதங்களுக்கு மேல் | 57 |
| | **மொத்தம்** | **5,726** |

(ஆதாரம்: மின்கொள்முதல் இணையதளத்தின் தரவுத்தளம்)

5,726 டெண்டர்களில் காணப்பட்ட ஒன்பது நாட்கள் முதல் 1,552 நாட்கள் வரையிலான தாமதமானது, மின்கொள்முதல் முறையில், செயலாக்க நேரம் குறைக்கப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. மின்கொள்முதல் அமைப்பில், ஒப்பந்த செயலாக்கத்தில் அதிக தாமதம் ஏற்பட்ட நிகழ்வுகளை உடனடியாகச் சுட்டிக்காட்டுவதற்கான ஏற்பாடு இல்லை. தொழில்நுட்ப மதிப்பீடு, நிதி மதிப்பீடு மற்றும் ஒப்பந்தம் வழங்குதல் போன்ற முக்கியமான

நடவடிக்கைகள், அமைப்புக்கு வெளியே கைமுறையாக செய்யப்பட்டதே இதற்குக் காரணங்களாகக் கருதலாம்.

மின்கொள்முதல் முறை, 2008 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டாலும், தமிழக அரசால் கட்டாயமாக்கப்படாததால், 201 கொள்முதல் நிறுவனங்களில் 53 நிறுவனங்களால் மட்டுமே இது பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு, மின்கொள்முதல் இணையதளத்தை செயல்படுத்துவதிலும் பயன்படுத்துவதிலும் கவனிக்கப்பட்ட மொத்த குறைபாடுகளுக்கு காரணங்கள் (i) மாநிலத்தில் உள்ள அனைத்து கொள்முதல் நிறுவனங்களும் GePNIC மூலம் மட்டுமே பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதை அரசு கட்டாயமாக்கத் தவறியது மற்றும் (ii) மென்பொருளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் 'பொறுப்பு மையம்' (Centre of responsibility) இல்லாதது ஆகியன.

நிறைவுக் கூட்டத்தின் போது (பிப்ரவரி 2023), குறிப்பிட்ட காலவரம்பிற்குள் டெண்டர்களைச் செயல்படுத்த, ஒப்பந்ததாரர்கள் மற்றும் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் காலம் குறித்த எச்சரிக்கைகள் மென்பொருளில் இணைக்கப்படும் என்று அரசு கூறியது. ஒப்பந்தப்புள்ளி செல்லுபடி நீட்டிப்பதற்கான காரணங்களைக் கைப்பற்றுவதை கட்டாயமாக்குவதன் மூலம் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

1 ஏப்ரல், 2023 முதல் செயல்படுத்தப்படும் புதிய மென்பொருளில், அனைத்து தணிக்கைப் பரிந்துரைகளும் உள்ளடக்கப்படும் என்று அரசு உறுதியளித்தது. மேலும் (i) மதிப்பீடு தயாரிப்பு மற்றும் (ii) டிஜிட்டல் எம்-புக் (M-Book) ஆகியவற்றிற்கான விரிவான மென்பொருளை (comprehensive software) உருவாக்கும் பணி TNeGAக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அனைத்து துறைகளுக்கும் பொதுவான கட்டண அட்டவணையை உருவாக்க திட்டமிட்டுள்ளதாகவும் கூறியது.

## 2.9 முடிவுரை

மாநிலத்தில் உள்ள அனைத்து கொள்முதல் நிறுவனங்களும், மின்கொள்முதல் இணையதளம் மூலம் மட்டுமே பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்வதை அரசு கட்டாயமாக்கத் தவறிவிட்டது. செயல்படுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட போதிலும், மென்பொருளின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் 'பொறுப்பு மையம்' இல்லை. இதன் விளைவாக, மின்கொள்முதல் மென்பொருள் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது/ பயன்படுத்தப்படவில்லை, இது டெண்டர் செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மையின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை தோற்கடித்தது.

## 2.10 பரிந்துரைகள்

- முன்னுரிமை அடிப்படையில் தொழில்நுட்ப மற்றும் நடைமுறை குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அரசு ஒரு விரிவான தீர்வைக் கொண்டு வர வேண்டும்.

- அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளுக்கும், மின்கொள்முதல் மென்பொருளைப் பயன்படுத்த அனைத்து கொள்முதல் நிறுவனங்களுக்கும் தமிழக அரசு உத்தரவுகளை வழங்க வேண்டும்.
- கொள்முதல் செய்யும் நிறுவனங்கள், ஒவ்வொரு கட்டம் முடிந்தவுடன், இணையதளத்தில் உள்ள டெண்டர் நிலைகளை உடனடியாக புதுப்பிக்க வேண்டும். மேலும், இணையதளத்தில் உள்ள மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System - MIS) அறிக்கைகளைப் பயன்படுத்தி, துறையின் நிர்ணயிக்கப்பட்ட மைய அதிகாரிகளால் (Nodal Officers) கண்காணிக்கப்பட வேண்டும். கொள்முதல் நிறுவனங்களின் மைய அலுவலர்கள், முழுமையான மதிப்பீட்டு அறிக்கைகள் (Complete Evaluation Reports) அதன் வெவ்வேறு நிலைகளில், மென்பொருளில் தவறாமல் பதிவேற்றப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். மேலும் அனைத்து டெண்டர்களும், இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் அடிப்படையிலேயே செயலாக்கப்பட்டு இறுதி செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.
- EMD பிற காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நேர்வுகளில் பொறுப்பை அரசாங்கம் நிர்ணயித்து, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் வெளியீட்டாளரை விட உயர்நிலை அதிகாரியால் அகல்நிலை (offline) கட்டணங்கள் அங்கீகரிக்கப்படும் வகையில் ஒரு வழிமுறையை கொண்டு வர வேண்டும்.
- பதிவு செய்வதற்கான மையப்படுத்தப்பட்ட திறந்த இணைய பணிசெயல்முறை மாதிரியை செயல்படுத்துவதற்கான செயல்முறையை அரசு விரைவுபடுத்த வேண்டும்.
- கொள்முதல் நிறுவனங்களின் அதிகாரிகளால், மின்கொள்முதல் மென்பொருளை திறம்படப் பயன்படுத்துவதற்கான, கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தை அரசு உருவாக்கி செயல்படுத்த வேண்டும். உதவி மையம் மற்றும் முன் கலந்தாய்வுக்கூட்ட நடவடிக்கைகள் மூலம் ஒப்பந்ததாரர் பங்கேற்பில் அதிகரிப்பை அடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அத்தியாயம் III

# பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகள்

# அத்தியாயம் III

# பயன்பாட்டு மென்பொருளில் உள்ள குறைபாடுகள்

**TNTIT விதிகளில் காலவரம்பு தொடர்பான விதிமுறைகளை இணைக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்படவில்லை. மின்கொள்முதல் மென்பொருளில் பொருள் வாரியான EMD செலுத்த விவரங்களைக் கைப்பற்றுவதற்கும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமை அளிப்பதற்கும் எந்த ஏற்பாடும் இல்லை. பல ஒப்பந்ததாரர்கள் ஒரே விலையை மேற்கோள் காட்டிய சந்தர்ப்பங்களில் துறைகள் கைமுறை டெண்டர் செயலாக்கத்தை நாடின. பட்டியல் அளவுகளின் உருவாக்கத்திற்குப் பிறகு, L1 ஒப்பந்ததாரருடன் விலை குறைப்பிற்கான பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் அதே விலையை மேற்கோள் காட்டிய நேர்வுகளில் மனித தலையீடு தேவைப்படும் சூழ்நிலைகளுக்கும் அமைப்பில் ஏற்பாடுகள் இல்லை. கட்டாயப் புலங்களில் 'NULL', நகல்கள் மற்றும் தவறான மதிப்புகள் கவனிக்கப்பட்டன. TNTIT விதிகளுக்கு முரணாக ஒரே டெண்டரின் ஒப்பந்தப்புள்ளிகள் வெவ்வேறு தேதிகளில் மறைகுறியாக்கப்பட்டன (decrypted) . ஒரு நிறுவனத்தின் முக்கிய பொறுப்புகள் துறையின் மற்ற பயனர்களால் உருவாக்கப்பட்டதால், பயனர் துறைகளின் பொறுப்புக்களை உருவாக்கத்தில் முரண்பாடுகள் காணப்பட்டன.**

## 3.1 முன்னுரை

அரசு நிறுவனங்கள் பல்வேறு வகையான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்முதல் செய்கின்றன. மேலும், அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றன. பொதுக் கொள்முதலில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல் மற்றும் அகநிலைத் தன்மைக்கான வாய்ப்பைக் குறைக்கும் நோக்கில், தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை சட்டம், 1998 இயற்றப்பட்டது. பொருட்கள் கொள்முதல் பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் ஆலோசகர்களை பணியமர்த்துதல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள், 2000 (TNTIT விதிகள்) உருவாக்கப்பட்டது. TNTIT விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரம்பு மற்றும் வழிகாட்டு குறிப்புகள் (instructions) பயன்பாட்டு மென்பொருளில் இணைக்கப்பட்டுள்ளதா மற்றும் தரவின் ஒழுங்கமைவை உறுதிப்படுத்த தேவையான சரிபார்ப்பு கட்டுப்பாடுகள் அமைப்பில் உள்ளதா என்பதை தணிக்கை சரிபார்த்தது. இது சம்பந்தமாக கண்டறியப்பட்டவைகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 3.2 அலுவல் விதிகளை மென்பொருளில் இணைக்காமை

### 3.2.1 பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணைகளை மென்பொருளில் இணைக்காமை

***(i) 'டெண்டருக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி' மற்றும் 'ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிப்புக்கான இறுதி தேதி' ஆகியவற்றுக்கு இடையே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச நாட்களின் எண்ணிக்கை பின்பற்றப்படவில்லை***

TNTIT விதி 20, டெண்டருக்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கும் ஒப்பந்தப்புள்ளி சமர்பிப்பதற்கான கடைசி தேதிக்கும் இடையே, டெண்டர் மதிப்பின் அடிப்படையில், குறைந்தபட்ச நாட்களை நிர்ணயிக்கிறது. தரவு பகுப்பாய்வில், ஏப்ரல் 2016 மற்றும் மார்ச் 2022க்கு இடையில் வெளியிடப்பட்ட 1.22 இலட்சம் டெண்டர்களில், 'டெண்டருக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதி' மற்றும் 'ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிப்புக்கான இறுதி தேதி 'ஆகியவற்றுக்கு இடையேயான நாட்களின் எண்ணிக்கை, நிர்ணயிக்கப்பட்ட நாட்களை விட குறைவாக இருந்தது. இது, **அட்டவணை 3.1ல்** பட்டியலிடப்பட்டுள்ளது. துறை வாரியான விவரங்கள் **இணைப்பு 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: நிர்ணயிக்கப்பட்ட நாட்களை விட குறைவான கால அவகாசத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர் அறிவிப்புகள்**

| டெண்டரின் மதிப்பு | பரிந்துரைக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | நிர்ணயிக்கப்பட்ட நாட்களை விட குறைவான கால அவகாசத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர் அறிவிப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ₹2 கோடி வரை | 15 | 1,16,109 |
| ₹2 கோடிக்கு மேல் | 30 | 5,480 |
| **மொத்தம்** | | **1,21,589** |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுகளின் பகுப்பாய்வு)

***(ii) 'விளக்கம் கேட்புக்கான இறுதித் தேதி' மற்றும் 'ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி' ஆகியவற்றுக்கு இடையே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச நாட்களின் எண்ணிக்கை பின்பற்றப்படவில்லை***

TNTIT விதி 17 (2)ன் படி, டெண்டர் அறிவிப்பு வெளியிடப்படும் போது, விளக்கம் கேட்புக்கான கடைசித் தேதியானது டெண்டர் திறப்பதற்கு முன் குறைந்தது 48 மணிநேரமாக (2 நாட்கள்) இருக்க வேண்டும். தரவு பகுப்பாய்வின் போது, வெளியிடப்பட்ட 1.78 இலட்சம் டெண்டர்களில், 18,923 டெண்டர்களில் (10.64 விழுக்காடு) 'விளக்கம் கேட்புக்கான இறுதித் தேதி' மற்றும் 'ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி' ஆகியவற்றுக்கு இடையேயான நாட்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட இரண்டு நாட்களை விட குறைவாக இருந்தது.

எனவே, TNTIT விதிகளின்படி பரிந்துரைக்கப்பட்ட காலவரம்பை துறைகள் பின்பற்றவில்லை மற்றும் TNTIT விதிகளின் காலவரிசை தொடர்பான விதிகளை இணைக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்படவில்லை.

பணி செய்து முடிக்க வேண்டிய அவசரம் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பை விட குறைவான கால அவகாசம் கொண்டு, டெண்டர் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன என்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தஞ்சாவூர் பதிலளித்தது (டிசம்பர் 2022). தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் (Directorate of Technical Education-DoTE) மாதிரி நிறுவனங்கள், இது அவசரத் தேவை காரணமாக செய்யப்பட்டது என்றும் எதிர்காலத்தில் காலவரம்பு பின்பற்றப்படும் என்றும் பதிலளித்தன (நவம்பர் 2022).

டெண்டர் அறிவிப்பு வெளியீட்டு அதிகாரியை விட உயர்நிலையிலுள்ள பொருத்தமான அதிகாரியின் அங்கீகாரத்துடன் அவசரத் தேவைகளைக் கையாளவும், அத்தகைய நேர்வுகளின் விவரங்களைப் பதிவுசெய்து சேமிக்கவும் பயன்பாட்டு மென்பொருளில் எந்த ஏற்பாடும் இல்லை.

இது தொடர்பாக, மென்பொருளின் சமீபத்திய பதிப்பில் (recent version of the software), தனிப்பட்ட நிறுவனத்திற்கு எதிராக குறைந்தபட்ச நாட்களின் எண்ணிக்கை மேப் செய்யப்பட்டுள்ளது என்றும், குறுகிய ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு காலத்துடனான டெண்டர்களுக்கு, காரணத்தைக் கைப்பற்ற ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது என்றும் NIC பதிலளித்தது (டிசம்பர் 2022).

NICன் கூற்றினை தணிக்கை சரிபார்த்ததில் (டிசம்பர் 2022), தற்போதைய மென்பொருள் பதிப்பில் (பதிப்பு 1.09.16) இது செயல்முறைப்-படுத்தப்படவில்லை என்று கண்டறிந்ததால் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

நிறைவுக் கூட்டத்தின் போது (பிப்ரவரி 2023), புதிய மென்பொருளில், காலவரம்பு குறித்த சிக்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்றும், குறுகிய காலவரம்பு கொண்ட டெண்டர்களை நாடுவதற்கான காரணங்களைப் பதிவேற்றுவதற்கு ஏற்பாடு அளிக்கப்படும் என்றும் அரசு கூறியது.

### 3.2.2 பொருள் வாரியாக EMD செலுத்துவதற்கான ஏற்பாடு மென்பொருளில் இல்லாமை

பல பொருட்களைக் கொண்ட டெண்டர் அறிவிப்புகளில், ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு மட்டுமே மேற்கோள் காட்ட விரும்பினால், அந்த பொருட்களுக்கு மட்டுமே EMD செலுத்தப்பட வேண்டுமேயன்றி, முழு டெண்டருக்கும் செலுத்தபட வேண்டியதில்லை.

சேலத்தில் உள்ள பட்டு வளர்ப்பு இயக்குனரால் வெளியிடப்பட்ட (மார்ச் 2022) பல பொருட்களை உள்ளடக்கிய டெண்டர் அறிவிப்பை தணிக்கை ஆய்வு செய்தது, இதில் மொத்த டெண்டருக்காக நிர்ணயம் செய்யப்பட்ட EMD தொகை ₹23,700 ஆகும். ஒரு ஒப்பந்ததாரர் (லாரன்ஸ் மற்றும் மேயோ இந்தியா பிரைவேட் லிமிடெட்) ஒரே ஒரு பொருளுக்கே (நுண்ணோக்கி - Microscope) மேற்கோள் காட்டியிருந்தார், அதன் EMD மதிப்பு ₹900 ஆக இருந்தது.

குறிப்பிட்ட பொருளுக்கான EMD தொகையை உள்ளிடுவதற்கு மென்பொருள் அனுமதிக்காததால், ஒப்பந்ததாரர் ₹900க்கான வரைவோலையை EMD ஆகச் சமர்ப்பித்தாலும், 'ஆஃப்லைன் EMD கட்டண விவரங்கள் - தொகை ரூபாயில்' என்ற நெடுவரிசையில் அவர் EMD செலுத்திய மதிப்பாக ₹23,700 என உள்ளிட வேண்டி இருந்தது (அதாவது முழு டெண்டருக்கும் நிர்ணயம் செய்யப்பட்ட EMD).

இது தொடர்பாக, ஒப்பந்ததாரர்கள் பொருள் வாரியாக செலுத்திய EMDஐ உள்ளிடுவதற்கான ஏற்பாடு மென்பொருளில் இல்லை என்று பட்டு வளர்ப்பு இயக்குநர் கூறினார் (செப்டம்பர் 2022).

பொருள் வாரியான EMDஐ உள்ளீடு செய்ய ஏற்பாடு இல்லாததால், தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு மட்டுமே விலைப்புள்ளிகள் கொடுத்த ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட உண்மையான EMD பற்றிய தகவலை விட்டு மென்பொருளானது தவறான தகவலைக் கைப்பற்றி சேமித்து வைத்தது.

மென்பொருளில் இதற்கென ஒரு செயல்முறைத் தீர்வு உள்ளது என்றும், அதில் இணைய வழியில் டெண்டரை உருவாக்கும் போது EMD விலக்கு வழங்குவதற்கான அம்சத்தை செயல்படுத்துவதன் மூலம், டெண்டருக்கான மொத்த EMD மதிப்பை விட குறைவான தொகையை ஒப்பந்ததாரர் உள்ளிட மென்பொருள் அனுமதிக்கும் என்றும் NIC பதிலளித்தது (நவம்பர் 2022). அதன் மூலம், ஒப்பந்ததாரர், EMD விலக்குக்கான சான்றாவணத்தைப் பதிவேற்றுவதற்கான ஏற்பாட்டில், அவர் பங்கேற்கும் பொருட்களின் எண்ணிக்கை விவரிக்கும் அறிக்கையைப் பதிவேற்றலாம்.

EMD விலக்கு என்பது SSI/MSME சான்றிதழில் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பதால், பொருள் வாரியான EMD கட்டணத்தை EMD விலக்குடன் ஒப்பிட முடியாது. இதனால், பதில் ஏற்கத்தக்க தல்ல.

பொருள் வாரியாக EMD செலுத்துவதற்கு மின்கொள்முதல் மென்பொருளில் தனி ஒதுக்கீடு வழங்க NICக்கு அறிவுறுத்தப்படும் என்று அரசு பதிலளித்தது (பிப்ரவரி 2023ல் நடைபெற்ற நிறைவுக் கூட்டம்). இச்சிக்கல் தீர்க்கப்படும் என்று NIC தெரிவித்தது.

### 3.2.3 உள்நாட்டு நிறுவணங்களின் (domestic enterprises) கொள்முதலுக்கான முன்னுரிமை வழங்கலை கையாளும் முறைமையில் மென்பொருளில் பற்றாக்குறை

TNTIT விதி 30-Aன்படி, பொருட்கள் அல்லது சேவைகளை கொள்முதல் செய்யும் பட்சத்தில், கொள்முதல் செய்யும் நிறுவனமானது ஒன்றுக்கும் மேற்பட்ட வழங்குநர்களுக்கு/சேவை வழங்குநர்களுக்கு டெண்டர்களை வழங்க முடியுமேயானால், உள்நாட்டு நிறுவனங்களுக்கு (domestic enterprises) முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அவை குறைந்த டெண்டராக இல்லாத நிலையிலும், கொள்முதலில் உள்ள மொத்தத் தேவையில் உள்நாட்டு நிறுவனங்களுக்கென இருபத்தைந்து விழுக்காடு வரை வழங்கப்படலாம் என்பதை டெண்டர் அறிவிப்பு ஆவணம் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இது அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ள உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் அல்லது வழங்கப்படும் சேவைகளின் அளவிற்கு மட்டுமே பொருந்தும். இதற்காக, (அ) குறைந்த விலைக் கோரிய டெண்டர் உள்நாட்டு நிறுவனமாக இருக்கக்கூடாது, (ஆ) கணிசமான அளவில் பொறுப்புடைய மற்றும் தொழில்நுட்ப தகுதி பெற்ற உள்நாட்டு நிறுவனங்களில் மிகக் குறைந்த விலை கோரிய டெண்டருக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படும். (இ) குறைந்த

விலைக் கோரிய ஒப்பந்ததாரரின் டெண்டர் விலையையே இந்த உள்நாட்டு நிறுவனமும் ஏற்க வேண்டும்.

'முன்னுரிமை ஒப்பந்ததாரரை அனுமதி' என்ற ஒரு தேர்வுப்பெட்டி (checkbox) இருந்தபோதிலும், **(விளக்கப்படம் 3.1)** உள்நாட்டு நிறுவனங்களுக்கான கொள்முதல் முன்னுரிமைக்கான TNTIT விதி பிரிவு 30-Aஐப் பூர்த்தி செய்யவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

**விளக்கப்படம் 3.1: டெண்டர் பதிவேற்ற அமைப்பில் வழங்கப்பட்டுள்ள 'முன்னுரிமை ஒப்பந்ததாரரை அனுமதி' என்ற தேர்வுப்பெட்டி**




(ஆதாரம்: மின்கொள்முதல் பயனர் கையேடு)

TNTIT விதி பிரிவு 30-அன் படி உள்நாட்டு நிறுவனங்களுக்கான முன்னுரிமையை கையாள தற்போதைய அமைப்பு சீரமைக்கப்பட்டு வருவதாகவும், மற்றும் அதன் உருவாக்கம் நடைபெற்று வருவதாகவும் NIC பதிலளித்தது (நவம்பர் 2022). இந்த அம்சம் இணைக்கப்படும் வரை, முன்னுரிமை ஒப்பந்ததாரர்கள் தொடர்பான டெண்டர்களை, மின்கொள்முதல் இணையதளத்திற்கு வெளியே மட்டுமே, துறைகளால் செயலாக்க முடியும் என்பதை தணிக்கை கண்டறிந்தது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), புதிய மென்பொருளில் இந்த சிக்கல் தீர்க்கப்பட்டதாக NIC கூறியது.

### 3.2.4 விகித ஒப்பந்த டெண்டர்களில், கொள்முதல் மதிப்பைக் பதிவேற்றுவதற்கான ஏற்பாடு அமைப்பில் இல்லாமை

TNTIT விதி 31-அன் படி, நிலையான விலை ஒப்பந்தம் (Fixed Rate Contract), திறந்த ஒப்பந்த டெண்டர் போன்ற செயல்முறையின் மூலம் மேற்கொள்ளப்படும். ஒப்பந்த ஏற்பு குழு (Tender Acceptance Committee TAC) மிகக் குறைந்த ஒப்பந்ததாரருடன் மேலும் குறைப்பு செய்யும்படி பேச்சுவார்த்தை நடத்தி, மற்றும்/அல்லது நிலவும் சந்தை விகிதம் மற்றும் முந்தைய காலகட்டத்தின் விகிதங்கள் போன்ற பிற தொடர்புடையவற்றுடன் ஒப்பிடுகிறது. இதன் அடிப்படையில், நிலையான

விகிதமாக, பொருத்தமான விகிதத்தை நிர்ணயித்து அறிவிக்கிறது. நிலையான விகிதத்தை ஏற்கும் அனைத்து தகுதியான வழங்குநர்களும் சேவைகள் அல்லது பொருட்களை வழங்குவதற்காக கொள்முதல் நிறுவனத்தால் பட்டியலிடப்பட வேண்டும். டெண்டரை இறுதி செய்து ஒப்பந்தத்தை வழங்கிய (AoC) பிறகு தேவையின் அடிப்படையில் ஆர்டர்கள் வழங்கப்படும்.

விகித ஒப்பந்த காலத்தில் வழங்கப்பட்ட கொள்முதல் ஆணை (கள்) பற்றிய விவரங்களை உள்ளீடு செய்ய மென்பொருளில் எந்த ஏற்பாடும் இல்லை என்பதை தணிக்கை கவனித்தது. எனவே, ஒரு விகித ஒப்பந்த டெண்டரின் இறுதி செய்யப்பட்ட விகித மதிப்பு மட்டுமே இணையதளத்தில் காட்டப்படுமேயன்றி, விகித ஒப்பந்த காலத்தில் செய்யப்பட்ட கொள்முதலின் மதிப்பு காட்டப்படமாட்டாது.

இது சுட்டிக்காட்டப்பட்டபொழுது, மேற்கூறப்பட்டதற்கான வழிவகை அமைப்பில் இல்லை என்றும், இந்தப் சிக்கல் நிதித் துறையுடன் விவாதிக்கப்படும் என்றும் NIC பதிலளித்தது (நவம்பர் 2022).

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), NIC உடன் கலந்தாலோசிக்கப்பட்டு இந்த அம்சம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அரசு கூறியது.

### 3.2.5 கடவுச்சொல் கொள்கையை கட்டாயப்படுத்த மென்பொருளில் ஏற்பாடு இல்லாமை

இந்திய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (Ministry of Electronics and Information Technology MeitY) கடவுச்சொல் கொள்கையின்படி, அனைத்து பயனர் நிலை கடவுச்சொற்களும் (எ.கா. மின்னஞ்சல், இணையம், மேசைக் கணினி போன்றவை) அவ்வப்போது மாற்றப்பட வேண்டும் (அதாவது குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை). பயனர்கள் முந்தைய கடவுச்சொற்களை மீண்டும் பயன்படுத்த முடியாது.

மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவுசெய்த பிறகு, பயனர்கள் பயனர் ID, கடவுச்சொல் மற்றும் டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழ் (Digital Signature Certificate (DSC)) ஆகியவற்றைப் பயன்படுத்தி உள்நுழையலாம். பயனர்களுக்கு மட்டுமே தெரியும் வகையில் கடவுச்சொற்கள் தரவுத்தள மட்டத்தில் குறியாக்கம் (encrypted) செய்யப்படுகறது. தரவு பகுப்பாய்வில் பின்வருவன தணிக்கையில் கண்டறியப்பட்டன:

- 31 மார்ச் 2022 நிலவரப்படி, 68,484 பயனர் பதிவுகளில் 62,274ல், 90 நாட்களுக்கு மேல் கடவுச்சொல் மாற்றப்படவில்லை.
- இவற்றில், 17,233 நேர்வுகளில், சமீபத்திய உள்நுழைவு தேதியானது கடைசியாக கடவுச்சொல்லை மாற்றிய தேதியிலிருந்து 90 நாட்களுக்கும் கூடுதலாக இருந்தது.

கடவுச்சொல் கொள்கையை கட்டாயப்படுத்தாததால், அங்கீகரிக்கப்படாத நபர்களால் தவறாகப் பயன்படுத்தவும் தரவு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தக்கூடும்.

மின்கொள்முதல் இணையதளம் உள்நுழைவிற்கு இரண்டு நிலை அங்கீகாரத்தை (two factor authentication) (கடவுச்சொல் மற்றும் DSC) செயல்படுத்தியுள்ளது என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). DSC, இரண்டாவது அங்கீகார நிலையாக இருப்பதால், அங்கீகரிக்கப்படாத பயனர்களின் உள்நுழைவை அனுமதிக்காது.

DSC இல்லாத துறை சார்ந்த பயனர்கள், டெண்டர் செயல்முறை முடிவதற்கு முன்பே, மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System (MIS)) அறிக்கைகள் அம்சத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பதிவிறக்கம் செய்ய முடியும் என்பதால் பதில் ஏற்கத்தக்கதல்ல. இது செயல்பாட்டின் ரகசியத்தன்மையை பாதிக்கிறது. கடவுச்சொல் அமைப்பில் மாற்றத்திற்கு, 90 நாட்கள் கால இடைவெளியில் ஒரு எச்சரிக்கை தானகவே காட்டப்பட வேண்டும்.

நிறைவுக் கூட்டத்தின் போது (பிப்ரவரி 2023), புதிய இணையதளத்தில் கடவுச்சொல் கொள்கை செயல்படுத்தப்படும் என்றும், அறிக்கைகள் தொகுதிக்கும் (Reports Module) தற்போது இரண்டு நிலை அங்கீகாரம் பயன்படுத்தப்படுகிறது என்றும் அரசு பதிலளித்தது.

### 3.2.6 மென்பொருளில் தேவையான அம்சங்கள் இல்லாமை

TNTIT விதி 29(3) ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்துவதை விழைகிறது. மேலும், விதி 29(4) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒரே விலைக்கு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திருந்தால், குறைந்த விலையை மேற்கோள் காட்டிய ஒப்பந்ததாரரைக் கண்டறிவதற்கான வழிமுறையை விவரிக்கிறது.

L1 ஒப்பந்ததாரர் பற்றிய தகவல்களைக் கொண்ட BoQ ஒப்பீட்டு விளக்கப்படம், நிதி மதிப்பீட்டு கட்டத்தில் உருவாக்கப்படுகிறது. ஆயினும், சில சூழ்நிலைகளில் அதாவது. (அ) ஒரே விலையை ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் மேற்கோள் காட்டியபோது, (ஆ) L1 உடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது மற்றும் (இ) ஒப்பந்தப்புள்ளி விகிதங்களை, பணி ஒப்பந்தங்களுக்காக (work tendering) (கட்டிடங்கள் மற்றும் சாலைகள்) துறைகளால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுவது போன்றவற்றில் L1 மற்றும் AoCஐ இறுதி செய்வதற்கு மனித தலையீடு பயன்படுத்தப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது. இதனால், மென்பொருளால் உருவாக்கப்பட்ட BoQ பயனற்றதாயிற்று.

கோயம்புத்தூரில் உள்ள DRDAல், BoQ ஒப்பீட்டு விளக்கப்படம் மின்கொள்முதல் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு, மதிப்பீடுகளுடன் கைமுறையாக ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. மேலும் விலைக் குறைப்புகளுக்கு L1 ஒப்பந்ததாரருடன் துறை பேச்சுவார்த்தை நடத்தியது. பேச்சுவார்த்தை மூலம் குறைக்கப்பட்ட கட்டணங்கள் Excel தாளில், கைமுறையாக உள்ளிடப்பட்டு டெண்டரை இறுதி செய்ய பயன்படுத்தப்பட்டது. ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களால் மேற்கோள் காட்டப்பட்ட ஒரே விலையின் நேர்வுகளைக் கையாள மென்பொருளில் எந்த ஏற்பாடும் இல்லை என்று DRDA, சேலம் தெரிவித்தார் (நவம்பர் 2022).

ஒரே விலையை மேற்கோள் காட்டிய ஒப்பந்ததாரர்களில் L1 ஒப்பந்ததாரராக முதலில் மதிப்பை மேற்கோள் காட்டியவரை (மில்லி விநாடிகள் வரை) அமைப்பு அடையாளம் கண்டு கொள்கிறது என்றும் பேச்சுவார்த்தைக்கான தொகுதி உருவாக்கத்தில் உள்ளது என்றும் NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). மேலும், ஒப்பந்ததாரர்களின் விலை விகிதங்களை ஒப்பந்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுவதற்கான ஏற்பாடு இல்லை என்பதை NIC ஏற்றுக்கொண்டது. TNTIT விதிகளின்படி தமிழ்நாட்டிற்கான மின்கொள்முதல் இணையதளம் மறுவடிவமைப்பு செய்யப்பட்டு 2023-24 நிதியாண்டு முதல் தேவையான அம்சங்களுடன் செயலாக்கப்படும் என்று NIC மேலும் கூறியது.

NICன் பதில் ஏற்கத்தக்கது அல்ல, ஏனெனில் ஒரே விலையை மேற்கோள் காட்டிய ஏலதாரர்களிடையே யார் முதலில் மதிப்பை மேற்கோள் காட்டியது என்பதன் அடிப்படையில் மட்டுமே L1 ஐ அடையாளம் காண்பது என்பது TNTIT விதிகளுக்கு முரணாகும். அத்தியாவசிய ஏற்பாடுகள் இல்லாதது இம்மென்பொருளின் செயல்திறனை பாதிக்கிறது.

நிறைவு கூட்டத்தில் (பிப்ரவரி 2023), மேலே குறிப்பிட்டுள்ள (அ) மற்றும் (ஆ) சூழ்நிலைகளுக்கான ஏற்பாடுகள் மென்பொருளில் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏல விகிதங்களை மதிப்பீடுகளுடன் ஒப்பிடுவதற்கான ஏற்பாடுகள், நிதித் துறை மற்றும் கொள்முதல் நிறுவனங்களுடனான கலந்துரையாடலுக்குப் பிறகு இணைக்கப்படும் என்றும் NIC கூறியது.

## 3.3 மென்பொருளில் போதிய கட்டுப்பாடுகள் இல்லாமை

தரவு ஒருங்கமைவை உறுதி செய்வதற்காக, அமைப்பில் பொருத்தமான கட்டுப்பாடுகள் அதாவது உள்ளீடு கட்டுப்பாடு (input control), சரிபார்ப்பு கட்டுப்பாடு (validation control) போன்றவை இணைக்கப்பட வேண்டும். தரவுத்தளத்தில் உள்ள பிழைகளை சரிபார்க்க தேவையான கட்டுப்பாடுகள் பயன்பாட்டு மென்பொருளில் உள்ளதா என தணிக்கையில் சரிபார்க்கப்பட்டது.

*உள்ளீட்டு கட்டுப்பாடுகள் இல்லாமை*

### 3.3.1 டெண்டர் விவரங்கள் உள்ளிடப்படவில்லை

**(i) EMD** மதிப்பு **'பூஜ்ஜியம்'** என உள்ளிடப்பட்டுள்ளது**:** TNTIT விதி 14, "டெண்டர் ஆவணங்கள், விதிவிலக்கு இல்லாமல் அனைத்து ஒப்பந்தங்களும் கொள்முதல் மதிப்பில் ஒரு சதவீதத்திற்கு மிகாமல் ஒரு தொகையை டேவணித் தொகையாக (Earnest Money Deposit - EMD) செலுத்த வேண்டும் என்று கூறுகிறது. இத்தொகை, மின்னணு முறையில் பணம் செலுத்துதலாகவோ, வரையோலையாகவோ, வங்கியாளரின் காசோலையாகவோ, குறிப்பிட்ட சிறு சேமிப்பு ஆவணங்களாகவோ அல்லது கொள்முதல் நிறுவனத்தினால் பொருத்தமானதாகக் கருதப்படும் வகையில் பரிந்துரைக்கப்பட்ட படிவத்திலான திரும்பப்பெற முடியாத வங்கி உத்தரவாதமாகவோ பெறப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் EMD இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு டெண்டரும்

நிராகரிக்கப்படும் என்பதை டெண்டர் ஆவணங்கள் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

ஆயினும், EMDக்கு 'பூஜ்ஜியமற்ற' மதிப்புகள் மட்டுமே அனுமதிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான எந்த ஏற்பாடும் மென்பொருளில் இல்லை, இதன் விளைவாக, 2016-22ல் வெளியிடப்பட்ட 1.78 இலட்சம் டெண்டர்களுக்கான அழைப்புகளில் 17,082 டெண்டர்களின் தரவு - EMD மதிப்பை 'பூஜ்ஜியம்' எனக் காட்டுகிறது.

**(ii) 'பூஜ்ஜியம்' மதிப்பு கொண்ட டெண்டர்கள்:** GePNIC இணைய பயன்பாட்டு மென்பொருளின் முன்நிலைத் திரையில், டெண்டர் மதிப்பு வழங்கப்பட வேண்டிய கட்டாயத் தகவலாகக் குறிக்கப்படுகிறது. 'பொது களத்தில் டெண்டர் மதிப்பைக் காட்டு' என்பதில், 'ஆம்' அல்லது 'இல்லை' விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பொது களத்தில் டெண்டர் மதிப்பைக் காட்டவோ அல்லது மறைக்கவோ துறைக்கு வசதி உள்ளது (**விளக்கப்படம் 3.2**). 'இல்லை' என்பதைத் தேர்ந்தெடுக்கும்போது, டெண்டர் மதிப்பு ஏற்கப்பட்டு தரவுத்தளத்தில் சேமிக்கப்பட்டிருந்தாலும், அது பொது களத்தில் காணப்படமாட்டாது.

**விளக்கப்படம் 3.2: பொது களத்தில் டெண்டர் மதிப்பைக் காண்பிப்பதற்கான ஏற்பாடு**




(ஆதாரம்: மின்கொள்முதல் முறையின் பயனர் கையேடு)

வெளியிடப்படும் நேரத்தில் உள்ள உள்ளீடுகளின் அடிப்படையில் கொள்முதல் தொடர்பான தகவல்களை அதாவது ஆண்டு வாரியான டெண்டர்களின் எண்ணிக்கை மற்றும் வெளியிடப்பட்ட டெண்டர்களின் மொத்த மதிப்பு ஆகியவற்றைக் காண்பிக்கும் மின்கொள்முதல் முகப்புப்பெட்டியினை (eProcurement dashboard) இம்மென்பொருள் வழங்குகிறது.

வெளியிடப்பட்ட 1.78 இலட்சம் டெண்டர்களுள், 17,036 டெண்டர்களில் 'பூஜ்ஜியம்' என்ற டெண்டர் மதிப்பு இருந்ததாக தரவு பகுப்பாய்வு தெரிவிக்கிறது. இது மின்கொள்முதல் முகப்புப்பெட்டியில் உள்ள இணையதளத்தில் வெளியிடப்பட்ட டெண்டர் அழைப்புகளின் மொத்த மதிப்பினை தவறாக விவரிப்பதாக உள்ளது.

பொது களத்தில் பார்க்க முடியாதவாறு டெண்டர் மதிப்பு, 'இல்லை' என்ற விருப்பத்துடன் எதிர்காலத்தில் பதிவேற்றப்படும் என்று தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தின் (Directorate of Technical Education) மாதிரி நிறுவனங்கள் பதிலளித்தன (அக்டோபர் 2022). நிதி மேற்கோள் (financial quote) அழைக்கப்படும் நேர்வுகளில் அதாவது 'முன்மொழிவுக்கான கோரிக்கைகள்/ஆர்வம் தெரிவிப்புக்கான கோரிக்கைகள்' ('Request for Proposal/Expression of Interest') ஆகிய டெண்டர்களின் முதல் கட்டத்தில் டெண்டரின் மதிப்பு பூஜ்ஜியமாக இருக்கலாம் என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022).

டெண்டர் வகையின் அடிப்படையில் டெண்டர் மதிப்பு/EMD மதிப்பைப் பெறுவதற்கு அமைப்பில் எந்த ஏற்பாடும் இல்லாததால், பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட நேர்வுகள், 'முன்மொழிவுக்கான கோரிக்கை/ஆர்வத்தை வெளிப்படுத்துதல்' போன்ற அழைப்புகளுடன் தொடர்புடையதாக இல்லை. இது டெண்டர் மதிப்புக்கான உள்ளீட்டுக் கட்டுப்பாடுகள் இல்லாததைக் குறிக்கும்.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), 'பூஜ்ஜிய' மதிப்புகளை அனுமதிக்காத வகையில் மென்பொருள் சரி செய்யப்பட்டுள்ளதாக NIC கூறியது.

### 3.3.2 கட்டாய புலங்களில் உள்ளீட்டு கட்டுப்பாடுகள் இல்லாமை

பதிவுசெய்யப்பட்ட பயனர் தரவுகளின் தணிக்கை ஆய்வில், 1 ஏப்ரல் 2022 நிலவரப்படி 45,000 DSC பதிவு செய்யப்பட்ட பயனர்கள் இருப்பது தெரியவந்தது. இவர்களில் 31,728 பயனர்கள் 2016-22ல் பதிவு செய்யப்பட்டுள்ளனர். கட்டாய புலங்களில் காணப்படும் முரண்பாடுகள் **அட்டவணை 3.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: கட்டாயத் புலங்களில் உள்ள முரண்பாடுகள்**

| கட்டாய புலங்களில் உள்ள முரண்பாட்டின் தன்மை | முரண்பாடு கண்டறியப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | தணிக்கை காலத்தில், பதிவு செய்யப்பட்டவைகளில், முரண்பாடுகள் காணப்பட்ட இனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தவறான கைபேசி எண்கள் | 837 பயனர்கள்<br>(479 பயனர்கள் '9999999999' என்ற எண்ணையும் மற்றும் 139 பயனர்கள் '0000000000' என்ற எண்ணையும் கொண்டிருந்தனர்) | 46 பயனர்கள் |
| நகல் கைபேசி எண்கள் | 13,788 பயனர்கள்<br>(146 பயனர்கள் '9842815073' கொண்டிருந்தன) | 8,322 பயனர்கள் |
| ஒரே மாற்று மின்னஞ்சல் IDயுடன் வெவ்வேறு பயனர்கள் | 5,367 பயனர்கள்<br>223 பயனர்கள் 'bhaaskaar@gmail.com' என்ற மாற்று மின்னஞ்சல் ID கொண்டிருந்தனர். | 3,607 பயனர்கள்<br>209 பயனர்கள் 'bhaaskaar@gmail.com' என்ற மாற்று மின்னஞ்சல் ID கொண்டிருந்தனர் |

| கட்டாய புலங்களில் உள்ள முரண்பாட்டின் தன்மை | முரண்பாடு கண்டறியப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | தணிக்கை காலத்தில், பதிவு செய்யப்பட்டவைகளில், முரண்பாடுகள் காணப்பட்ட இனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நிரந்தர கணக்கு எண் (Permanent Account Number PAN) இல்லாத பயனர்கள் | 88 பயனர்கள் | 80 பயனர்கள் |
| ஒரே PAN கொண்ட வெவ்வேறு பயனர்கள் | 15,812 பயனர்கள் (வணிக நிறுவன/ ஒப்பந்ததாரர்களுக்கான இணைய பதிவு படிவத்தில் மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'AESTG2458A', - எனக் கொண்டிருந்த 405 பயனர்கள்; 'TEMPZ9999Z' - 301 பயனர்கள்; 'ACUPK7945G' - 25 பயனர்கள்) | 9,895 பயனர்கள் (வணிக நிறுவன/ ஒப்பந்ததாரர்களுக்கான இணைய பதிவு படிவத்தில் மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'AESTG2458A', எனக் கொண்டிருந்த - 87 பயனர்கள்; 'TEMPZ9999Z' - 126 பயனர்கள்; 'ACUPK7945G' - 24 பயனர்கள்) |
| கட்டாய புலங்களில் 'NULL' மதிப்புகள் | பதிவு எண், நகரம் மற்றும் அஞ்சல் குறியீடு மற்றும் மாநிலத்தில் 'NULL' மதிப்புகளைக் கொண்ட 10,300 பயனர்கள் | 'மாநிலம்' புலத்தில் 'NULL' மதிப்புகளைக் கொண்ட 80 பயனர்கள் |

(ஆதாரம்: பதிவுசெய்யப்பட்ட பயனர் தரவுகளின் பகுப்பாய்வு)

மேலே உள்ள முரண்பாடுகள், மென்பொருளில் தரவு ஒருங்கிணைப்பை பாதிக்கும் வகையில், கட்டாயப் புலங்களில் உள்ளீட்டுக் கட்டுப்பாடு இல்லாததைச் சுட்டிக்காட்டுகின்றன.

PAN கட்டாயம் என்பதை உறுதிப்படுத்த, தேவையான சரிபார்ப்புகள் மென்பொருளில் இணைக்கப்படும் என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). பல PANகளைப் பொறுத்தவரை, அலுவலகத் தேவையாக ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த பல பயனர்கள் இவ்வமைப்பில் ஒரே PAN எண்ணைக் கொண்டிருக்கலாம் என்று NIC கூறியது. NULL மதிப்புகளைப் பொறுத்தவரை, இந்த பதிவுகள் 2015க்கு முந்தைய காலகட்டத்துடன் தொடர்புடையது என்றும் தேவையான உள்ளீட்டு கட்டுப்பாடுகள் பின்னர் இணைக்கப்பட்டுள்ளன என்றும் NIC கூறியது (டிசம்பர் 2022).

சில நேர்வுகளில் நகல்கள் அதிகமாக இருப்பதால், ஒரே நிறுவனத்தின் பயனர்களின் எண்ணிக்கையுடன் தொடர்புடையதாக இருக்க சாத்தியம் இல்லை. இதனால், பதில் ஏற்புடையதாக இல்லை. தவிர, நிறுவனத்தின் பெயர்கள், பதிவு செய்யப்பட்ட முகவரிகள் மற்றும் பெருநிறுவன முகவரிகள் வேறுபடுகின்றன. NIC ஆல் 'NULL' மதிப்புகள் சரிபார்க்கப்பட்டன என்று அளிக்கப்பட்ட பதில் ஆய்வு செய்யப்பட்டதில், 2015ஆம் ஆண்டிற்குப் பிறகும் கூட மாநிலத்திற்கான புலத்தில் 'NULL' உள்ளீடுகள் இருப்பது தெரியவந்தது மற்றும் இது சரிப்பார்ப்பு கட்டுப்பாடு இல்லாததைக் குறிக்கிறது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023) இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்படும் என்றும், புதிய மென்பொருளில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி உடனான சரிபார்ப்பு கட்டாயமாக்கப்படும் என்றும் NIC கூறியது.

*செயலாக்கம்/சரிபார்ப்பு கட்டுப்பாடுகள் இல்லாமை*

### 3.3.3 டெண்டரின் ஒரே பாக்கெட்டுக்கான வெவ்வேறு மறைகுறியாக்க தேதிகள்

மின்கொள்முதல் மென்பொருளில், துறைசார்ந்த பயனர் தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலங்களைத் திறப்பதற்கு உள்நுழைவு ID ஆக சரியான மின்னஞ்சல் ID, செல்லத்தக்க கடவுச்சொல் மற்றும் டிஜிட்டல் கையொப்பச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும். டெண்டர் IDஐ உள்ளிடுவதன் மூலம் திறக்கப்பட வேண்டிய டெண்டரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்குப் பிறகு, 'Decrypt' ஐக் கிளிக் செய்தால், பாக்கெட் பெயர், IDகள் பட்டியலாகக் காட்டப்படும். மீண்டும், 'தொடரவும்' பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம், பட்டியலில் உள்ள மறைகுறியாக்க நிலையுடன் 'மறைகுறியாக்கம் வெற்றிகரமாக முடிந்தது' ('Decryption completed successfully') என்ற செய்தி காட்டப்படும். மறைகுறியாக்க செயல்முறை **விளக்கப்படம் 3.3ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.3: மறைகுறியாக்க செயல்முறை**




தரவு பகுப்பாய்வில், 1,220 நேர்வுகளில்[1] டெண்டரின் ஒரே பேக்கெட் IDக்கான மறைகுறியாக்க தேதி வேறுபடுகிறது, அதாவது, டெண்டரின் ஏலங்கள் வெவ்வேறு தேதிகளில் மறைகுறியாக்கப்பட்டன. இந்த நேர்வுகளில் 2, 3 மற்றும் 5 வெவ்வேறு மறைகுறியாக்க தேதிகள் ஒரு நாள் வித்தியாசத்தில் இருந்து பல நாட்கள் வரை இருந்தன. இரண்டு விளக்க இனங்கள் **அட்டவணை 3.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

[1] 5,632 பதிவுகளை உள்ளடக்கிய 2,471 தனித்துவமான மறைகுறியாக்க தேதிகள்.

**அட்டவணை 3.3: வெவ்வேறு மறைகுறியாக்க தேதிகளை கொண்ட இரண்டு விளக்க நேர்வுகள்**

| மாதிரி நேர்வு எண்1 | | | | |
|---|---|---|---|---|
| ஏல ID | பாக்கெட் ID | மறைகுறியாக்க தேதி | மறைகுறியாக்கம் செய்த ID | வேலை ID (டெண்டர்) |
| 102279 | 92960 | 04-07-2016 12:56 | 21882 | 81828 |
| 102260 | 92960 | 04-07-2016 12:55 | 21882 | 81828 |
| 102036 | 92960 | 04-07-2016 12:52 | 21882 | 81828 |
| 102279 | 92961 | **01-07-2016 12:17** | 21882 | 81828 |
| 102260 | 92961 | **01-07-2016 12:15** | 21882 | 81828 |
| 102036 | 92961 | **30-06-2016 15:40** | 21853 | 81828 |
| இந்த நேர்வில், ஒரு நாள் வித்தியாசத்தில் பாக்கெட் மறைகுறியாக்கம் செய்யப்பட்டது | | | | |

| மாதிரி நேர்வு எண் 2 | | | | |
|---|---|---|---|---|
| ஏல ID | பாக்கெட் ID | மறைகுறியாக்க தேதி | மறைகுறியாக்கம் செய்த ID | வேலை ID (டெண்டர்) |
| 102928 | 93237 | 27-07-2016 16:44 | 22322 | 82044 |
| 102910 | 93237 | 27-07-2016 16:42 | 22322 | 82044 |
| 103321 | 93238 | **26-07-2016 16:03** | 22322 | 82044 |
| 102928 | 93238 | **20-07-2016 16:31** | 16460 | 82044 |
| 102910 | 93238 | **20-07-2016 16:34** | 16460 | 82044 |
| இந்த நேர்வில், ஆறு நாட்கள் வித்தியாசத்தில் பாக்கெட் மறைகுறியாக்கம் செய்யப்பட்டது | | | | |

(ஆதாரம்: மின் கொள்முதல் தரவுகளின் தரவு பகுப்பாய்வு)

ஒரே டெண்டருக்கான தொழில்நுட்ப ஏலங்கள் வெவ்வேறு தேதிகளில் திறக்கப்பட்டன என்பது **அட்டவணை 3.3ல்** இருந்து தெளிவாகிறது.

ஏலத் திறப்பின் போது, GePNIC ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இரண்டு படிகளில் மறைகுறியாக்கம் செய்கிறது, (மறைகுறியாக்கத்திற்கான அசல் விசையை (original key) மீட்டெடுப்பது (ii) விசையைப் பயன்படுத்தி தனிப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கெதிரான 'லாக்' சின்னத்தைக் கிளிக் செய்வதன் மூலம் ஆவணங்களை மறைகுறியாக்குகிறது. மறைகுறியாக்கம் விசைகள் மீட்டெடுக்கப்பட்டவுடன், எந்த நேரத்திலும் மறைகுறியாக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைத் திறக்க துறை பயனரை மென்பொருள் அனுமதிக்கிறது என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022).

TIA ஆல் பெறப்படும் அனைத்து டெண்டர்களும் NITல் குறிப்பிடப்பட்ட நேரத்தில் மற்றும் இடத்தில் திறக்கப்படும் என்று TNTIT விதிகள்

கூறுவதால் பதில் ஏற்கத்தக்கது அல்ல. மறைகுறியாக்க விசைகள் மீட்டெடுக்கப்பட்டவுடன், எந்த நேரத்திலும் ஏல ஆவணங்களை மறைகுறியாக்கம் செய்ய துறை பயனர்களை அனுமதிப்பது என்பது TNTIT விதிகளுக்கு முரணானது மற்றும் வெளிப்படைத்தன்மை, பாரபட்சமற்ற செயல்முறை மற்றும் இரகசியத்தன்மையை பாதிக்கிறது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), மென்பொருளில் ஒப்பந்ததாரர்கள் வாரியாக மறைகுறியாக்கம் செய்யப்பட்டதை NIC ஏற்றுக்கொண்டது, மேலும் ஏல வாரியாக மறைகுறியாக்கம் செய்யப்படுவதற்கு தீர்வு நடவடிக்கை எடுக்க ஒப்புக்கொண்டது.

### 3.3.4 மீள் கொள்முதல் டெண்டர் இனங்களில் (buy-back cases) உருவாக்கப்படும் அளவு ஒப்பீட்டு விளக்கப்படங்களில் உள்ள சிக்கல்கள்

2016-22ல், மின்கொள்முதல் இணைய தளத்தில் 253 டெண்டர்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகளால், ஒப்பந்ததாரரே திரும்ப வாங்குவதற்கான நிபந்தனையுடன் வெளியிடப்பட்டன. திரும்ப வாங்கும் நேர்வுகளின் BoQ ஒப்பீட்டு விளக்கப்படம், வாங்கும் தொகையைக் குறைப்பதற்குப் பதிலாக மேற்கோள் காட்டப்பட்ட தொகையுடன் சேர்த்தது. மின்கலங்கள் (batteries) மற்றும் UPS கொள்முதல் இனங்களில் ஒப்பந்ததாரரிடமே பொருட்களின் மறுவிற்பனை தொடர்பான மூன்று நேர்வுகளில்[2] இது கவனிக்கப்பட்டது. இந்த முரண்பாட்டின் காரணமாக, மென்பொருளில் உருவாக்கப்பட்ட BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தில் தேவையான திருத்தங்களைச் செய்த பிறகு, பயனர் துறைகள் L1 ஏலதாரர்கள் கைமுறையாக (manually) தேர்வுசெய்யப்பட்டனர்.

பொருட்களை திரும்ப வாங்கும் நிபந்தனை கொண்ட டெண்டர்களுக்குப் பயன்படுத்தப்படும் BoQ படிமம் (BoQ template), டெண்டர் அழைக்கும் ஆணையத்தின் (TIA) தேவைக்கேற்றவாறு வடிவமைக்கப்படவில்லை என்றும், மேலே குறிப்பிட்டுள்ள டெண்டர்கள், பொருள்களின் சாதாரண விலை விகித BoQ படிமத்தை பயன்படுத்தியதாகவும், மின்கொள்முதலில் 'New Logic' தேவை ஏற்பட்டால் உதவிக்காக துறைப் பயனர்கள் NICஐத் தொடர்புகொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் NIC பதிலளித்தது (நவம்பர் 2022).

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), அரசு தணிக்கைக் குறிப்பை ஏற்றுக்கொண்டு இதுபோன்ற இனங்களைக் கையாள்வதற்கான தனி BoQ படிமம் புதிய இணையதளத்தில் கிடைக்க வழிவகுக்கப்படும் என்று கூறியது.

### 3.3.5 மென்பொருளில் உருவாக்கப்பட்ட வரிசை அடையாள எண்களில் (Row ID) உள்ள இடைவெளிகள்

மின்கொள்முதல் தரவுத்தளத்தில் உள்ள அனைத்து அட்டவணைகளும் 'ID' என்ற பெயரிடப்பட்ட நெடுவரிசையைக் கொண்டுள்ளன, இது அந்த அட்டவணையில் ஒரு பதிவு சேர்க்கப்படும் போதெல்லாம் கணினியால்

[2] ஜனவரி, செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2019 - தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் - அரசு பொறியியல் கல்லூரி, சேலம்.

உருவாக்கப்படும் வரிசை எண் மட்டுமின்றி, முதன்மை புலமாகவும் உள்ளது (நகல்கள் இல்லாமல்). இது சரிபார்த்தல், தொடர்புடைய அட்டவணையுடன் இணைத்தல் மற்றும் தகவலைப் பெறுதல் ஆகியவற்றிற்கான இணைப்பாக செயல்படுகின்றது. முக்கியமான அட்டவணைகளின் பகுப்பாய்வு, 'ID' நெடுவரிசையில் இடைவெளிகள் இருப்பதைக் கண்டறிந்தது. டெண்டர்களுக்குப் பெறப்பட்ட அனைத்து ஏலங்களின் விவரங்கள் அடங்கிய அட்டவணையில், 01-04-2016 மற்றும் 31-03-2022 வரையிலான காலத்தில், 101710 முதல் 502687 வரையிலான அடையாள எண்களில் 218 IDகள் காணவில்லை.

'வரிசை ID' எண்கள் வரிசை முறையைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). பதிவைச் சேர்க்கும் போது, வினவல் விதிவிலக்குகள் (query exceptions), லோட் பேலன்சர்களில் இருந்து வரும் சிக்கல்கள் போன்ற நேர்வுகளிலும் வரிசை அதிகரிக்கப்படும் என்றும் விடுபட்ட வரிசைகள் பதிவுகளின் நீக்கத்தால் அல்ல என்றும் பதிலளித்தது.

விடுபட்ட நேர்வுகளின் விவரங்களுக்கு எந்தத் தடமும் (trail) இல்லாததால் பதில் ஏற்புடையதாக இல்லை. இது தரவு பாதுகாப்பு மற்றும் தரவு முழுமையை பாதிக்கிறது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), மேற்கண்ட சிக்கல்களை சரிசெய்ய, நேர முத்திரை உள்ளிட்ட (timestamp) தணிக்கை தடத்திற்கான ஏற்பாடுகள் புதிய மென்பொருளில் சேர்க்கப்படும் என்று NIC கூறியது.

### 3.3.6 டெண்டரின் நிலை மென்பொருளில் புதுப்பிக்கப்படாமை

மின்கொள்முதல் தரவுத்தளத்தில், டெண்டர் விவரங்கள் தொடர்பான தரவுத்தள அட்டவணையில், 'packetsnum' என்ற நெடுவரிசை உள்ளது, இது '1' அல்லது '2' என்ற மதிப்பை முறையே ஒற்றை உறை டெண்டர்களுக்கும் இரண்டு உறை டெண்டர்களுக்கும் வைத்துள்ளது. மறைகுறியாக்க தேதி, டெண்டர் நிலை[3] (status) மற்றும் டெண்டர் கட்டம்[4] உள்ளிட்ட பணியின் விவரங்கள் கைப்பற்றப்பட்டு இரண்டு தனித்தனி தரவுத்தள அட்டவணையில் சேமிக்கப்படும். தரவுத்தளத்தில் தொடர்புடைய அட்டவணைகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- ஒரு பாக்கெட்டின் (ஒற்றை உறை) 12,501 டெண்டர்களில், ஏலங்கள் மறைகுறியாக்கப்பட்டாலும், மின்கொள்முதல் முறையில் உள்ள டெண்டர் நிலையானது, டெண்டரின் பணிப் பொருட்கள் தொடர்பான தரவுத்தள அட்டவணையில் 'திறக்கப்பட வேண்டியவை' என்றே காட்டப்பட்டது. மேலும் மின்கொள்முதல் மென்பொருளிலுள்ள டெண்டருக்கான நிலையிலும் 'திறக்கப்பட வேண்டும்' என்றே காட்டியது.

---

3 வெளியிடப்பட்டது, திறக்கப்பட்டது, காலாவதியானது, மறு டெண்டர் மற்றும் ரத்து செய்யப்பட்டது.

4 திறக்கப்பட, ஏலம் திறக்கப்பட்டது 1, தொழில்நுட்ப தகுதி மதிப்பீடு, ஏலம் திறக்கப்பட்டது 2, நிதி மதிப்பீடு மற்றும் AoC.

- இதேபோல், 2 பாக்கெட்டுகள் (2 உறை) கொண்ட 2,679 டெண்டர்களில், ஏலங்கள் மறைகுறியாக்கப்பட்டாலும், மின்கொள்முதல் முறையில் உள்ள டெண்டரின் நிலையானது, டெண்டரின் பணிப் பொருட்கள் தொடர்பான தரவுத்தள அட்டவணையில் 'திறக்கப்பட வேண்டியவை' என்றே காட்டப்பட்டது. மேலும் மின்கொள்முதல் மென்பொருளிலுள்ள டெண்டருக்கான நிலையிலும் 'திறக்கப்பட வேண்டும்' என்றே காட்டியது.

இவ்வாறு, டெண்டரின் செயலாக்கக் கட்டம் அதன் உண்மை நிலையை பிரதிபலிக்காதது, பயன்பாட்டு மென்பொருளில் செயல்முறைக் கட்டுப்பாடு இல்லாததைக் குறிக்கும்.

டெண்டரின் நிலை, குறிப்பிட்ட கட்டம் முடிந்ததும்/முடிவடையும் போது மட்டுமே புதுப்பிக்கப்படும் என்றும் கட்டத்தின் தொடக்கத்தில் புதுப்பிக்கப்படாது என்றும் NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). உதாரணமாக, ஒரு டெண்டருக்கான அழைப்பு வெளியிடப்பட்டபோது, தொழில்நுட்ப ஏல திறப்பு சுருக்கம் பதிவேற்றப்படும் வரை டெண்டரின் நிலை 'திறக்கப்பட வேண்டும்' என்றே இருந்தது. துறையின் பயனர்கள் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியின் நிலையை 'ஏற்றுக்கொள்ளப்பட்டவை' என்பதிலிருந்து 'நிராகரிக்கப்பட்டவை' அல்லது அதற்கு நேர்மாறாக தொடக்க மற்றும் மதிப்பீட்டு நிலை முடியும் வரை மாற்றியமைக்க முடியும் என்பதால் ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியின் நிலையும், அந்நிலைக்கான செயல்முறை முடிந்த பின்னரே வெளியிடப்பட வேண்டும் என்பது அலுவகத் தேவையாக இருந்தது. எனவே, ஒவ்வொரு கட்டமும் முடிந்ததும், அதாவது தொழில்நுட்ப திறப்புச் சுருக்கம் பதிவேற்றப்பட்டதும், நிலை புதுப்பிக்கப்பட்டது.

ஏலம் மறைகுறியாக்கம் செய்யப்பட்டவுடன் தொழில்நுட்ப ஏலத்தின் தொடக்க நிலை முடிந்துவிட்டதால் பதில் ஏற்புடையதாக இல்லை. இந்நிலையில், 'திறக்கப்பட வேண்டும்' என, டெண்டரின் நிலையை பிரதிபலிப்பது, தவறாக வழிநடத்துகின்றது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிக்கல்களை ஒப்புக்கொண்ட NIC, இச் சிக்கல் தீர்க்கப்படும் என்று கூறியது.

### 3.3.7 டிஜிட்டல் கையொப்ப சான்றிதழைப் பயன்படுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகள்

மின்கொள்முதல் முறையில் உள்ள ஒவ்வொரு பயனரும் டெண்டர் உருவாக்கம், வெளியீடு, திறப்பு, புதுப்பித்தல் போன்ற முக்கிய செயல்பாடுகளைச் செய்ய (துறைப் பயனர்) மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பதற்காக (வணிக பயனர்) DSC உடன் இணைக்கப்பட்ட மின்னஞ்சல் IDஐ அவருடைய பயனர் ID ஆகப் பதிவு செய்ய வேண்டும்.

தரவு பகுப்பாய்வில், DSC புதுப்பிக்கும் போது பயனரின் பெயர் சரிபார்க்கப்படவில்லை என்பதும், 147 இனங்களில், ஒரே பயனர் IDக்கு எதிராக வெவ்வேறு பெயர்கள் பதிவேற்றப்பட்டதும் காணப்பட்டது. ஒரு

நேர்வில், 20 ஏப்ரல் 2021 முதல் 27 டிசம்பர் 2021 வரை பயனர் ID 43748க்கு எதிராக, ஆறு DSCகள் பயன்பாட்டு மென்பொருளில், இணைக்கப்பட்டிருந்தன. 591 இனங்களில் வெவ்வேறு பயனர் IDகளுடன் ஒரே பெயரில் DSC இணைக்கப்பட்டிருந்தது. மற்றொரு நேர்வில், 'ஷங்கர் சந்தியா' என்ற பெயர் கொண்ட DSC ஆனது ஐந்து வெவ்வேறு பயனர் IDகளுடன் (30359, 30361, 54178, 54755 மற்றும் 62765) மேப் செய்யப்பட்டிருந்தது. இந்த ஐந்து ஒப்பந்ததாரர்களும், 12 அக்டோபர் 2017 முதல் 11 ஜனவரி 2022 வரையிலான காலகட்டத்தில் 18 டெண்டர்களுக்கு 35 ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

சரிபார்ப்புக் கட்டுப்பாடு இல்லாததால், பயனர் ID உடனான DSCன் முறையற்ற இணைப்பு காரணமாக, DSC மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் சட்டப்பூர்வமானவையா என்று உறுதிப்படுத்த முடியவில்லை என்பதை மேலே உள்ள குறைபாடுகள் சுட்டிக்காட்டியது.

மென்பொருளில் பெயர் விவரம் (Profile name) நிறுவனத்தின் பெயராக இருந்து தனிப்பட்ட ஒப்பந்ததாரருக்கு, அவரால் சமர்ப்பிக்கப்பட்ட அடையாளச் சான்றில் உள்ள பெயருக்கு ஏற்ப DSC வழங்கப்படக்கூடும் என்றதால், மென்பொருளில் உள்ள பெயருடன் DSC வைத்திருப்பவரின் பெயர் சரிபார்க்கப்படவில்லை என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022).

பதிவு செய்யப்பட்ட DSCஐ ஒப்பந்ததாரர் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், ஒரு பயனருக்கு ஒருமுறை இணைக்கப்பட்ட DSCயை செயலிழக்கச் செய்ய முடியுமே தவிர, வேறு எந்த பயனருக்கும் மீண்டும் இணைக்க முடியாது. DSC மற்றும் மென்பொருளில் பதிவு செய்வதற்கு ஒரே மாதிரியான ID ஆதாரம் இருக்க பொருத்தமான கட்டுப்பாடு தேவை.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), DSC உடன் கொள்முதல் செய்யும் நிறுவனத்தில் உள்ள ஒரு அதிகாரி நிறுவனத்தை விட்டு வெளியேறும்போது புதியதாய் நியமனம் செய்யப்படும் அதிகாரியின் DSCயை மென்பொருளில் பதிவேற்றாததால் இந்தச் சிக்கல் எழுகிறது என்று NIC கூறியது. நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற அதிகாரியின் DSCஐ அந்த நிறுவனம் உடனடியாக முடக்க வேண்டும் என்று தணிக்கை கருதுகிறது.

### 3.3.8 பயனர்களுக்கான பொறுப்புகள் அளிப்பதில் காணப்படும் முரண்பாடுகள்

ஒரு பயனுள்ள தகவல் தொழில்நுட்ப அமைப்பு, முன்-திட்டமிடப்பட்ட பயனர் மற்றும் குழு பாதுகாப்பு விவரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொறுப்புக்கள் பிரித்தளிப்பதைச் செயல்படுத்த வேண்டும். இதனால் அதிகாரிகளின் செயல்பாடுகளில் உரிய சோதனைகள் மற்றும் சமநிலைகள் பராமரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் மட்டுமே பணிகளைச் செய்வதை உறுதி செய்வதற்காக சிறப்புரிமைகள்/பொறுப்புகள் (Rights/Roles) அளிக்கப்படுகின்றன. இம்மென்பொருள் பொறுப்பின் அடிப்படையிலான அணுகல் அமைப்பு (role-based access system) ஆகும். ஒருங்கிணைப்பு அதிகாரி (Nodal Officer) என்பவர் பயனர் துறையால் நியமிக்கப்பட்டு NIC ஆல் உருவாக்கப்படும்

ஒரு முக்கிய அதிகாரி ஆவார். அவர் தனது நிறுவனத்திற்கு மற்ற பயனர்களை உருவாக்குகிறார் மற்றும் தேவைக்கேற்ப டெண்டர் அழைப்பு உருவாக்குநர், டெண்டர் வெளியீட்டாளர், டெண்டர் திறப்பாளர் மற்றும் டெண்டர் மதிப்பீட்டாளர் போன்ற பல்வேறு பொறுப்புக்களின் அளிப்பு/மறு அளிப்பு உட்பட மொத்த பயனர் நிர்வாகத்திற்கும் பொறுப்பானவர். துறை பயனர்கள், வெவ்வேறு அணுகல் பொறுப்புகளைக் கொண்டுள்ளனர்; உள்நுழைவு ID மற்றும் DSC உடன் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள்.

சூப்பர் அட்மின், சிஸ்டம் அட்மின் மற்றும் அப்ளிகேஷன் அட்மின் ஆகிய பொறுப்புக்கள் NIC ஆல் மட்டுமே செய்யப்படுவது கவனிக்கப்பட்டது. DoF (நிர்வாகி) இந்தப் பொறுப்புகளைப் பயன்படுத்தவோ அல்லது மின்கொள்முதல் தரவை அணுகவோ இல்லை. தரவு பகுப்பாய்வில் பின்வருவன கண்டறியப்பட்டன:

(i) 14,184 பயனர்கள் பல பொறுப்புகளைக் கொண்டிருந்தனர் (14,184 பயனர்கள் 66,017 பொறுப்புகளுடன் இணைக்கப்பட்டிருந்தனர்).

(ii) 125 நிறுவனங்கள் பல ஒருங்கிணைப்பு அதிகாரிகளைக் கொண்டிருந்தன (2 முதல் 51 வரை).

நிறுவனச் செயல்பாட்டில், டெண்டர் செயலாக்க அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில், ஒருங்கிணைப்பு அதிகாரிக்கு மற்ற பொறுப்புகளும் தேவைப்படலாம் என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). எனவே மென்பொருள், பல பொறுப்புகளுக்கான வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

டெண்டர் அழைப்பு உருவாக்குநர் மற்றும் வெளியீட்டாளர் போன்ற சில பொறுப்புகளை ஒரே நபருக்கு வழங்குவதால் பொறுப்புகள் பிரித்தளித்தல் பின்பற்றப்படவில்லையாதலால் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே, பிழைகள் சரிபார்க்கப்படாமலும், திருத்தப்படாமலும் வெவ்வேறு நிலைகளில் எடுத்துச் செல்லப்படும் அபாயம் அதிகம் ஆகும்.

சேலத்தில் உள்ள DRDAல், ஒரு நேர்வில், ஆவணம் பதிவேற்றம் செய்யும் போது ஏற்பட்ட தவறுகளால், 34 டெண்டர் அழைப்புகள் ரத்து செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. ஒரே பயனரே இந்த டெண்டர் அழைப்புகளை உருவாக்கியும், வெளியிட்டும் உள்ளார். படைப்பாளர் மற்றும் வெளியீட்டாளர் பொறுப்புகள் பிரிக்கப்படாததால், டெண்டர் அழைப்பு வெளியிடப்படும் முன்னதாக பிழை கவனிக்கப்படாமல் போனது. மறு டெண்டர் (retender) அழைப்புக்கான விளம்பரச் செலவான ₹54,332 வீண் செலவினமானது.

(iii) பயனர் துறைகளால் பொறுப்புகளை உருவாக்கப்படுவதில் முரண்பாடுகள் காணப்பட்டன, அதாவது துறைசார் பயனர்களால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பொறுப்பு, ஒருங்கிணைப்பு அலுவலர்கள் அல்லாத பயனர்களால் உருவாக்கப்பட்ட துறைசார் பொறுப்புகள் போன்றவை. கண்டறியப்பட்ட நேர்வுகள் **அட்டவணை 3.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.4: துறைசார்ந்த பயனர்களுக்கான பொறுப்புகளை உருவாக்குவதில் காணப்பட்ட முரண்பாடுகள்

| முரண்பாடுகள் | நேர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஒருங்கிணைப்பு அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பொறுப்பு | 4 |
| துறைசார் பயனர்களால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பொறுப்பு | 308 |
| ஒரே மாதிரியான பொறுப்புகளைக் கொண்ட துறைசார் பயனர்களால் உருவாக்கப்பட்ட துறைசார் பயனர்கள் | 6,250 |

(ஆதாரம்: தரவு பகுப்பாய்வு)

பயனர் துறையின் கையொப்பமிடப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், NIC ஆல் ஒருங்கிணைப்பு அதிகாரி உருவாக்கப்பட்டது என்றும் இந்த அதிகாரிகள் மேலும் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மற்றும் துறை பயனர்களையும் உருவாக்க முடியும் என்றும் NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). மேலும், ஒருங்கிணைப்பு அலுவலர்கள் அல்லாத பிற பயனர்களால், பயனர்களை உருவாக்கும் நிகழ்வுகளைப் பொறுத்தமட்டில், ஒருங்கிணைப்பு அதிகாரி/பிற துறைப் பயனர்களை உருவாக்கும் போது, பயனருக்கு ஒருங்கிணைப்பு அதிகாரியின் பொறுப்பு இருந்திருக்கும். அதன்பிறகு, அந்த பயனரிடமிருந்து துறைசார் ஒருங்கிணைப்பு அதிகாரி பொறுப்பு நீக்கப்பட்டிருக்கலாம் என்று கூறியது. தரவுத்தளத்தில் இதற்கான தடம் இல்லாததால் பதில் ஏற்கத்தக்கதல்ல. மேலும், ஒரு ஒருங்கிணைப்பாளர் பாத்திரம் இதேபோன்ற பொறுப்பை உருவாக்கும் போது படிநிலை பராமரிக்கப்பட மாட்டாது.

(iv) 6,394 பதிவுகளில் (1,611 பயனர் IDகள்), உதவியாளர், இளநிலை உதவியாளர், எழுத்தர் மற்றும் தட்டச்சர் போன்ற பதவிகளைக் கொண்ட அதிகாரிகளுக்கு டெண்டர் செயலாக்கத்தில் ஒருங்கிணைப்பு அதிகாரி, கொள்முதல் அலுவலர் மதிப்பீட்டாளர், கொள்முதல் அலுவலர், திறப்பாளர், கொள்முதல் அலுவலர் வெளியீட்டாளர், கொள்முதல் அலுவலர் நிர்வாகம் மற்றும் தணிக்கையாளர் போன்ற முக்கியப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

NICன் பதிலில் (டிசம்பர் 2022), GePNIC ஒரு பொறுப்பு அடிப்படையிலான அமைப்பு என்று குறிப்பிட்டது. இது துறை பயனரின் உள்ளபடியான பதவியோடு எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை என்றும் கூறியது. வரிசைமுறையைப் பின்பற்றாமல் பயனர் துறைகளால் கீழ்மட்ட அதிகாரிகளுக்கு டெண்டர் செயல்பாட்டில் முக்கியப் பொறுப்புகளை வழங்குவது, டெண்டர் செயல்முறையின் இரகசியத்தன்மையையும் புறநிலைத்தன்மையையும் பாதிப்பதாகும் என்று தணிக்கை கருதுகிறது.

இந்த முரண்பாடுகள், செயலாக்கக் கட்டுப்பாடு இல்லாமை மற்றும் பொறுப்புடைமை, நம்பகத்தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்வதில் தோல்வியைக் குறிக்கிறது. மேலும், பயனர்களுக்கு பல சிறப்புரிமைகள் அளிப்பது, ஒரே பயனருக்குப் பல பொறுப்புகள்

அளிக்கப்பட்டிருப்பதையும் கடமைகளைப் பிரித்தலில் உள்ள குறைபாடுகளையும் வெளிப்படுத்தியது.

நிறைவுக் கூட்டத்தின் போது, அரசு, தணிக்கையின் குறிப்பை ஏற்றுக்கொண்டட்கு.புதிய மென்பொருளுக்கான பயிற்சியின் போது, கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் முறையான பொறுப்பு ஒதுக்கீட்டை பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன என்று கூறியது (பிப்ரவரி 2023).

### 3.3.9 டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்கும் தடுக்கப்பட்ட பயனர்கள்

பயனர்கள் GePNICல் உள்நுழைவதைத் தடுத்தல் என்பது (i) சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பயனர்கள் அல்லது இடமாற்றம் செய்யப்பட்டவர்களை நீக்குதல், (ii) அஞ்சல் கோரிக்கையின் அடிப்படையில், (iii) நிர்வாகக் காரணங்களால், (iv) தவறாக உருவாக்கப்பட்ட பயனர் ஆகியோரை நீக்குதல் போன்றவை தொடர்பானதாகும். தரவுகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

(i) தடுக்கப்பட்ட பயனர்கள் தொடர்பான தரவுத்தள அட்டவணையில், 6,631 பதிவுகளில், 3,548 பதிவுகள் 'தடுக்கப்பட்டவை' என்ற பயனர் நிலையைக் கொண்டிருந்தன, அவற்றில் 3,424 பதிவுகள் நிராகரிக்கப்பட்ட காரணத்தை 'NULL' என கொண்டிருந்தன.

(ii) பயனர்களைத் தடுப்பது பற்றிய விவரங்கள் தொடர்பான தரவுத்தள அட்டவணையில், தடுக்கப்பட்ட காலம், தடைசெய்தல்/தடையை நீக்கல் செய்யும் அங்கீகரிக்கப்பட்ட நபர், பொருள்/டெண்டர்/துறை அல்லது உள்நுழைவு பாதுகாப்பு/ஒழுங்குமுறை நடவடிக்கைக்காக தடைசெய்யப்பட்ட காரணங்கள் போன்றவை கட்டாய புலங்களானாலும், 5,281 பதிவுகளில் (3,676 பயனர் IDகள்), **அட்டவணை 3.5ல்** கொடுக்கப்பட்டுள்ள புலங்கள் 'NULL' மதிப்பைக் கொண்டிருந்தன.

**அட்டவணை 3.5: தடுக்கப்பட்ட பயனர்கள் அட்டவணையின் புலங்களில் 'NULL' மதிப்பு கொண்ட பதிவுகளின் எண்ணிக்கை**

| புலம் | 'NULL' மதிப்பு கொண்ட பதிவுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 'BlockedTo' | 4,451 |
| 'BlockedBy' | 3,426 |
| 'BlockedReason' | 5,047 |
| 'UnblockedDate' | 598 |
| 'UnblockedReason' | 4,732 |
| 'UnblockedBy' | 3,176 |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுகளின் தரவு பகுப்பாய்வு)

உள்ளீட்டு கட்டுப்பாடு இல்லாததால் விடுபடும் தகவல்கள் தரவுத்தளத்தை முழுமையற்றதாகவும், நம்பகத்தன்மையற்றதாகவும் மாற்றியது. வெளிப்படைத்தன்மை மற்றும் தடம் இல்லாததால் பொறுப்பை நிர்ணயிக்க இயலாமல் போகும்.

(iii) தடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் தடுக்கப்பட்ட துறைப் பயனர்கள், தடுக்கப்பட்டிருந்த காலத்தில் டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்றது கண்டறியப்பட்டது. விவரங்கள் **அட்டவணை 3.6** ல் பட்டியலிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.6: டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்ற தடுக்கப்பட்ட பயனர்களின் எண்ணிக்கை**

| அட்டவணையின் பெயர் | புலத்தின் பெயர் | தடுக்கப்பட்ட பயனர்களின் எண்ணிக்கை | தடுக்கப்பட்ட பயனர்களால் செயலாக்கப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **தடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள்** | | | |
| Gep_Bids | TendererID, BidPlacedDate | 3 | 227 |
| **தடுக்கப்பட்ட துறைசார் பயனர்கள்** | | | |
| Gep_Bid_Decrypted | DecryptedBy, DecryptedDate | 3 | 41 |
| Gep_Tender_Basic_Details | CreatedBy, CreatedDate | 15 | 227 |
| Gep_Tender_Basic_Details | UpdatedBy, UpdatedDate | 15 | 225 |
| Gep_Tender_Work_Items | CreatedBy, CreatedDate | 14 | 213 |
| Gep_Tender_Work_Items | UpdatedBy, UpdatedDate | 14 | 215 |
| Gep_Bid_Packet_Documents | EvaluatedBy, EvaluatedDate | 3 | 74 |
| Gep_Tender_Evaluation | UploadedBy, UploadedDate | 3 | 40 |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுகளின் தரவு பகுப்பாய்வு)

(iv) தடுக்கப்பட்ட இரண்டு பயனர்கள் 3,652 பயனர்களை உருவாக்கினர் மற்றும் 12 தடுக்கப்பட்ட பயனர்கள், தடுக்கப்பட்டிருந்த காலத்தில் 1,169 பயனர்களின் விவரங்களைப் புதுப்பித்தனர்.

தகுதியற்ற ஒப்பந்ததாரர்கள் மற்றும் துறைப் பயனர்கள் டெண்டர் செயல்பாட்டில் பங்கேற்றதால், தரவுத்தளத்தை நம்பகத்தன்மையற்றதாகவும் பாதுகாப்பற்றதாகவும் ஆக்குகிறது. இதனால் உள்ளீடு/செயலாக்கக் கட்டுப்பாடு மற்றும் குறிப்பு ஒருமைப்பாடு (referential integrity) இல்லாதது தெளிவாகத் தெரிகிறது.

முந்தைய அமைப்பில், மூன்று தொடர்ச்சியான தோல்வியுற்ற உள்நுழைவு முயற்சிகள் இருந்தபோது, பயனர் 'NULL' என்ற தடுக்கப்பட்ட காரணத்துடன் (blocked reason) மென்பொருளால் தடுக்கப்படுவார் என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). மென்பொருளில் வழங்கப்பட்ட வசதியைப் பயன்படுத்தி, பயனர் தன்னைத் தடைநீக்கம் செய்ய (unblock) வேண்டும். தற்போதைய பதிப்பில், மூன்று தோல்வியுற்ற உள்நுழைவு முயற்சிகளுக்குப் பிறகு, அமைப்பில் உள்நுழைய, மென்பொருளால் உருவாக்கப்பட்ட OTP பயனருக்கு அனுப்பப்படுகிறது.

NIC ஆல் முன்வைக்கப்பட்ட காரணங்கள் இருந்தபோதிலும், தடுக்கப்பட்ட மற்றும் தடைநீக்கப்பட்ட விவரங்கள் தணிக்கை தடத்திற்காக அமைப்பில் சேமிக்கப்பட வேண்டும், இது தவறும் பொழுது, தரவுத்தளம்

முழுமையற்றதாகவும், நம்பகத்தன்மையற்றதாகவும் இருக்கும். மேலும், தடைசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் தடுக்கப்பட்ட துறையின் பயனர்கள், தடைசெய்யப்பட்ட காலத்தில் டெண்டர் செயல்பாட்டின் போது பங்கேற்றதை குறித்து NIC பதிலில் குறிப்பிடவில்லை.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), புதிய மென்பொருளில் இந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டு நெறிப்படுத்தப்படும் என்று NIC உறுதியளித்தது.

## 3.4 மின்கொள்முதல் முறையில் உள்ள பிற சிக்கல்கள்

### 3.4.1 இணைய வழியில் வசூலிக்கப்பட்ட EMDஐ திரும்ப வழங்காதது

மின்கொள்முதல் முறையில், டெண்டர் கட்டணம் மற்றும் EMD ஆகியவற்றை இணைய வழியில் வசூலிக்கும் வசதி உள்ளது. ஒப்பந்ததாரரால் இணைய வழியில் EMD செலுத்தப்படும் போது, அது தொழில்நுட்ப மற்றும் நிதி மதிப்பீட்டு கட்டத்தில், தோல்வியுற்ற ஒப்பந்ததாரருக்கும், AoC க்குப் பிறகு L1 ஒப்பந்ததாரருக்கும் தானாகவே திருப்பித் தரப்படும்.

தரவு பகுப்பாய்வில், 2016-22 வரையிலான காலகட்டத்துடன் தொடர்புடைய 4,630 நேர்வுகளில் 968ல், இணைய வழியில் பெறப்பட்ட EMDஐ தானாகவே திரும்ப அளிப்பதற்கு மென்பொருள் வழி வழங்கிய போதிலும் ஒப்பந்ததாரர்களுக்குத் தொகை திரும்ப அளிக்கப்படவில்லை.

டெண்டர்களுக்கு இணைய வாயிலாக செலுத்தப்பட்ட EMDஐப் பொருத்தமட்டில், துறையின் பயனரால் மென்பொருளில் பொருத்தமான கட்டத்தை முடித்த பிறகு மட்டுமே கட்டணம் திரும்ப அளிக்கப்படும் என்று NIC பதிலில் (டிசம்பர் 2022) குறிப்பிட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் சுருக்க விவரங்களைப் பதிவேற்றினால் மட்டுமே டெண்டர் செயலாக்கத்தின் வெவ்வேறு நிலைகள் நிறைவடையும் என்று கூறப்படுகிறது. பயனர் துறைகள் சுருக்கங்களைப் பதிவேற்றத் தவறியதால், EMD திரும்ப அளிக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), ஒப்பந்தம் வழங்கப்பட்ட 30வது நாளில், நிராகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் EMDயை தானாகத் திருப்பிச் செலுத்தும் வகையில் புதிய மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அரசு கூறியது.

### 3.4.2 வெவ்வேறு தேதிகளில் வெவ்வேறு அளவுப் பட்டியல் (BoQ) ஒப்பீட்டு விளக்கப்படங்கள்

தொழில்நுட்ப ரீதியாக ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் நிதி ஏலங்களை மறைகுறியாக்கிய பிறகு, அமைப்பு தானாகவே 'BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தை' உருவாக்குகிறது, இது ஒப்பந்ததாரர்கள் மேற்கோள் காட்டிய விலைவிகிதங்ளை அருகருகே பட்டியலிடுகிறது மற்றும் மேற்கோள் காட்டப்பட்ட விலைவிகிதங்களின் அடிப்படையில், L1 ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் தொகை மென்பொருளால் அடையாளம் காணப்படுகிறது.

மின்கொள்முதல் மென்பொருளின் MIS அறிக்கைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்களுக்கான BoQ ஒப்பீட்டு விளக்கப்படங்களைப் பதிவிறக்கம் செய்ததில், சில நேர்வுகளில், தொழில்நுட்ப ரீதியாக ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், ஒரு ஒப்பந்ததாரரின் விலை விகிதங்கள் மட்டுமே பட்டியலிடப்பட்டிருப்பதைக் காண முடிந்தது. ஆயினும், தொழில்நுட்ப ரீதியாக ஏற்கப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களாலும் மேற்கோள் காட்டப்பட்ட விகிதங்களுடன் BoQ முன்னதாக உருவாக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டின் போது, துறையால் பதிவிறக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு, வெவ்வேறு BoQ ஒப்பீட்டு விளக்கப்படங்கள் வெவ்வேறு தேதிகளில் உருவாக்கப்பட்டன. களப் பார்வையின் போது, 14 மாதிரி டெண்டர்களில் இது கவனிக்கப்பட்டது.

உதாரணமாக, ஒரு டெண்டரில் பங்கேற்ற (மே 2018), நான்கு ஒப்பந்ததாரர்களில், இரண்டு ஒப்பந்ததாரர்கள், அதாவது M/s ஜவஹர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் M/s வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன் , விலை ஏலங்களைத் திறப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக ஏற்கப்பட்டதாகக் கண்டறியப்பட்டது. இருப்பினும், அமைப்பால் உருவாக்கப்பட்ட BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தில் (டிசம்பர் 2018), ஒரே ஒரு ஏலதாரரின் (M/s ஜவஹர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்) மேற்கோள்கள் பட்டியலிடப்பட்டு L1 என அடையாளம் காணப்பட்டது. நீர்வளத் துறையின் டெண்டர் கோப்புகளை ஆய்வு செய்தபோது, பதிவிறக்கம் செய்யப்பட்டு (ஆகஸ்ட் 2018) கோப்பில் வைக்கப்பட்ட BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தின் நகல், தொழில்நுட்ப ரீதியாக ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் இருவரும் மேற்கோள் காட்டிய விகிதங்களைக் கொண்டிருந்தது கவனிக்கப்பட்டது. இது, நான்கு மாத இடைவெளியில், ஒரே டெண்டருக்கு இரண்டு வெவ்வேறு BoQ ஒப்பீட்டு விளக்கப்படங்களை மென்பொருள் உருவாக்கியுள்ளது என்பதைக் குறிக்கிறது.

நிதி ஏலத்தைத் திறக்கும் நேரத்தில், தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் அமைப்பு BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தை உருவாக்குகிறது என்று NIC பதிலளித்தது (நவம்பர் 2022). சேமிப்பக இட நெருக்கடி காரணமாக, AoC நிலை முடிந்த டெண்டர்கள் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டன. கோப்புகள் தற்காலிகமாக நகர்த்தப்பட்டதால், AoCல் இருக்கும், தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் மட்டுமே ஒப்பீட்டு விளக்கப்படத்தை GePNIC மீண்டும் உருவாக்கியது. இவை சில குறிப்பிட்ட இனங்கள் மட்டுமே என்றும், இச்சிக்கல் பின்னர் சரி செய்யப்பட்டது என்றும் NIC மேலும் கூறியது.

இந்த குறிப்பிட்ட நேர்வுகளில், AoC வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுடன் மட்டுமே BoQ ஒப்பீட்டு விளக்கப்படங்களை மென்பொருள் தொடர்ந்து உருவாக்குவதை (ஜனவரி 2023) தணிக்கை கண்டறிந்தது. இது தவறான வழிநடத்தலுக்கு ஏதுவாக இருப்பதால், பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும், இது தவறான விவரத்தை சித்தரிக்கிறது.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), திட்டத்தில் ஏற்பட்ட பிழை காரணமாக இந்தச் சிக்கல் ஏற்பட்டதாக NIC கூறியதுடன், சிக்கலைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தது.

### 3.4.3 தரநிலைப்படுத்தல், சோதனை மற்றும் தரச் சான்றிதழ்

தரநிலைப்படுத்தல், சோதனை மற்றும் தரச் சான்றிதழ் (Standardisation, Testing and Quality Certification - STQC) மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் தர உத்தரவாத சேவைகளை உறுதி செய்கிறது. இது அதிக அளவிலான பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து வலைத்தளங்களை பாதுகாத்தல், அணுகலை அதிகரிப்பது, சேவை அளிப்பை உறுதி செய்தல் மற்றும் இந்திய அரசு இணையதளங்களுக்கான வழிகாட்டுதல்களின் தேவைகளுக்கு (Guidelines for Indian Government Websites - GIGW - 2018) இணங்குவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கண்காணிப்பின் போது திருப்திகரமான செயல்பாட்டிற்கு உட்பட்டு, வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் செல்லுபடியாகும்.

STQC வழிகாட்டுதல்களின்படி, மூன்று வருட செல்லுபடியாகும் காலத்தின் போது, 1 மற்றும் 2 ஆம் ஆண்டின் இறுதியில், பின்வரும் செயல்பாடுகளின் மதிப்பாய்வு உள்ளடக்கிய 'கண்காணிப்பு தணிக்கை' மேற்கொள்ளப்படவேண்டும் (i) மின்கொள்முதல் அமைப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், (ii) மென்பொருள் பாதுகாப்பு (Application Security) மற்றும் பிணைய பாதுகாப்பு மதிப்பீடு, (Network Security Assessment) (iii) வாடிக்கையாளர்களின் பட்டியல், (iv) பெறப்பட்ட கருத்து அல்லது புகாரின் விவரங்கள் மற்றும் (v) மென்பொருளுக்கான ISO 27001 சான்றிதழின் தொடர்ச்சியின் நிலை. STQC சோதனை ஆய்வகத்தின் திருப்திகரமான அறிக்கையின் பேரில் மட்டுமே, STQC ஆல் 'சான்றிதழின் தொடர்ச்சி' ('Continuity of Certificate') அறிக்கை வெளியிடப்படும்.

மென்பொருளுக்கான STQ சான்றிதழ், மின்கொள்முதல் பயன்பாட்டிற்கு 21-12-2020 முதல் மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் – பதிப்பு 1.09.08 'கண்காணிப்பு மதிப்பீடு' தொடர்பான STQC வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு – வழங்கப்பட்டது (டிசம்பர் 2020). மின்டெண்டர் பயன்பாடு - GePNIC அல்லது ஹோஸ்டிங் உள்கட்டமைப்பில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டால், மென்பொருள் மீண்டும் சான்றளிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், https://tntenders.gov.in ன் தற்போதைய பதிப்பு 27-ஜூலை-2022 அன்று தேதியிடப்பட்ட 1.09.15 பதிப்பு ஆகும். STQC அளிப்பிற்கு பிறகு 1.09.09, 1.09.10, 1.09.11, 1.09.12, 1.09.13, 1.09.14 மற்றும் 1.09.15 ஆகிய ஏழு பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

மென்பொருளில் சிறிய மாற்றங்கள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டதால் STQCன் மறு-சான்றிதழின் தேவை இல்லை என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). மேலும் STQCக்கான புதிய தணிக்கை, GePNICல் உள்ள முக்கிய தேவைகளை முடித்தவுடன் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

ஆயினும், NIC, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டின் இறுதியில் 'கண்காணிப்பு மதிப்பீடு' மற்றும் STQCக்கான 'சான்றிதழின் தொடர்ச்சி' அறிக்கையை வழங்குவது தொடர்பான குறிப்பிட்ட பதிலை வழங்கவில்லை.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), NIC, தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிக்கல்களைக் குறிப்பிடுகையில், புதிய மென்பொருளுக்கான புதிய தணிக்கைச் சான்றிதழ் பெறப்படும் என்று கூறியது.

### 3.4.4 'ஆவணப் பதிவிறக்கம்/விற்பனை முடிவுத் தேதி'க்குப் பிறகு டெண்டர் ஆவணங்களைப் பார்க்க பொது மக்களுக்கு ஏற்பாடு செய்யாமை

ஒப்பந்த செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்காக, மின்கொள்முதல் மென்பொருளில் வெளியிடப்படும் ஒவ்வொரு டெண்டரின் நிலையைப் பொது மக்கள் பார்ப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு டெண்டருக்கான ஒப்பந்தப்புள்ளி திறப்புச் சுருக்கம், மதிப்பீட்டுச் சுருக்கம், BoQ ஒப்பீட்டு விளக்கப்படம் மற்றும் AoC தொடர்பான, துறையால் பதிவேற்றப்பட்ட விவரங்கள், மற்றும் ஆவணங்கள் அடங்கிய ஒப்பந்த சுருக்க அறிக்கைகள் பொது மக்களால் பார்க்கவும் பதிவிறக்கவும் செய்யும்படியாகவும் மென்பொருளில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், பணியின் நோக்கம் மற்றும் விவரங்கள் அடங்கிய ஒப்பந்த ஆவணங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதாவது 'வெளியிடும் தேதி' முதல் 'ஆவணத்தைப் பதிவிறக்கம்/விற்பனை முடிவு தேதி' வரை மட்டுமே பொதுமக்களின் பார்வைக்கும் பதிவிறக்கத்திற்கும் கிடைக்கின்றன என்பதை தணிக்கை கண்டறிந்தது.

பணிகளை கண்காணிக்க அல்லது டெண்டர் விவரக்குறிப்புகளுடன் முடிவை ஒப்பிடுவதில் ஆர்வமாக உள்ள பொது மக்கள்/ ஒப்பந்ததாரர்களுக்கு, குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால் ஒப்பந்த ஆவணங்கள் கிடைக்காததால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

வெளியிடப்பட்டபின் இரகசியத்தன்மையற்றதாகும் ஒப்பந்த ஆவணங்களை அணுகுவதற்கான இந்த கட்டுப்பாடு, மின்கொள்முதல் அமைப்பின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றான வெளிப்படைத்தன்மையை பாதிக்கும்.

இது சுட்டிக்காட்டப்பட்ட போது, ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொதுமக்கள் ஏலம் சமர்ப்பிக்கும் தேதியின் போது மட்டுமே டெண்டர் ஆவணங்களை பதிவிறக்கம் செய்ய ஆர்வமாக இருப்பார்கள் என்று NIC பதிலளித்தது (டிசம்பர் 2022). அதன் பிறகு, டெண்டர் செயல்முறையின் நிலையை மட்டுமே அறிய ஆர்வம் இருக்கும். டெண்டர் ஆவணம் தேவைப்படும் நபர்கள் துறையை அணுகுவதன் மூலம் அதைப் பெற முடியும் என்று NIC மேலும் கூறியது.

ஒரு வெளிப்படையான அமைப்பில், மென்பொருளில் உள்ள வெளியிடப்பட்ட தகவல்களை, எந்தவொரு கட்டுப்பாடும் இல்லாமல்

பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), இந்தச் சிக்கல் தீர்க்கப்படும் என்று NIC கூறியது.

## 3.5 முடிவுரை

TNTIT விதிகளின் காலவரம்பு தொடர்பான விதிமுறைகளை இணைக்கும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்படவில்லை. மின்கொள்முதல் மென்பொருளில், பொருள் வாரியான EMDன் விவரங்களைக் கைப்பற்றுவதற்கும், உள்நாட்டு நிறுவனங்களுக்கு கொள்முதல் முன்னுரிமையை நீட்டிப்பதற்கும் எந்த ஏற்பாடும் இல்லை. பல ஒப்பந்ததாரர்கள் ஒரே விலையை மேற்கோள் காட்டிய நேர்வுகளில், துறைகள், கைமுறையான டெண்டர் செயலாக்கத்தை நாடின. பட்டியல் அளவுகளின் உருவாக்கத்திற்குப் பிறகு, L1 ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், பங்குபெறும் ஒப்பந்ததாரர்கள் ஒரே விலையை மேற்கோள் காட்டியதால், மனித தலையீடு தேவைப்படும் சூழ்நிலைகளுக்கும் இந்த அமைப்பில் ஏற்பாடுகள் இல்லை. கட்டாயப் புலங்களில் ‘NULL’, நகல் மற்றும் தவறான மதிப்புகள் கவனிக்கப்பட்டன. TNTIT விதிகளுக்கு முரணாக, ஒரே டெண்டரின் ஏலங்கள் வெவ்வேறு தேதிகளில் மறைகுறியாக்கப்பட்டன. ஒரு நிறுவனத்தின் முக்கிய பொறுப்புகள் மற்ற துறை பயனர்களால் உருவாக்கப்பட்டதால், பொறுப்புகள் உருவாக்கத்தில் முரண்பாடுகள் காணப்பட்டன.

## 3.6 பரிந்துரைகள்

- மென்பொருளில் பொருத்தமான விதிகளை நிதித் துறையுடன் கலந்தாலோசித்து, TNTIT விதிகளுக்கு இணங்க, அரசு இணைக்க வேண்டும், துறைசார் பயனர்கள்/ஒப்பந்ததாரர்களின் பதிவுத் தகவலைப் பதிவு செய்யும் போது, தேவையான உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளை மின்கொள்முதல் மென்பொருளில் வழங்க வேண்டும். மேலும், தேவையான சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் வெளிப்படைத்தன்மை, பாரபட்சமற்ற செயல்முறை மற்றும் இரகசியத்தன்மை ஆகியவற்றை உறுதிசெய்யும் வகையில் தமிழ்நாட்டிற்கான மென்பொருளை தனிப்பயனாக்க வேண்டும்.
- வெளிப்படைத்தன்மை கொண்ட மென்பொருளில் உள்ள வெளியிடப்பட்ட தகவல்களை எந்தவொரு தடையுமின்றி பொதுமக்கள் எளிதாக அணுகுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அத்தியாயம் IV

# ஒப்பந்த செயல்முறை

## அத்தியாயம் IV

## ஒப்பந்த செயல்முறை

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் விடுபட்ட ஆவணங்களை கோருவதற்கும் மின்கொள்முதல் முறையில் உள்ள வசதிகள் பயன்படுத்தப்படவில்லை மற்றும் கைமுறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையே துறைகள் நம்பியிருந்தன. இது ஒப்பந்த செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மையின் நோக்கத்தை பாதித்தது. BoQ படிமம் வடிவமைப்பதில் உள்ள குறைபாடுகள், ஏல நிபந்தனைகளுக்கு இணங்காமல் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் உள்ள முரண்பாடுகள் ஆகியவை டெண்டர் மதிப்பீட்டு செயல்முறையின் புறநிலைத்தன்மையை பெரிதும் பாதித்தன. அரசு சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை ஏற்றுக்கொண்டது (பிப்ரவரி 2023) மற்றும் இவை, 1 ஏப்ரல் 2023 முதல் செயல்படுத்தப்படும் புதிய மென்பொருளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறியது.

### 4.1 முன்னுரை

TNTIT சட்டம், 1998ன் பிரிவு 2(f), கொள்முதல் செய்யும் நிறுவனத்தின் அழைப்பின் பேரில் மின்னனு முறை உட்பட எந்த வகையிலும் சமர்பிக்கப்படும் முறையான ஆவணம் ‘டெண்டர்’ என்று வரையறுக்கிறது. ஒப்பந்தச் செயல்முறை பின்வரும் நிலைகளைக் கொண்டுள்ளது:




கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு டெண்டர் ஆவணங்கள் மற்றும் அளவுகளுக்கான பட்டியல் (BoQ) படிமம் ஆகியவற்றை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை மின்கொள்முதல் முறை கொண்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் மற்றும் BoQ படிவத்தில் தங்கள் விலைவிகிதங்களை மேற்கோள் காட்ட வேண்டும்.

மென்பொருள் தேவை விவரக்குறிப்புகளின் (System Requirement Specifications - SRS) படி, டெண்டர் உருவாக்க நேரத்தில் திறப்பாளராக நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் சமர்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இணைய வழியில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்களின் தேர்வு மற்றும் நிதி ஏலத் திறக்கும் தேதி

ஆகியவற்றின் முடிவுகள் அமைப்பில் புதுப்பிக்கப்படும். நிதி ஏலத்தைத் திறக்கும் நேரத்தில், தானாகவே L1 ஒப்பந்ததாரரை அடையாளம் காணும் BoQ ஒப்பீட்டு அறிக்கையை மென்பொருள் உருவாக்குகிறது. டெண்டர் அழைப்பு ஆணையம் (Tender Inviting Authority - TIA), நிதி மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், டெண்டர் விவரங்களுடனான ஒப்பந்த வழங்குதல் ஆணையை (Award of Contract - AoC) கைமுறையாகத் தயாரிக்கிறது.

டெண்டர் மதிப்பீட்டு செயல்முறையானது ஆவணங்களின் கைமுறை சரிபார்ப்பு மற்றும் AoC மூலம் விலை ஏலங்களின் தானியங்கி ஒப்பீடு ஆகியவற்றின் கலவையாக இருப்பதால், கையேடு ஆவணங்கள், மேலாண்மை தகவல் அமைப்பு (Management Information System - MIS) அறிக்கைகள் மற்றும் தரவு பகுப்பாய்வு மூலம் டெண்டர் செயல்முறைகளை தணிக்கை சரிபார்க்கிறது.

1,260 மாதிரி டெண்டர்களில் மின்கொள்முதல் முறையில் ஏலச் சமர்ப்பிப்பு மற்றும் ஏல மதிப்பீடு தொடர்பாக கண்டறியப்பட்ட சிக்கல்கள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 4.2 ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு

### (அ) ஒப்பந்ததாரர்களால் பதிவேற்றப்படாத கட்டாய ஆவணங்கள்

நிர்ணயிக்கப்பட்ட தகுதி அளவுகோல்கள், தொழில்நுட்ப நிபந்தனைகள், வணிகம் தொடர்பான நிபந்தனைகள் போன்றவற்றை நிறைவேற்றியதற்கு ஆதாரமாக ஒப்பந்ததாரர்களால் தேவையான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை[1] பதிவேற்ற வேண்டும் என்று டெண்டர் அழைப்பு அறிவிப்பில் (Notice Inviting Tenders - NIT) குறிப்பிடப்பட்டுள்ளது. டேவணித் தொகை ஆவணம் (Earnest Money Deposit - EMD) மற்றும் அசல் ஆவணம்(கள்) ஆகியவை மட்டுமே டெண்டர் அழைப்பு ஆணையத்திடம் கைமுறையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மாதிரி டெண்டர்கள் தொடர்பான MIS அறிக்கைகளின் பகுப்பாய்வில், **அட்டவணை 4.1**ல் விவரிக்கப்பட்டுள்ள படி, 94 டெண்டர்களில் ஒப்பந்ததாரர்கள் கட்டாய ஆவணங்களை பதிவேற்றவில்லை என்பது தெரியவந்தது. இரண்டு இனங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

[1] EMDக்கான வரையோலையின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்கள், PAN நகல், ஒப்பந்ததாரர் பதிவுச் சான்றிதழ் மற்றும் நிகழ்நிலைச் சான்றிதழ், கடன் பெறுவதற்கான ஆதாரங்களின் சான்றுகள், பட்டயக் கணக்காளரிடமிருந்து ஆண்டு வருவாய் சான்றிதழ், ஒவ்வொரு நிதியாண்டிலும் சிவில் பணிகள் மற்றும் மொத்தப் பணிகள் குறித்த விவரங்கள், சரித்தன்மை குறித்த உறுதிமொழி சான்றிதழ்கள், ஒப்பந்ததாரர் முடித்த ஒத்த தன்மை கொண்ட பிற பணிக்களுக்கான பட்டியல், கைவசம் உள்ள பணிகளின் பட்டியல், சொந்தமான/வாடகை இயந்திரங்களின் பட்டியல் போன்றவை.

**அட்டவணை 4.1: ஒப்பந்ததாரர்களால் பதிவேற்றப்படாத கட்டாய ஆவணங்கள்**

| வ.எண் | மாதிரி அலுவலகம் | கட்டாய ஆவணங்கள் பதிவேற்றப்படாத டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பட்டு வளர்ப்பு இயக்குநரகம், சேலம் | 1 |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 28 |
| 3 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் | 37 |
| 4 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 10 |
| 5 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் | 18 |
| | **மொத்தம்** | **94** |

(ஆதாரம்: மின்கொள்முதல் இணையதளம்)

(i) **கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை** (District Rural Development Agency - DRDA) தொடர்பான 10 மாதிரி டெண்டர்களில்[2], ஒப்பந்ததாரர்களின் PAN, ஆண்டு வருவாய் சான்றிதழ், இதேபோன்ற முன்செய்யப்பட்ட ஒத்த பணிகளின் பட்டியல், ஒப்பந்தம் விதிமுறைகளுக்கு உட்படுதலுக்கான உறுதிமொழி போன்ற கட்டாய ஆவணங்களை பதிவேற்றவில்லை.

(ii) DRDA, கரூர் தொடர்பான எட்டு மாதிரி டெண்டர்களில்[3] ஒப்பந்ததாரர்கள் EMD ஆவணத்தைத் தவிர வேறு எந்த கட்டாய ஆவணங்களையும் பதிவேற்றவில்லை.

இணையதளத்தில் கட்டாய ஆவணங்கள் பதிவேற்றப்படவில்லை என்றாலும், கைமுறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதாக DRDAக்கள் (டிசம்பர் 2022) பதிலளித்தன.

நிர்ணயிக்கப்பட்ட NIT நிபந்தனைகளை மீறி ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் பதில் ஏற்கத்தக்கதல்ல.

### (ஆ) ஒப்பந்தப்புள்ளியுடன் சமர்பிக்கப்படாத கட்டாய ஆவணங்களுக்கான கேட்பு

தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது குறிப்பிட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து ஏதேனும் ஆவணங்கள் தேவைப்பட்டால், அதனை TIA கோர இணையதளத்தில் ஒரு மெனு வசதி வழங்கப்பட்டிருக்கிறது. மெனுவானது, கோரப்பட்ட ஆவணங்களை பதிவேற்றுவதற்கான காலவரம்பு நிர்ணயிப்பதை எளிதாக்குகிறது. ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆவணங்களை வழங்கத் தவறினால், ஏலம் நிராகரிக்கப்படலாம்.

பின்வரும் நேர்வுகளில் (**அட்டவணை 4.2**), ஒப்பந்தப்புள்ளிச் சமர்ப்பிப்பின் போது பதிவேற்றப்பட வேண்டிய ஆவணங்கள், அதைத் திறந்த பிறகு மின்னஞ்சல் மூலம் கோரப்பட்டது கண்டறியப்பட்டது.

---

2 2019-20 ஆம் ஆண்டுக்கான மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து குளங்கள் மற்றும் குட்டைகளை புதுப்பித்தல் அல்லது புனரமைப்புக்கான டெண்டர்கள்.

3 ‘ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் கிராமப்புற வீடுகளுக்கு வீட்டு குழாய் இணைப்பு’க்கான டெண்டர்கள்.

அட்டவணை 4.2: விடுபட்ட ஆவணங்களுக்கான கேட்பு

| வ.எண் | மாதிரி கொள்முதல் நிறுவனங்கள் | விடுபட்ட ஆவணங்கள் கோரப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (Tamil Nadu Medical Services Corporation) | 1 |
| 2 | மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், நீர்வளத் துறை, நிலத்தடி நீர் வட்டம், தரமணி, சென்னை (உலக வங்கி டெண்டர்கள்) | 27 |
| | மொத்தம் | 28 |

(ஆதாரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் பதிவுகள்)

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கடிதப் பரிமாற்றத்தின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

(i) TNMSC ஆல் வெளியிடப்பட்ட (பிப்ரவரி 2022) டெண்டர் தொடர்பான NIT, கைமுறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படாது என்று நிபந்தனை விதித்துள்ளது. ஆயினும், TNMSC, நிதி ஏலத் திறப்புக்கு முன் (ஜூலை 2022) தெளிவுரை வழங்கும் போது, கட்டாய ஆவணங்களைச் அதாவது EMD விவரங்கள், வருடாந்திர விற்பனை விற்றுமுதல், ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் கையொப்ப நகல் போன்றவைகளை ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தது. ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட (ஜூலை 2022) ஆவணங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு AoC வழங்கப்பட்டது.

TNMSC ஆனது மின்கொள்முதலில் உள்ள ‘விடுபட்ட ஆவணங்கள்’ வசதியைக் கொண்டு கேட்பு அளிக்க தவறியது. மின்கொள்முதல் இணையதளத்திற்கு வெளியே சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை ஏற்றது கண்டறியப்பட்டது. இது NITல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையை மீறியதாகும்.

ஒப்பந்ததாரர் அட்டவணையின்படி ஆவணங்களை பதிவேற்றியிருந்தாலும், தொழில்நுட்ப சிக்கல்களால், ஒப்பந்தப்புள்ளிகளைத் திறக்க முடியவில்லை, எனவே ஆவணங்கள் மின்னஞ்சல் மூலம் அழைக்கப்பட்டன என்று TNMSC பதிலளித்தது (டிசம்பர் 2022).

TNMSCன் செயல்கள் NITயை மீறுவதாக இருந்ததால் பதில் ஏற்கத்தக்கதல்ல. மேலும், TNMSC தொழில்நுட்பச் சிக்கல்களுக்கு தீர்வு காண NIC அதிகாரிகளை தொடர்பு கொள்ள எடுத்த நடவடிக்கை பற்றி பதிலில் குறிப்பிடவில்லை.

(ii) நீர்வளத் துறை (Water Resources Department - WRD), நிலத்தடி நீர் வட்டம் (Ground Water Circle - GWC) சென்னை, வெளியிட்ட 27 உலக வங்கி டெண்டர்களின் தொழில்நுட்ப மதிப்பீடு, மின்னஞ்சல் மூலம் செய்யப்பட்ட கோரிக்கைக்கு ஒப்பந்ததாரர்கள் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்ததன் அடிப்படையிலேயே அமைந்தது.

கண்காணிப்புப் பொறியாளர், WRD, GWC பதிலில் (டிசம்பர் 2022) தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது ஒருமுறை மட்டுமே ‘விடுபட்ட ஆவணங்கள்’ அழைப்பதற்கான வாய்ப்பை இணையதளம் வழங்குகிறது என்றும் மறுஆய்வு அல்லது ஒப்புதல் கட்டத்தில் தேவைப்படும் எந்த தெளிவுரைகளையும் சமர்ப்பிப்பதற்கு சாத்தியமில்லை என்றும் கூறினார். எனவே, தொழில்நுட்ப மதிப்பீட்டின் போது மின்னஞ்சல் மூலம் விளக்கங்கள் கோரப்பட்டதாக பதிலளித்தார்.

நிறைவுக் கூட்டத்தின் போது (பிப்ரவரி 2023), விடுபட்ட ஆவணங்களை ஒன்றுக்கு மேற்பட்ட முறை அழைக்க புதிய இணையதளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக NIC கூறியது.

குறிப்பிட்ட காலத்திற்குள் விடுபட்ட ஆவணங்களை கோருவதற்கு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இருந்தும், கையேடு ஆவணங்களையே தொடர்ந்து சார்ந்திருப்பது செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மையின் நோக்கத்தை பாதித்தது.

## 4.3 டெண்டர்களின் மதிப்பீடு

SRSன் படி, இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டு நோக்கங்களுக்காக குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அட்டவணை 4.3ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, இந்த செயல்பாட்டு முறையில் 79 டெண்டர்களில் உள்ள முரண்பாடுகளை தணிக்கை கண்டறிந்தது. சில நேர்வுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**அட்டவணை 4.3: மாதிரி டெண்டர்களின் மதிப்பீட்டில் முரண்பாடுகள்**

| வ.எண் | தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனம் | மதிப்பீட்டில் முரண்பாடுகள் காணப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பட்டு வளர்ப்பு இயக்குனரகம், சேலம் | 9 |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 34 |
| 3 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் | 10 |
| 4 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 1 |
| 5 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் | 16 |
| 6 | தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் | 4 |
| 7 | மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், நீர்வளத்துறை, நிலத்தடி நீர் வட்டம், தரமணி, சென்னை | 5 |
| | **மொத்தம்** | **79** |

(ஆதாரம்: சம்பந்தப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் பதிவுகள்)

**(i) L1ன் தவறான அடையாளம்:** 35 KVA மின் ஆக்கி இயந்திரத்தின் (Generator) கொள்முதலுக்காக பட்டு வளர்ப்பு இயக்குனரால் (Director of Sericulture - DoS) வெளியிடப்பட்ட (அக்டோபர் 2021) டெண்டரின் விலை ஏல விவரங்கள் **அட்டவணை 4.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4: ஒரே பொருளுக்கான வெவ்வேறு GST விகிதங்களைக் கொண்ட ஏலங்களின் விவரங்கள்**

| ஒப்பந்ததாரர் | வரி இல்லாமல் விலை (₹) | ஒப்பந்ததாரர் மேற்கோள் காட்டிய GST விழுக்காடு | மேற்கோள் காட்டப்பட்ட GST விழுக்காட்டுடன் கூடிய விலை (₹) | ஒப்பந்தப்புள்ளியின் தரவரிசை | 18 விழுக்காடு சரியான GST உடன் விலை (₹) |
|---|---|---|---|---|---|
| சென்னை டீசல் பிரைவேட். லிமிடெட் | 4,11,111 | *12* | 4,60,444.32 | L1 | 4,85,111 |
| மெட்ராஸ் பவர் கார்ப்பரேஷன் | 4,06,800 | *18* | 4,80,024.00 | L2 | 4,80,024 |
| ஸ்ரீ லக்ஷ்மி ஏஜென்சீஸ் | 4,02,000 | *21.73* | 4,89,360.00 | L3 | 4,74,360 |
| பிரசிஷன் சயிண்டிஃபிக் நிறுவனம். | 4,40,000 | *18* | 5,19,200.00 | L4 | 5,19,200 |

(ஆதாரம்: பட்டு வளர்ப்பு இயக்குநரகத்தின் பதிவுகள்)

35 KVA மின் ஆக்கி இயந்திரத்திற்கான GST விகிதம் 18 விழுக்காடாக இருந்தபோதிலும், ஒப்பந்ததாரர்கள் வெவ்வேறு GSTன் விகிதங்களுடன் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்தனர். இதையடுத்து, மென்பொருள் உருவாக்கிய BoQ ஒப்பீட்டு விளக்கப்படத்தில், சமர்பிக்கப்பட்ட GST உடனான விலைப்புள்ளி அடிப்படையில், L1 ஏலதாரராக சென்னை டீசல் பிரைவேட் லிமிடெட் பட்டியலிடப்பட்டது. ஆயினும், இந்த நிறுவனத்தின் மேற்கோளில் GST தவறாக 12 விழுக்காடாக காட்டப்பட்டுள்ளது. இது, இப்பொருளுக்கான உண்மை GST விகிதத்துடன் குறைவானதாகும். இதனால், L1 ஏலதாரராக சென்னை டீசல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை, துறை தவறாக இறுதி செய்தது.

மின்கொள்முதல் இணையதளத்தில் உருவாக்கப்பட்ட BoQன் படியே டெண்டர் இறுதி செய்யப்பட்டது என்று DoS ஏற்றுக் கொண்டார் (அக்டோபர் 2022).மேலும், விலைகுறைப்பிற்கான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, AoC ₹4.48 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது (அக்டோபர் 2022) என்றும் கூறினார்.

ஒப்பந்ததாரர்கள் ஒரே பொருளுக்கு வெவ்வேறு GST விகிதங்களை மேற்கோள் காட்டுவதைத் தவிர்ப்பதற்காக சரியான GST விகிதத்தை முறையாக இணைத்து BoQ படிவத்தை வடிவமைக்க DoS தவறியதை பதில் சுட்டிக்காட்டுகிறது.

**(ii) கையேடு பதிவுகளுடன் ஒப்பிடுகையில், இணைய வழியில் சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப விவரக்குறிப்புகளில் உள்ள முரண்பாடுகள்:** DRDA, கிருஷ்ணகிரியில் 35 எதிர்திசை சவ்வூடுபரவல் (Reverse Osmosis - RO) ஆலைகளை நிறுவும் பணிக்காக வெளியிடப்பட்ட (ஆகஸ்ட் 2019) டெண்டர் தொடர்பான ஆவணம், அங்கீகரிக்கப்பட்ட வணிகரான

ஒப்பந்ததாரர், தொழில்நுட்ப விவரக்குறிப்புகளைச் சமர்ப்பிக்க சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவை (i) ஒப்பந்ததாரர் ஒரு வணிகர் என்பதற்கு உற்பத்தியாளரால் வழங்கப்பட்ட ஆவண சான்றுகள் சமர்பிக்கவேண்டும் (ii) ஒப்பந்ததாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் 50 எண்ணிக்கையிலான RO ஆலைகளை வழங்கியிருக்க வேண்டும், (iii) தொழில்நுட்ப ரீதியாக தகுதி பெற்றிருப்பதாக தேர்வு செய்யப்பட்டால், உற்பத்திப் பிரிவின் ஆய்வு அறிக்கை நிர்வாகப் பொறியாளர் (Executive Engineer EE), DRDA இடமிருந்து பெறப்பட்டு, விலை ஏலத் திறப்பிற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கிருஷ்ணகிரி DRDA ஆல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட டெண்டர் ஆவணங்கள், மேற்கொள்ளப்பட்ட டெண்டர் மதிப்பீடு மற்றும் கையேடு பதிவுகள் ஆகியவற்றை மேற்கூறிய தகுதி அளவுகோல்களுடன் ஒப்பிட்டு **அட்டவணை 4.5ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.5: RO ஆலைகளை நிறுவுவதற்காக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப மதிப்பீட்டின் விவரங்கள்**

| பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளிஆவணத்தின்படி தகுதிக்கான அளவுகோல்கள் | கையேடு மதிப்பீடு சுருக்கத்தின் படி | ஒப்பந்ததாரர்கள் இணையதளத்தில் பதிவேற்றிய ஆவணங்களின்படி |
|---|---|---|---|
| M/s ஸ்கை டிரேடர்ஸ், சேலம் | வணிகர் சான்றிதழ் | IIROS நீர் சுத்திகரிப்பாளர்களின் மலர் | 'பல்வேறு மாடல்களுக்கான பேட்டரி மூலம் இயக்கப்படும் மின்சார வாகனங்கள்' அங்கீகரிக்கப்பட்ட மலர் |
| | பிற ஒத்த வேலைகளை நிறைவேற்றியதன் விவரங்கள் | இணைக்கப்பட்ட விவரங்கள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது | மின்சார வண்டி பேட்டரி வாகனம் வழங்கப்பட்டது. |
| M/s அன்பு ஏஜென்சீஸ், தர்மபுரி | வணிகர் சான்றிதழ் | IIROS நீர் சுத்திகரிப்பாளர்களின் மலர் | 'LED விளக்குகள், சூரிய அமைப்புகள் மற்றும் மின்சார வாகனங்கள்' ஆகியவற்றின் அங்கீகரிக்கப்பட்ட மலர் |
| | பிற ஒத்த வேலைகளை நிறைவேற்றியதன் விவரங்கள் | இணைக்கப்பட்ட விவரங்கள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது | மின்சார வண்டி பேட்டரி வாகனம் வழங்கப்பட்டது |
| விலை ஏலத்தைத் திறப்பதற்கு முன் பெற வேண்டிய EE/DRDAன் கட்டாய ஆய்வு அறிக்கை இல்லை | | | |

(ஆதாரம்: மின்கொள்முதல் தரவுத்தளம் மற்றும் DRDA, கிருஷ்ணகிரியின் பதிவுகள்)

மேலே உள்ள முரண்பாடுகள் இருந்தபோதிலும், விலை ஏலம் திறக்கப்பட்டது (அக்டோபர் 2019), மற்றும் வேலை M/s ஸ்கை டிரேடர்ஸ், சேலம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது (நவம்பர் 2019).

DRDA, கிருஷ்ணகிரி, உற்பத்தி ஆலையில் கட்டாய ஆய்வு நடத்தப்படவில்லை என்றும், டெண்டர் நிபந்தனைகளின்படி தொடர்புடைய அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பதிலளித்தது (டிசம்பர் 2022). ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் முழுமையை உறுதி

செய்யாமல் ஒப்பந்தத்தை வழங்குவது டெண்டர் நிபந்தனைகளை மீறுவதாக இருப்பதால் பதில் ஏற்கத்தக்கதல்ல.

பணியை உரிய காலத்தில்/திறனுடன் முடிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களை பூர்த்தி செய்யும் ஒப்பந்ததாரரை அடையாளம் காண்பதில் டெண்டர் மதிப்பீட்டு செயல்முறை முக்கியமானதாகும். குறைந்த ஒப்பந்ததாரரைத் தேர்ந்தெடுப்பதற்கும், வடிவமைப்பில் குறைபாடுகள் உள்ள BoQ படிமத்தை நம்பியிருத்தல், நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யாமல் ஒப்பந்தத்தை வழங்குதல், ஆகியவை பணிகளை குறைபாடு/தாமதமாக முடிப்பதற்கு பங்களிக்கிறது.

**(iii) GST பதிவு**: TNMSC (ஜூலை 2021) தற்காலிக இரட்டை-அறை இதயமுடுக்கி இயந்திரத்தை (Dual Chamber Temporary Pacing Machine) கொள்முதலிற்கான டெண்டரை வெளியிட்டது. ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று, வழங்குகை மற்றும் சேவைகளுக்கான GST பதிவு எண்ணையும், விலை அட்டவணையில் உள்ள பொருளின் சீர்முறைப் பெயரிடல்களின்[4] (Harmonised System of Nomenclature - HSN) குறியீட்டையும் வழங்குவதாகும்.

வெற்றிகரமான ஒப்பந்ததாரரான M/s ஸ்வஸ்திகா மருத்துவ மையத்தின் GST பதிவு, மருந்துகள் மற்றும் வாசனை திரவியங்களுடன் மட்டுமே தொடர்புடையது ஆகும், இதயமுடுக்கி இயந்திரத்திற்கானது அல்ல. கொள்முதல் செய்யப்பட்ட பொருள் இறக்குமதி செய்யப்பட்டதாகையால் தற்போதுள்ள GST பதிவு எண்ணையே வழங்குநர் அளிக்க முடியும் என்று TNMSC பதிலளித்தது (டிசம்பர் 2022). இருப்பினும், இது டெண்டர் நிபந்தனையை மீறியதாக இருப்பதால் பதில் ஏற்கத் தக்க தல்ல. மேலும், NIT உடன் இணைக்கப்பட்ட விலை அட்டவணையில் ஒப்பந்ததாரர் மேற்கோள் காட்டிய HSN குறியீடு ('90215000') M/s ஸ்வஸ்திகா மருத்துவ மையத்தின் GST பதிவு தொடர்பான HSN எண்ணில் இல்லை.

**(iv) <u>ISO சான்றிதழ்</u>** - பட்டுப்புழு வளர்ப்பு இயக்குநர் (Director of Sericulture - DoS), சேலம் 'பட்டுப்புழு வளர்ப்பு படுக்கை கிருமிநாசினி' (அங்குஷ்) ('Silkworm rearing bed disinfectant' (Ankush)) வழங்குவதற்கான டெண்டரை வெளியிட்டார். ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பின் (Notice Inviting Tender - NIT) ஒப்பந்ததாரர்களுக்கான நிபந்தனை எண். 5(b), நிறுவனம் ISO சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஆயினும், வெற்றிகரமான ஒப்பந்ததாரரான M/s SR சிஸ்டம்ஸ், சேலம் நிறுவனத்தின் ISO சான்றிதழ், IT உள்கட்டமைப்புடன் தொடர்புடையது என்றும் கிருமிநாசினி அங்குஷ் தொடர்புடையது அல்ல என்றும் தணிக்கை கண்டறிந்தது.

டெண்டர் ஆய்வுக் குழு ஒப்பந்ததாரர்களின் ISO சான்றிதழைச் சரிபார்த்ததில், வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை சரிபார்க்கத் தவறிவிட்டதை DoS ஏற்றுக்கொண்டார் (செப்டம்பர் 2022). மேலும் அத்தகைய சரிபார்ப்பு எதிர்காலத்தில் உறுதி செய்யப்படும் என்றும் கூறினார்.

[4] சீர்முறைப் பெயரிடல் அமைப்பு என்பது GST விகிதங்கள் விதிக்கப்படும் பொருட்களின் முறையான வகைப்பாடு ஆகும்.

பொருத்தமான GST பதிவு/ISO சான்றிதழ் இல்லாமல் ஒப்பந்தங்களை வழங்குவது முறையற்ற செயல்முறை ஆகும். இதனால், ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் போகக்கூடும்.

**(v) SSI/MSME ஒப்பந்ததாரர்களுக்கு EMD விலக்கு அளிக்காதது:** தேசிய சிறுதொழில் கழகத்தில் (National Small Industries Corporation - NSIC) பதிவு செய்யப்பட்ட மாநிலத்திற்கு வெளியே அமைந்துள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்கு, அவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான EMD/SD செலுத்துவதில் இருந்து தமிழக அரசால் விலக்கு அளிக்கப்பட்டது (செப்டம்பர் 2013). SSIகள்/ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (Micro, Small and Medium Enterprises - MSME) இத்தகைய விலக்குகளை மின்கொள்முதல் இணையதளம் வழங்குகிறது. விலக்குக்கான ஆவணங்கள் இணையதளத்தில் பதிவேற்றப்படவேண்டும்.

TNMSC ஆல் வெளியிடப்பட்ட (பிப்ரவரி/மார்ச் 2022) மாதிரியான இரண்டு டெண்டர்களில், ஒப்பந்ததாரர்கள்[5] தேவையான ஆவணங்களை பதிவேற்றியிருந்த போதிலும், அவை உள்நாட்டு நிறுவனங்கள் இல்லை என்ற அடிப்படையில் EMD விலக்கு அளிக்கப்படவில்லை.

டெண்டர்களில் ஒன்றில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் மற்றும் முதல் டெண்டரை ரத்து செய்ததன் விளைவாக மறு டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் **அட்டவணை 4.6ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.6: பெறப்பட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள்**

| டெண்டர் ID | ஒப்பந்ததாரரின் பெயர் | மேற்கோள் காட்டப்பட்ட விலை | குறிப்புகள் |
|---|---|---|---|
| 2022_TNMSC_222594_1 | M/s அனலிட்டிகல் டெக்னாலஜிஸ் லிமிடெட், பரோடா | ₹20 இலட்சம் | NSICன் கீழ் EMD விலக்கு கோரியதால் ஏலம் நிராகரிக்கப்பட்டது. |
| | M/s ஸ்பினோடெக் பிரைவேட் லிமிடெட் | ₹35 இலட்சம் | வரையறுக்கப்பட்ட டெண்டருக்கான விலை ₹25 இலட்சத்தை தாண்டியதால், டெண்டர் ரத்து செய்யப்பட்டது. |
| 2022_TNMSC_230305_1 | M/s அனலிட்டிகல் டெக்னாலஜிஸ் லிமிடெட், பரோடா | ₹35 இலட்சம் | மறு டெண்டரில், உள்நாட்டு நிறுவனப் பிரிவுக்கான EMD விலக்கை இணைத்து, இரண்டு ஒப்பந்ததாரர்கள் EMDயை அனுப்பி, விலை ஏலத்திற்குத் தகுதி பெற்றனர். விலைகள் வரையறுக்கப்பட்ட டெண்டர் வரம்பை மீறியதால், டெண்டரை ரத்து செய்ய 05/07/2022 அன்று பிழைத்திருத்தப்பட்டி வெளியிடப்பட்டது. |
| | M/s ஸ்பினோடெக் பிரைவேட் லிமிடெட் | ₹35 இலட்சம் | |

(ஆதாரம்: TNMSCன் பதிவுகள்)

[5] M/s குவாலிட்டி சயின்டி்ஃபிக் & மெக்கானிக்கல் ஒர்க்ஸ், ஹரியானா மற்றும் M/s அனலிட்டிகல் டெக்னாலஜிஸ் லிமிடெட், பரோடா

பதிவேடுகளை ஆய்வு செய்ததில் M/s அனலிட்டிகல் டெக்னாலஜிஸ் லிமிடெட், நிறுவனமானது, M/s ஸ்பினோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் முதல் டெண்டரில் மேற்கோள் காட்டிய அதிக விலையை அறிந்திருப்பது தெரியவந்தது. மேற்கோளில், விலை ₹15 இலட்சம் அதிகமாகக் குறிப்பிட்டது. இருப்பினும், வரையறுக்கப்பட்ட டெண்டர் பின்னர் ரத்து செய்யப்பட்டு, மின்கொள்முதல் இணையதளத்தில் திறந்த டெண்டரை வெளியிட முடிவு செய்யப்பட்டது.

முதல் டெண்டரின் போது EMD விலக்கு பரிசீலிக்கப்பட்டிருந்தால், M/s அனலிட்டிகல் டெக்னாலஜிஸ் லிமிடெட் வரையறுக்கப்பட்ட டெண்டரின் வரம்பிற்குள் L1 ஆக இருந்திருக்கும் என்று தணிக்கை கண்டறிந்தது.

EMD விலக்கு உள்நாட்டு நிறுவனங்களுக்கு மட்டுமே மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அல்ல என்ற நிபந்தனை அனைத்து பிந்தைய டெண்டர்களிலும் இணைக்கப்பட்டுள்ளது என்று TNMSC பதிலளித்தது (டிசம்பர் 2022). மாநிலத்திற்கு வெளியே உள்ள SSIகளுக்கு EMD/SD செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கத் தவறிய TNMSCன் நடவடிக்கை, SSI களை ஊக்குவிக்கும் அரசு உத்தரவுகளுக்கு முரணாக இருப்பதால், பதில் ஏற்கத்தக்கது அல்ல.

**(vi) ஒரே மாதிரியான டெண்டர்களுக்கான வெவ்வேறு நடைமுறைகள்:** அனைத்து டெண்டர்களின் பாரபட்சமற்ற மதிப்பீட்டிற்காக, ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை மதிப்பீடு செய்யும் போது கொள்முதல் துறைகள் ஒரே மாதிரியான முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆயினும், ஏழு டெண்டர்களை உள்ளடக்கிய மூன்று நேர்வுகளில், ஒரே மாதிரியான டெண்டர்களில் பங்கேற்ற அதே ஒப்பந்ததாரர்களுக்கும் ஒரே அளவுகோல்களுக்கு மதிப்பீடு வேறுபட்டது என்பது கவனிக்கப்பட்டது. இது சம்பந்தமாக, சேலம், பட்டு வளர்ப்பு இயக்குனரால் வெளியிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் கவனிக்கப்பட்ட விளக்க வழக்குகள் **அட்டவணை 4.7ல்** விவாதிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.7: இயந்திரங்கள்/உபகரணங்களை வாங்குவதற்கான டெண்டர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெவ்வேறு நடைமுறைகளின் இனங்கள்**

| வ. எண் | டெண்டர் ID (ஒப்பந்ததாரரின் பெயர்) | டெண்டர் நிலை | டெண்டர் மதிப்பீட்டின் மீதான தணிக்கைக் குறிப்புகள் |
|---|---|---|---|
| **நேர்வு 1:** | | | |
| 1 | 2018_SERI_114430_1 (M/s ஸ்டார் அசோசியேட்டட் டிரேடர்ஸ், பொள்ளாச்சி) | ஏலம் ஏற்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டது (பிப்ரவரி 2019). | இரண்டு டெண்டர்களிலும் சோதனை அறிக்கை (பிர்சா வேளாண் பல்கலைக்கழகம், ராஞ்சி) திருத்த ஆவணங்கள் இல்லாமல் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டது. ஆனால், முதல் டெண்டர் ஏற்கப்பட்ட நிலையில், இரண்டாவது டெண்டர் நிராகரிக்கப்பட்டது |
| 2 | 2020_SERI_188007_1 (M/s ஸ்டார் அசோசியேட்டட் டிரேடர்ஸ், பொள்ளாச்சி) | தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஏலம் நிராகரிக்கப்பட்டது (ஜனவரி 2021). | |

| வ. எண் | டெண்டர் ID (ஒப்பந்ததாரரின் பெயர்) | டெண்டர் நிலை | டெண்டர் மதிப்பீட்டின் மீதான தணிக்கைக் குறிப்புகள் |
|---|---|---|---|
| **நேர்வு 2:** | | | |
| 3 | 2018_SERI_114430_1 (M/s பார்ச்சூன் அக்ரோ இம்பெக்ஸ், பெங்களூர்) | தொழில்நுட்ப மதிப்பீட்டில் ஏலம் நிராகரிக்கப்பட்டது (ஜனவரி 2019). | 2018_SERI_114568_1 (ஜனவரி 2019) என்ற மற்றொரு டெண்டரில் சிதைக்கப்பட்ட/ தவறாக கையாளப்பட்ட ஆவணத்தைச் சமர்ப்பித்ததால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. இருப்பினும், ஒப்பந்ததாரர் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை. |
| 4 | 2021_SERI_211898_1 (M/s பார்ச்சூன் அக்ரோ இம்பெக்ஸ், பெங்களூர்) | ஏலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது (நவம்பர் 2021) மற்றும் விலை ஏலத் திறப்புக்குத் தகுதி பெற்றது. | ஒப்பந்ததாரர் முந்தைய ஒப்பந்தப்புள்ளியில் சிதைக்கப்பட்ட / தவறாக கையாளப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்ததைக் கருத்தில் கொள்ளாமல் ஏலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

(ஆதாரம்: பட்டு வளர்ப்பு இயக்குனரகத்தின் பதிவுகள், சேலம்)

நேர்வு 1ல் **(அட்டவணை 4.7)**, இரண்டாவது டெண்டருக்காக ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த சோதனை அறிக்கை முழுமையாகச் சரிபார்க்கப்பட்ட போதும், 3 ஆண்டுகளுக்கும் மேலாக புதுப்பிக்கப்படாமலோ அல்லது திருத்தப்படாமலோ இருந்ததால், இரண்டாவது டெண்டருக்கு நிராகரிக்கப்பட்டது என்று DoS (டிசம்பர் 2022) தெரிவித்துள்ளார். நேர்வு 2 **(அட்டவணை 4.7)** தொடர்பாக, ஒப்பந்ததாரரின் முந்தைய செயல்பாடுகள் சிறப்பாக இருந்ததால், இரண்டாவது டெண்டருக்கான ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும், எதிர்காலத்தில், தவறாக கையாளப்பட்ட (manipulated) பதிவுகளை சமர்ப்பிக்கும் நிறுவனங்கள் குறைந்தபட்சம் ஒரு வருட காலம் தடுப்புப்பட்டியலிட அரசிற்கு பரிந்துரைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. எதிர்கால டெண்டர்களில் பரிசீலிக்கப்படாமல் இருக்க, சிதைக்கப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்த ஒப்பந்ததாரரை தடுப்புப்பட்டியலில் சேர்க்கத் தவறியதாலும், சோதனை அறிக்கைகளை சரிபார்த்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பிடுதல் ஆகியவற்றில் துறை முரண்பட்ட முறையில் செயல்பட்டுள்ளதால், பதில் ஏற்கத்தக்கது அல்ல.

**(vii) TSC ஆல் நிராகரிக்கப்பட்டு, ஆனால் TAC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்:** WRD, PWD, சென்னையில் பின்வரும் இரண்டு நேர்வுகளில், டெண்டர் ஆய்வுக் குழுவின் (Tender Scrutiny Committee - TSC) தொழில்நுட்ப மதிப்பீட்டில் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு டெண்டர் ஏற்புக் குழுவால் (Tender Acceptance Committee - TAC) காரணங்கள் பதிவு செய்யப்படாமல் ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

ஒரு டெண்டரில், M/s வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (B1), M/s விஷ்ணு இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் (B2) மற்றும் M/s ஜவஹர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (B3) ஆகிய நிறுவனங்களிடமிருந்து மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

மற்ற இரண்டு ஒப்பந்ததாரர்கள் (B2 மற்றும் B3) ‘கருவிகள் மற்றும் ஆலை’ அளவுகோலில் தகுதி பெறவில்லை என்றும், B1 மட்டுமே அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பதாக அறிந்து, TSC B1 ஐக் தகுதிபெற்றதாகக் கண்டறிந்தது. அதைத் தொடர்ந்து, B3 மட்டுமே அனைத்து தகுதி அளவுகோல்களையும் பூர்த்தி செய்திருப்பதாக TAC முடிவு செய்து, B1 மற்றும் B2ன் ஒப்பந்தப்புள்ளிகளை, அவை ‘கருவிகள் மற்றும் ஆலை’ அளவுகோல்களை பூர்த்தி செய்யவில்லை என்ற அடிப்படையில் நிராகரித்தது. இதையடுத்து, டெண்டர் இறுதி செய்யப்பட்டு, B3 நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

மற்றொரு டெண்டரில், ஏழு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அவை, KKS & Co கோ (B1), VNS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (B2), தரணி ஹைடெக் புராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (B3), வெற்றி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (B4), V.மீனாள் (B5), P.அங்கமுத்து (B6) மற்றும் PRG கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (B7) ஆகும். TSC அறிக்கையின்படி, வகுப்பு-I நிகழ்நிலைச் சான்றிதழின் (Class-I Live Certificate) அளவுகோல்களை அவர்கள் பூர்த்தி செய்யத் தவறியதால், ஏழு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தத்திற்கு முன்-தகுதி பெறவில்லை. ஆயினும், TAC ஆனது, B1, B4 மற்றும் B5 ஆகிய மூன்று ஒப்பந்ததாரர்கள் வகுப்பு-I நிகழ்நிலைச் சான்றிதழ் அளவுகோல் உட்பட அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்ததாகக் கருதி, அவர்களின் விலை ஏலங்களை மதிப்பீடு செய்து, பட்டியலிடப்பட்ட L1 ஒப்பந்ததாரருக்கு அதாவது B5க்கு ஒப்பந்தத்தை வழங்கியது.

TSCன் முடிவை ரத்து செய்ய TAC க்கு அதிகாரம் இருந்தாலும், மேலே உள்ள இரண்டு நேர்வுகளிலும், மின்கொள்முதல் இணையதளத்தில் அதற்கான காரணங்கள் பதிவேற்றப்பட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நேர்வுகளிலும் காரணங்கள் பதிவு செய்யப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள், முறையான ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதைத் தடுப்பதோடு, மதிப்பீட்டு செயல்முறையின் புறநிலைத்தன்மையையும் பாதிக்கிறது.

## 4.4 முடிவுரை

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும், குறிப்பிட்ட காலத்திற்குள் விடுபட்ட ஏல ஆவணங்களை அழைப்பதற்கும் மின்கொள்முதல் மென்பொருளில் உள்ள விதிகள் பயன்படுத்தப்படவில்லை மற்றும் கைமுறையாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையே நம்பியிருந்தன, இது டெண்டர் செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மையின் நோக்கத்தை தோற்கடித்தது. BoQ டெம்ப்ளேட்டை வடிவமைப்பதில் உள்ள குறைபாடுகள், ஏல நிபந்தனைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யாமல் ஒப்பந்தங்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டில் உள்ள முரண்பாடுகள் ஆகியவை முறையான ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதைத் தடுப்பதோடு, டெண்டர் மதிப்பீட்டு செயல்முறையின் புறநிலைத்தன்மையையும் பாதித்தன. தணிக்கைக் குறிப்புகளை அரசு ஏற்றுக்கொண்டது (பிப்ரவரி 2023) மற்றும் உள்ளீடுகள், 1 ஏப்ரல் 2023

முதல் செயல்படுத்தப்படும் புதிய மின்கொள்முதல் இணையதளத்தில் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறியது.

## 4.5 பரிந்துரைகள்

- மின்கொள்முதல் இணையதளத்தில் உள்ள சிக்கல்களை NICக்கு தகுந்த தீர்வுக்காக எடுத்துச் செல்ல, ஒரு ‘பொறுப்பு மையத்தை’ அரசு நிறுவ வேண்டும்.
- ஒப்பந்ததாரர்கள் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவேற்றிய ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே டெண்டர்களை மதிப்பீடு செய்ய கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.
- டெண்டர் செயலாக்கத்தில் உள்ள முரண்பாடுகளுக்கு டெண்டர் அழைப்பு அதிகாரிகள் மற்றும் டெண்டர் செயல்பாட்டில் ஈடுபட்ட அலுவலர்கள் மீது அரசு பொறுப் நிர்ணயிக்க வேண்டும்.
- டெண்டர் மதிப்பீட்டாளர் மீதான பொறுப்பை நிர்ணயிப்பதற்கும், ஏல நிபந்தனைகளை அதன் கூறுகளாகப் பிரித்தளிப்பதற்கும், டெண்டர் மதிப்பீட்டிற்கான தானியங்கு முறை மற்றும் மீற முடியாத சரிபார்ப்புப் பட்டியலை உருவாக்குவதற்கும், மின்கொள்முதல் இணையதளத்தில் ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும்.
- அரசு, NIC மூலம், முழுமையான டெண்டர் மதிப்பீட்டை உறுதி செய்வதற்காக மின்கொள்முதல் இணையதளத்தில் SSIகள்/MSMEகள் ஒப்பந்ததாரர்கள் தொடர்பான கொள்கைகளை இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- முறைகேடுகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள் தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- கொள்முதல் துறைகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்கள், டெண்டர் செயலாக்கத்தில் வெளிப்படைத்தன்மைக்காக, அனைத்து மதிப்பீட்டு அறிக்கைகளும் முழுமையான வடிவில் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

# அத்தியாயம் V

## ஒப்பந்த செயல்முறையில் கூட்டு ஏலங்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு

## அத்தியாயம் V

## ஒப்பந்த செயல்முறையில் கூட்டு ஏலங்கள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு

**கூட்டு ஏலங்கள் அல்லது வணிகக் கூட்டமைப்பானது டெண்டர் செயல்முறையின் நோக்கத்தை எதிர்ப்பதோடு டெண்டர் போட்டிமுறைக்கு எதிரானதாகவும் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஆய்வில், பல பாங்குகள் (patterns) வெளிபட்டன, அதாவது ஒப்பந்தபுள்ளி சுழற்சி, குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள், கொள்முதல் நிறுவன கணினியிலிருந்தே ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், வெவ்வேறு ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், இரட்டை EMD, ஒப்பந்தபுள்ளி முறைகேடு மற்றும் வணிகக் கூட்டமைப்பு குறிக்கும் ஒப்பந்ததாரர்களின் குறியீட்டு தகவல் பதிவேற்றம் மற்றும் தொடர்ச்சியான EMD ஆவண எண்கள். ஒப்பந்ததாரர்களின் இந்த முறைகேடான நடைமுறைகள் மற்றும் டெண்டர் மதிப்பீடு/அனுமதிப்பு அதிகாரிகளின் தோல்வி, ஒப்பந்ததாரர் பங்கேற்பை அதிகரிக்க, செலவுகளைக் குறைக்க மற்றும் கொள்முதல் அமைப்பில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை பாதித்தன. தணிக்கையின் கண்டுபிடிப்புகளை அரசு ஏற்றுக்கொண்டது (பிப்ரவரி 2023) மற்றும் இந்த உள்ளீடுகள் 1 ஏப்ரல் 2023 முதல் செயல்படுத்தப்படும் புதிய இணையதள வடிவமைப்பிற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறியது.**

### 5.1 முன்னுரை

டெண்டர் செயல்முறையானது, சாதகமான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பொருட்கள் அல்லது சேவைகளை கொள்முதல் செய்வதை நோக்கமாக கொண்டது. ஆனால் ஒப்பந்ததாரர் ஆகக்கூடியவர்கள் இணைந்து அல்லது உடன்படிக்கையில் செயல்பட்டால் இந்த எண்ணம் தோற்கடிக்கப்படும். இது, இணைந்த அல்லது முறைகேடான ஏலக் கூட்டு டெண்டர் செயல்முறையின் நோக்கத்தை பாதிக்கிறது மற்றும் போட்டிமுறைக்கு எதிரானது.

'ஒப்பந்தபுள்ளி செயல்முறையில் மோசடிகள்' என்பது ஒரே மாதிரியான பொருட்களுக்கான உற்பத்தி அல்லது வணிகத்திலோ அல்லது சேவைகளை வழங்குதலிலோ ஈடுபடும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான போட்டியை நீக்குதல் அல்லது குறைத்தல் அல்லது டெண்டர்க்கான செயல்முறையை முழுமையாக பாதித்தல்[1] அல்லது ஒப்பந்த செயல்பாடுகள் தவறாகக் கையாளப்படுதல்.

'வணிகக் கூட்டமைப்பு' என்பது தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள், வழங்குநர்கள், வர்த்தகர்கள், சேவை வழங்குநர்களின் கூட்டை உள்ளடக்கியது. அவர்கள், உற்பத்தி, விநியோகம், விற்பனை, பொருட்களின் விலை அல்லது சேவை வழங்குதல் ஆகியவற்றை

[1] போட்டிச் சட்டம், 2002ன் பிரிவு 3 (3)க்கான விளக்கம்.

கட்டுப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்த முயற்சிகவோ தங்களுக்குளேயே உடன்பாடு கொண்டு செயல்படலாம்[2].

ஒரே டெண்டரில் கவனிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்த பாங்குகள், ஒப்பந்ததாரர்களின் கூட்டின் அடிப்படையில் குறைந்த பங்கேற்புக்கு ஒரு அடையாளம் ஆகும். இது ஆரோக்கியமான போட்டியைத் தடுக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் அலகுகளில், 1,260 மாதிரி டெண்டர்களின் ஆய்வு மற்றும் தரவு பகுப்பாய்வு ஏழு பாங்குகளை வெளிப்படுத்தியது. ஒப்பந்தபுள்ளி சுழற்சி, குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள், கொள்முதல் நிறுவன கணினியிலிருந்தே ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், வெவ்வேறு ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், இரட்டை EMD, ஒப்பந்தபுள்ளி முறைகேடு மற்றும் வணிகக் கூட்டமைப்பு குறிக்கும் ஒப்பந்ததாரர்களின் குறியீட்டு தகவல் பதிவேற்றம் மற்றும் தொடர்ச்சியான EMD ஆவண எண்கள் ஆகியவை ஒப்பந்தபுள்ளி செயல்முறையில் மோசடிகள் மற்றும் வணிகக் கூட்டமைப்பு ஆகியவற்றைக் குறிக்கும். மேலும், 347 டெண்டர்களில், கூட்டு ஏலமுறை இருக்கும் வகையில் குறைந்தது ஒரு பாங்கு இருந்தது கண்டறியப்பட்டது. இது **விளக்கப்படம் 5.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 5.1: பலவகைப்பட்ட கூட்டு ஏலமுறை கொண்ட டெண்டர்கள்**




மேலே குறிப்பிட்டுள்ள ஏலமுறையில் பாங்குகள், கொள்முதல் செய்யும் நிறுவனத்திற்கும் ஒப்பந்ததாரர்களுக்கும் இடையே உள்ள கூட்டைக் குறிக்கிறது மற்றும் ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பே ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளதை அடையாளம் காட்டும் ஒரு வடிவமாகும். பங்கேற்பு, செலவுகளைக் குறைத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதன் மூலம் கொள்முதல் முறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை பயனற்றதாக்கியது. டெண்டர்களின் மதிப்பீடு மற்றும் ஒப்புதலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் தோல்வியையும் இது சுட்டிக்காட்டுகிறது. இது சம்பந்தமாக கவனிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே விவாதிக்கப்படுகின்றன.

[2] போட்டிச் சட்டம், 2002ன் பிரிவு 2 ( c ) இல் வரையறுக்கப்பட்டுள்ளபடி.

## 5.2 ஒற்றை டெண்டருக்காக பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் எண்ணிக்கையின் பகுப்பாய்வு

இணையதளத்தில் வெளியிடப்பட்ட டெண்டர்களில் தகுதிபெற்ற ஒப்பந்ததாரர்கள் ஆகக்கூடியவர்கள் பங்கேற்பதை மின்னணு கொள்முதல் அமைப்பு கட்டுப்படுத்தாது. ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2022 வரை இணையதளத்தில் வெளியிடப்பட்ட 1.34 இலட்சம் டெண்டர்களின் தரவு பகுப்பாய்வில், 0.62 இலட்சம் டெண்டர்களில் (46.27 விழுக்காடு) இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மட்டுமே பெற்றுள்ளது கண்டறியப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் அலகுகளில் அத்தகைய குறைந்த ஒப்பந்தபுள்ளி பங்கேற்பு விவரங்கள் **அட்டவணை 5.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1: மாதிரி கொள்முதல் நிறுவனங்களில் ஒரே ஜோடி ஒப்பந்ததாரர்களுடன் டெண்டர்கள்**

| வ. எண். | அலுவலகம் | எண்ணிக்கை | | | | (E) நெடுவரிசையில் உள்ள ஜோடிகளின் (D) நெடுவரிசையில் உள்ள ஜோடிகளுக்கு உடனான விழுக்காடு | நெடுவரிசை (F) முதல் நெடுவரிசை (C) வரை உள்ள ஜோடிகளுக்கான டெண்டர்களின் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | இரண்டு ஒப்பந்தபுள்ளிகளுடன் டெண்டர்கள் | ஒப்பந்ததாரர்களின் ஜோடி | 10 அல்லது அதற்கு மேற்பட்ட டெண்டர்களுக்கு ஒப்பந்தபுள்ளி சமர்பித்த ஒப்பந்ததாரர்களின் ஜோடி | (E) நெடுவரிசையில் ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற டெண்டர்கள் | | |
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) = ((E)/(D)) x 100 | (H) = ((F)/(C)) x 100 |
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 7,607 | 2,102 | 158 | 3,658 | *7.51* | *48.09* |
| 2 | DRDA, கோயம்புத்தூர் | 918 | 168 | 26 | 543 | *15.48* | *59.15* |
| 3 | DRDA, கரூர் | 724 | 146 | 21 | 375 | *14.38* | *51.80* |
| 4 | DRDA, கிருஷ்ணகிரி | 1,216 | 202 | 28 | 758 | *13.86* | *62.34* |
| 5 | DRDA, பெரம்பலூர் | 299 | 63 | 6 | 169 | *9.52* | *56.52* |
| 6 | தமிழ்நாடு மின்சார வாரியம் (TamilNadu Electricity Board–TNEB) | 11,303 | 4,061 | 213 | 4,267 | *5.25* | *37.75* |
| 7 | DRDA, சேலம் | 1,647 | 302 | 46 | 1,057 | *15.23* | *64.18* |
| 8 | DRDA, தஞ்சாவூர் | 681 | 159 | 15 | 366 | *9.43* | *53.74* |
| 9 | TNCSC | 346 | 100 | 6 | 113 | *5.94* | *32.66* |

(ஆதாரம்: டெண்டர் தரவின் பகுப்பாய்வு)

**அட்டவணை 5.1ல்** இருந்து பின்வருவன கண்டறியப்படுகிறது:

- ஐந்து முதல் பதினாறு விழுக்காடு ஜோடி ஒப்பந்ததாரர்கள் 33 முதல் 64 விழுக்காடு வரை டெண்டர்களில் பங்கேற்றனர். இது ஒப்பந்ததாரர்களின் குறைவான பங்கேற்பு மற்றும் கூட்டு ஏல பங்கேற்பு சாத்தியக்கூறுகள் ஆகியவற்றைக் குறிக்கும்.

- DRDA, பெராம்பலூர் மற்றும் TNCSCல், ஆறு ஜோடிகள் முறையே 169 மற்றும் 113 டெண்டர்களில் பங்கேற்றனர். இந்த டெண்டர்களில், DRDA, பெரம்பலூரில் 50:50 என்ற விகிதத்தில் மற்றும் TNCSCல் 55:45 விகிதத்தில் பங்கேற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களிடையே ஒப்பந்தங்கள் பகிரப்பட்டன.

300 க்கும் மேற்பட்ட டெண்டர்களில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மட்டுமே பெற்ற மாதிரி கொள்முதல் நிறுவனங்களின் ஆய்வில், அதே ஜோடி ஒப்பந்ததாரர்கள் அதிக எண்ணிக்கையிலான டெண்டர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது மற்றும் ஒப்பந்தங்களில் பெரும்பான்மை பங்கை பெற்றது கண்டறியப்பட்டது.

## 5.3 சுழற்சி முறையில் L1 ஆகும் ஒப்பந்ததாரர்கள் (ஏலமுறையில் சுழற்சி)

ஏலமுறையில் சுழற்சி என்பது டெண்டரின் வெற்றியாளர்களை ஒரு சுழற்சி அடிப்படையில் முன்கூட்டியே தீர்மானிக்க ஒப்பந்ததாரர்களிடையே உள்ள ஏற்பாடாகும். மேலும், இது டெண்டரின் முறைகேடுகளுக்கு பின்பற்றப்படும் முறைகளில் ஒன்றாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு கொள்முதல் அலகுகளில் மாதிரி டெண்டர்களை ஆய்வு செய்ததில், கீழே விவாதிக்கப்பட்டபடி 20 டெண்டர்களில் ஒப்பந்தபுள்ளி சுழற்சி நிகழ்ந்தது தெரியவந்தது:

(i) நாகப்பட்டினம் மாவட்டத்தில் ‘5,000 மெட்ரிக்டன் கிடங்குகளை மறுகட்டமைக்கும்’ பணிக்காக 15 டெண்டர்களை TNCSC, சென்னை வெளியிட்டது (ஜனவரி 2019). எட்டு டெண்டர்கள் தலா மூன்று ஒப்பந்தங்களைப் பெற்ற நிலையில், மீதமுள்ள ஏழு டெண்டர்கள் தலா இரண்டு ஒப்பந்தங்களைப் பெற்றன. மூன்று ஒப்பந்தங்களைக் கொண்ட எட்டு டெண்டர்களில், ஒவ்வொரு இனத்திலும் ஒரு ஒப்பந்ததாரர் EMD செலுத்தவில்லை. இது, அவ்வொப்பந்தப்புள்ளி போலியானதாகவோ மேற்போக்கானதாகவோ இருக்கக்கூடும் ஆதலால் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. எனவே, பதினைந்து டெண்டர்களில் ஒவ்வொன்றிற்கும் இரண்டு தகுதியான ஒப்பந்ததாரர்கள் மட்டுமே இருந்தனர். மொத்தம், பத்து ஒப்பந்ததாரர்கள் பதினைந்து டெண்டர்களுக்கு ஒப்பந்தம் சமர்ப்பித்தனர்.

ஒப்பந்த முறையுடன் கூடிய டெண்டர் ஆவணங்களை ஆய்வு செய்ததில், மேலே குறிப்பிட்டுள்ள 10 ஒப்பந்ததாரர்கள் ஐந்து வெவ்வேறு ஜோடிகளாக செயல்படுவதைக் காட்டியது. ஐந்து ஜோடிகளில் ஒவ்வொன்றும் எப்போதும் ஒரே டெண்டரில் பங்கேற்றனர் மற்றும் **அட்டவணை 5.2ல்** காட்டப்பட்டுள்ளபடி அவர்கள் பங்கேற்ற டெண்டர் எண்ணிக்கையில் பாதியில் வெற்றிகரமாக இருந்தன.

**அட்டவணை 5.2: சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரங்கள் மற்றும் 15 டெண்டர்களில் முடிவு**

| ஜோடி எண். | ஒப்பந்ததாரர்கள் | சமர்ப்பிக்கப் பட்ட ஒப்பந்தபுள் ளிகள் | L1 ஆக பங்கேற் றது | L2 ஆக பங்கேற்றது |
|---|---|---|---|---|
| 1 | சின்னசாமி பில்டர்ஸ், தஞ்சாவூர் | 4 | 2 | 2 |
| | RK இன்ஜினியரிங், சென்னை | 4 | 2 | 2 |
| 2 | S. சாம்பசிவம், தஞ்சாவூர் | 4 | 2 | 2 |
| | P. முத்துவேல், திருவாரூர் | 4 | 2 | 2 |
| 3 | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங், திருவாரூர் | 3 | 2 | 1 |
| | MSG இன்ஃப்ரா, திருவாரூர் | 3 | 1 | 2 |
| 4 | G.ஜஷ்பால், நீடாமங்கலம் | 2 | 1 | 1 |
| | செந்தூர் இன்ஃப்ராடெக் மற்றும் பில்டர்ஸ், ஈரோடு | 2 | 1 | 1 |
| 5 | S நல்லதம்பி, தஞ்சாவூர் | 2 | 1 | 1 |
| | M/s U.G. கன்ஸ்ட்ரக்ஷன், தஞ்சாவூர் | 2 | 1 | 1 |

(ஆதாரம்: TNCSC வழங்கிய பதிவேடுகள்)

**அட்டவணை 5.2ல்** இருந்து பின்வருவன கண்டறியப்பட்டது:

- அனைத்து ஒப்பந்தங்களும் ஒரே நாளில் 5 முதல் 10 மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்டன, இருப்பினும் ஒப்பந்ததாரர்கள் வெவ்வேறு புவியியல் இடங்களைச்[3] சேர்ந்தவர்கள். பத்து ஒப்பந்ததாரர்களில் ஆறு பேர் IP முகவரி ***117.241.31.37***ல் இருந்து தங்கள் ஒப்பந்தங்களைச் சமர்ப்பித்தனர். மீதமுள்ள ஒப்பந்ததாரர்கள் IP முகவரி ***117.241.91.82***ல் இருந்து தங்கள் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்தனர்.
- வேலை வகை, இடம் மற்றும் அனைத்து டெண்டர்களுக்கும் துறையின் மதிப்பீட்டு விலைகள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், பத்து ஒப்பந்ததாரர்களும், அவர்கள் L2 ஒப்பந்ததாரர்களாக இருந்த நேர்வுகளில் L1 ஆக இருந்த நேர்வுகளுடன் ஒப்பிடும் போது, தொடர்ந்து அதிக விலைக்கான ஏலங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

(ii) மற்றொரு வேலையில், TNCSC, சென்னை மூன்று டெண்டர்கள் வெளியிட்டது (நவம்பர் 2020).அவை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் முறையே '10 எண்கள் 20 எண்கள் மற்றும் 20 எண்கள் அசையும் வகை மற்றும் திறந்த பீடம் அளவிற்கு நெல் சேமிப்பு உடனான கால்வலூம் தாள் ஒதுக்கிடம் பொருத்திய இடம்பெயரத்தக்க நெல் கொட்டகைக்கான (Pre-fabricated Galvalume sheet shelter with movable type to open plinth cap paddy storage)' டெண்டர்கள் ஆகும். மூன்று டெண்டர்களின் அளவுகளின் பட்டியல்(BoQ) அதே 30 பொருட்களையும், அதற்கான ஒத்த மதிப்பிடப்பட்ட பொருட்களின் விலையைக் கொண்டிருந்தன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரங்கள் மற்றும் டெண்டர்களின் முடிவு **அட்டவணை 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

[3] சென்னை, ஈரோடு, நீடாமங்கலம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர்.

**அட்டவணை 5.3: TNCSCன் மூன்று டெண்டர்களில் பங்கேற்ற ஒப்பந்ததாரர்களின் விவரங்கள்**

| வ. எண் | டெண்டர் ID மற்றும் டெண்டர் மதிப்பு | மாவட்டம் | பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்ததாரர்–களின் எண்ணிக்கை | L1 | L2 |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2020_TNCSC_184349_1 ₹1,00,00,000 | நாகபட்டினம் | 10 | 2 | P.முத்துவேல் | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் |
| 2 | 2020_TNCSC_184370_1 ₹2,00,00,000 | தஞ்சாவூர் | 20 | 2 | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் | P.முத்துவேல் |
| 3 | 2020_TNCSC_184403_1 ₹2,00,00,000 | திருவாரூர் | 20 | 2 | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் | P.முத்துவேல் |

(ஆதாரம்: TNCSC வழங்கிய பதிவேடுகள்)

ஒப்பந்ததாரர்கள் மேற்கோள் காட்டிய பொருள் வாரியான விலைவிகிதங்களில் உள்ள ஒற்றுமை கீழே உள்ள **அட்டவணை 5.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது. பங்கேற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும், அவர்கள் L1 ஆக தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்களில் அதே குறைந்த விலையையும், தோல்வியடைந்த (L2) டெண்டர்களில் அதிக விலைவிகிதத்தையும் மேற்கோள் காட்டியுள்ளனர்.

**அட்டவணை 5.4: மேற்கோள் காட்டப்பட்ட கட்டணங்களின் பொருட்கள் வாரியான விவரங்கள்**

| பணி விவரம் | 2020_TNCSC_184370_1 | | 2020_TNCSC_184403_1 | | 2020_TNCSC_184349_1 | |
|---|---|---|---|---|---|---|
| | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் (L1) | P.முத்துவேல் (L2) | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் (L1) | P.முத்துவேல் (L2) | P.முத்துவேல் (L1) | ஹிமேஷ்வர் இன்ஜினியரிங் (L2) |
| | (In ₹) | | | | | |
| JCB மூலம் பூமியை தோண்டி சமன் செய்தல் | 990.00 | 1,008.00 | 990.00 | 1,008.00 | 990.00 | 1,008.00 |
| அடித்தளத்திற்கான பூமி குடைவு வேலை (Earth Work excavation for foundation) | 205.25 | 209.00 | 205.25 | 209.00 | 205.25 | 209.00 |
| அடித்தளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் 1:5:10 | 5,352.90 | 5,450.00 | 5,352.90 | 5,450.25 | 5,352.90 | 5,450.00 |

(ஆதாரம்: TNCSC வழங்கிய பதிவேடுகள்)

மேலும், இரண்டு ஒப்பந்ததாரர்களின் மின்கொள்முதல் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பிற டெண்டர்களுக்கு இணைய சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள முகவரி, கதவு எண்.10/30, பாலன் தெரு, வடுவூர் மற்றும் கதவு எண்.10/31, பாலன் தெரு, வடுவூர், ஆகும். ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த ஒப்பந்தங்களில் ஒருவருக்கு ஒருவர் தாக்கம் ஏற்படுத்தும் நிலையில் இருந்தனர் மற்றும் கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொண்டனர் என்பதை இது குறிக்கும்.

(iii) பெரம்பலூர் DRDAல், தமிழ்நாடு கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் - 2019-20ன் கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலை மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக மின்கொள்முதல் முறையில் 19 தொகுப்புகளில் 22 பணிகளுக்கான டெண்டர்கள் அழைக்கப்பட்டன (நவம்பர் 2019). தொழில்நுட்ப விவரக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களும் ஒவ்வொரு பணிக்கான மதிப்பீடு விலையும் அனைத்து தொகுப்புகளுக்கும் ஒத்ததாகவே இருந்தது.

நான்கு ஒப்பந்ததாரர்கள், (இரண்டு ஜோடிகள்) 12 தொகுப்புகளில் பங்கேற்றனர் மற்றும் ஒப்பந்தம் வழங்கப்பட்டதில் உள்ள பாங்கு **அட்டவணை 5.5ல்** காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5: பெரம்பலூர் DRDAல் 22 பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்ட முறை**

| ஒப்பந்ததாரரின் பெயர் (திரு) | | தொகுப்புகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | பங்கேற்றார் | L1 ஆக | L2 ஆக |
| ஜோடி 1 | பன்னீர்செல்வம் | 7 | 4 | 3 |
| | கிருஷ்ணசாமி | 7 | 3 | 4 |
| ஜோடி 2 | ஜனார்த்தனன் | 5 | 3 | 2 |
| | செந்தில்குமார், சிறுவயலூர் | 5 | 2 | 3 |

(ஆதாரம்: DRDA, பெரம்பலூர் வழங்கிய பதிவேடுகள்)

இந்த நான்கு ஒப்பந்ததாரர்களும் இரண்டு IP முகவரிகளிலிருந்து (*223.182.214.145* மற்றும் *45.126.252.194*) 12 தொகுப்புகளுக்கான (24 ஒப்பந்தபுள்ளிகள்) டெண்டர் ஆவணங்களைப் பதிவேற்றினர். ஜோடி 1ன் 12 தொகுப்புகளில் 6, IP முகவரி ***45.126.252.194*ல்** இருந்து பதிவேற்றப்பட்டது (**அட்டவணை 5.5**).

இரண்டு தொகுப்புகளில் ஜோடி 1 **(அட்டவணை 5.5)** சமர்ப்பித்த அமைப்பு உருவாக்கப்பட்ட பொருட்களுக்கான அளவு ஒப்பீட்டு (Bill of Quantity (BoQ))அறிக்கைகளை மேலும் பகுப்பாய்வு செய்ததில், ஒப்பந்ததாரர்கள் மேற்கோள் காட்டிய விலைகள் ஒரே மாதிரியாக இல்லை என்பதும், ஒப்பந்ததாரர்கள் அவர்கள் L1 ஆக இருந்த தொகுப்பில் அனைத்து பொருட்களிலும் குறைவான விலையையே மேற்கோள் காட்டியதும், L2 ஆக இருந்த தொகுப்பில் அதே வேலைப் பொருட்களுக்கு அதிக விலை மேற்கோள் காட்டியதும் தெரியவந்தது. ஒப்பந்ததாரர்கள் மேற்கோள் காட்டிய பொருள் வாரியான விலைகளில் உள்ள ஒற்றுமைகள், ஒப்பந்ததாரர்கள் ஒருவருக்கொருவர் குறிப்பிட்ட விலைகளைப் பற்றி அறிந்திருப்பதைக் குறிக்கிறது மற்றும் கூட்டு ஏலமுறையில் ஈடுபட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.

## 5.4 குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள்

போட்டியிடும் ஒப்பந்ததாரர்களில் குடும்ப உறுப்பினர்களாக இருக்கும் போது ஒரு ஒப்பந்ததாரர் மற்றொரு ஒப்பந்ததாரர் மீது தாக்கம் ஏற்படுத்த முடியும் என்பதால் ஒப்பந்தபுள்ளிகளில் முறைகேடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உள்ளது. **அட்டவணை 5.6ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களில் மாதிரி செய்யப்பட்ட 35 டெண்டர்களில் குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட ஒப்பந்ததாரர்களால் அதே டெண்டருக்கான ஒப்பந்தபுள்ளிகள் இருப்பது கண்டறியப்பட்டது. அத்தகைய இரண்டு இனங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

அட்டவணை 5.6: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களின் பங்கேற்பின் நிறுவன வாரியான விவரங்கள்

| வ. எண் | மாதிரி அலுவலகம் | குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்களின் டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிர்வாக பொறியாளர், பொதுப்பணித்துறை, wro, gwc சேலம் (உலக வங்கி டெண்டர்கள்) | 6 |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் | 1 |
| 3 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 27 |
| 4 | நபார்டு மற்றும் கிராமப்புற சாலை வட்டம், நெடுஞ்சாலைத் துறை, சேலம் | 1 |
| | மொத்தம் | 35 |

(ஆதாரம்: மாதிரி அலகுகளால் வழங்கப்பட்ட பதிவேடுகள்)

(i) நீர்வளத்துறை, நிலத்தடி நீர் பிரிவு, சேலம், தேசிய நீரியல் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் ஆறு டெண்டர்களை வெளியிட்டது. ஒரு ஒப்பந்ததாரர் வேறு ஒப்பந்ததாரருடன் நேரடியாகவோ அல்லது பொதுவான மூன்றாம் தரப்பினரின் மூலமாகவோ, அவரது ஏலத்தில் தாக்கம் ஏற்படுத்தும் நிலையில் அல்லது ஒப்பந்தபுள்ளி செயல்முறை தொடர்பாக முதலாளியின் முடிவுகளை பாதிக்கும் நிலையில் தொடர்பு கொண்டிருந்தால், டெண்டர் செயமுறை பொருத்த மட்டில், இவ்வொப்பந்ததாரர் முரண்படும் கருத்துக்கள் கொண்டவராக கருதப்படலாம் என்று டெண்டர் (Notice Inviting Tender NIT) அழைப்பு அறிவிப்பு குறிப்பிடுகிறது. மேலும், உலக வங்கியின் கொள்கையின்படி, பங்குபெறும் நிறுவனத்திற்கு கருத்து வேற்றுமை[4] (conflict of interest) இருத்தல் கூடாது. இருப்பினும், NIT மற்றும் உலக வங்கிக் கொள்கையை மீறி, குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் (ஒரு டெண்டரில் தந்தை/மகன் மற்றும் ஐந்து டெண்டரில் கணவன்/மனைவி) சமர்ப்பித்த ஒப்பந்தபுள்ளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு டெண்டர்கள் இறுதி செய்யப்பட்டன.

ஒப்பந்தபுள்ளிகள் உரிய நடைமுறையைப் பின்பற்றி மதிப்பீடு செய்யப்பட்டு, குறைந்த ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தபுள்ளி வழங்கப்பட்டது என்று துறை பதிலளித்தது மற்றும் தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்டு எதிர்கால இணக்கத்திற்காக பின்பற்றப்படும் என்று துறை பதிலளித்தது (செப்டம்பர் 2022).

4 உலக வங்கியின் வழிகாட்டுதல்களின் உட்பிரிவு 1.6 மற்றும் 1.7: உலக வங்கி கடன் வாங்குபவர்களால், IBRD கடன்கள் மற்றும் IDA கடன்கள் மற்றும் மானியங்கள் ஆகியவற்றின் கீழ் பொருட்கள், வேலைகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளை வாங்குதல், ஜனவரி 2011, ஜூலை 2014ல் (திருத்தப்பட்டது).

(ii) இரண்டு ஒப்பந்ததாரர்கள், மல்லையன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் மற்றும் M. துரைசாமி ஆகியோர் ஒரே முகவரி மற்றும் கைபேசி எண்ணுடன் மின்கொள்முதல் அமைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த ஒப்பந்ததாரர்கள் கோயம்புத்தூர் DRDA வெளியிட்ட 27 டெண்டர்களில் கலந்து கொண்டனர். அனைத்து டெண்டர்களிலும் மல்லையன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் L1 ஆக தேர்ந்தெடுக்கப்பட்டது. டெண்டர் ஆவணங்களை ஆய்வு செய்ததில், மல்லையன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் (D. ஜெயக்குமார்) M.துரைசாமியின் மகன் என்பது தெரியவந்தது. 27 டெண்டர்களுக்கான ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்கும் போது, ஒப்பந்ததாரர்கள் இருவரும் திரு. M. துரைசாமியின் ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றினர். 26 டெண்டர்களில் 20ல் ஒரே IP முகவரியில் இருந்து ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வாறு, மேற்கண்ட டெண்டர்களில் கூட்டு ஏல செயல்முறை நடந்ததாகத் தணிக்கை கருதுகிறது.

DRDA, கோயம்புத்தூர் சுட்டிக்காட்டிய குறிப்பை ஏற்று (அக்டோபர் 2022), தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த கையேடு ஆவணங்களைக் கொண்டு மட்டுமே தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொண்டது என்றும் இணையதளத்தில் பதிவேற்றிய ஆவணங்களைக் கொண்டு அல்ல என்றும் பதிலளித்து. தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட இனங்களில் தொழில்நுட்ப மதிப்பீடு பிழையானது என்று ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியது.

டெண்டர்களின் மதிப்பீட்டின் போது கருத்து வேற்றுமை தொடர்பான உலக வங்கி கொள்கை கருதப்படாததால் துறையின் பதில் ஏற்கத்தக்க தல்ல.

(iii) தமிழ் நாடு நெடுஞ்சாலைகள் கையேடு பகுதி Iன் பத்தி 103.16, ஒரு தனிநபரோ அல்லது தனிப்பட்ட நிறுவனமோ ஒரே பணிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட டெண்டர்களை சமர்ப்பிக்கும் போது, அந்த ஒப்பந்ததாரருக்கு இத்தனிநபருடனோ அல்லது நிறுவனத்துடனோ தொடர்பு இருக்குமேயானால், ஒப்பந்ததாரர் தகுதியிழப்புக்கு பரிசீலிக்கப்படுவார். நபார்டு மற்றும் ஊரக சாலை வட்டம், நெடுஞ்சாலைத் துறை, சேலம், 'ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்கான (3 பணிகள்)' டெண்டரை வெளியிட்டது. இரண்டு ஒப்பந்ததாரர்கள், அதாவது M/s P. ரெயின் கட்டுமான நிறுவனம் பிரைவேட். லிமிடெட் மற்றும் திரு P. ரெயின் ஆகியோர் டெண்டரில் பங்கேற்றனர். M/s P. ரெயின் கட்டுமான நிறுவனம் பிரைவேட். லிமிடெட்க்கு ₹5.70 கோடி மதிப்பில் பணி வழுங்கப்பட்டது (ஆகஸ்ட் 2020). இணையதளத்தில் பதிவேற்றிய ஆவணங்களை ஆய்வு செய்ததில், L1ன் நிர்வாக இயக்குநர் (திரு P. ரஹீம்) திரு P. ரெயின்–ன் (L2) மகன் என்பது தெரியவந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட டெண்டரில் ஒப்பந்ததாரர்கள் இருவரும் தனித்தனியாக தனிப்பட்ட தனிநபராகவும் ஒரு நிறுவனமாகவும் பதிவு

செய்யப்பட்டுள்ளனர் என்று துறை பதிலளித்தது. மேலும், பெரும்பாலான ஒப்பந்ததாரர்கள் மலைப்பகுதிகளில் நடக்கும் பணிகளில் பங்கேற்க ஆர்வம் காட்டுவதில்லை என்றும், இதுவே மேற்கண்ட டெண்டரில் உள்ள நிலையாகவும், பங்கேற்பு ஏலத்தில் குறைந்த ஏலதாரர்களுக்கு டெண்டர் வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தது.

டெண்டர்களை இறுதி செய்யும் போது மேற்படி விதிகளை கவனத்தில் கொள்ளாததால் துறையின் பதில் ஏற்கத்தக்க தல்ல.

## 5.5 ஒரே குழும நிறுவனங்களின் டெண்டர் பங்கேற்பு

பெருநகர சென்னை மாநகராட்சியின், வில்லிவாக்கம் இறைச்சிக் கூடத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையின் (Effluent Treatment plant) வருடாந்திர பராமரிப்பு பணிக்கான டெண்டர் ஆண்டிற்கு ₹10.55 இலட்சம் மதிப்பில் ஜூன் 2021ல் வெளியிடப்பட்டது. மூன்று ஒப்பந்ததாரர்கள் டெண்டரில் பங்கேற்றனர். அதன் விவரங்கள் **அட்டவணை 5.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.7: ஒப்பந்ததாரர் பங்கேற்பு விவரங்கள்**

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | குறிப்பிடப்பட்ட தொகை (₹ இலட்சத்தில்) | | தரவரிசை |
|---|---|---|---|---|
| | | மாதத்திற்கு | வருடத்திற்கு | |
| 1 | M/s CPC க்ரீன் எனர்ஜி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் | 0.90 | 10.80 | L1 |
| 2 | M/s கிரையோஜெனிக் ப்ரோஸஸ் கண்ட்ரோல் (CPC) | 0.95 | 11.40 | L2 |
| 3 | M/s ஸ்ரீ வெங்கடேஸ்வரா கன்ஸ்ட்ரக்ஷன் | 1.10 | 13.20 | L3 |

(ஆதாரம்: பெருநகர சென்னை மாநகராட்சியின் பதிவேடுகள்)

₹10.55 இலட்சம் செலவில் L1 ஒப்பந்ததாரருக்கு பேச்சுவார்த்தை நடத்திய பின் பராமரிப்புப் பணி வழங்கப்பட்டது (ஜூன் 2021). பணி முடிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு ஆகஸ்ட் 2022ல் தொகை செலுத்தப்பட்டது. M/s CPC க்ரீன் எனர்ஜி இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் (L1) என்பது கிரையோஜெனிக் ப்ரோஸஸ் கண்ட்ரோலின் ஒரு அலகு என்று ஒப்பந்ததாரரின் பணி நிறைவு அறிக்கையிலிருந்து தெரியவந்துள்ளது. மேலும், L1 மற்றும் L2 சமர்ப்பித்த ஒப்பந்தபுள்ளி ஆவணங்களின் பகுப்பாய்வில் (i) இரு நிறுவனங்களுக்கும் ஒரே முகவரி கொண்டிருந்தன (ii) இரு நிறுவனங்களும் ஒரே IP முகவரியிலிருந்து (*117.221.22.178*) ஒருவருக்கொருவர் சமர்ப்பித்த நான்கு நிமிடங்களுக்குள் தங்கள் ஒப்பந்தபுள்ளிகளைச் சமர்ப்பித்தன மற்றும் (iii) இரு நிறுவனங்களின் EMD ஆவணங்களும் தொடர்ச்சியான எண்களுடன் ஒரே நாளில் (24-06-2021) ஒரே நபரால் எடுக்கப்பட்டது என்றும் கண்டறியப்பட்டது.

எனவே, இரண்டு நிறுவனங்கள் (L1 மற்றும் L2) சகோதர நிறுவனங்களாக பங்கேற்பதும் (ஒரே நிறுவனக் குழுவைச் சேர்ந்தவை), அவற்றில் ஒன்று L1 ஆக மாறுவதும் ஒப்பந்ததாரர்களிடையே கூட்டுச் சேர்வைக் குறிக்கிறது.

பெறப்பட்ட 1.34 இலட்சம் செல்லுபடியாகும் ஒப்பந்தப்புள்ளிகளின் தரவு பகுப்பாய்வில் 208 டெண்டர்களில் சமர்ப்பிக்கப்பட்ட 444 ஒப்பந்தபுள்ளிகள் இணையதளத்தில் பதிவுசெய்யப்பட்ட அதே முகவரியைக் கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்டன என்றும் அதே IP முகவரியிலிருந்து சமர்ப்பிக்கப்பட்டன என்றும் கண்டறியப்பட்டது.

(i) மாநிலத்தின் வெவ்வேறு புவியியல் இடங்களைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியில் இருந்து ஒப்பந்தபுள்ளிங்களைச் சமர்ப்பிப்பது அல்லது (ii) துறையும் இக்கூட்டில் பங்குடையது என்பதைக் குறிக்கும் வகையில் ஒப்பந்தபுள்ளிகளைத் துறையின் வளாகத்திலிருந்து சமர்ப்பிப்பது ஆகிய காரணங்களால் மேற்கூறிய நிகழ்வுகள் இது போன்ற கூட்டு ஏலமுறை இருபத்தை சுட்டிக்காட்டுகின்றன.

## 5.6 IP முகவரியிலிருந்து கண்டறியப்பட்ட முரணான ஏல பங்கேற்பு முறைகள்

இணைய நெறிமுறை (Internet Protocol - IP) முகவரி, பிணையத்தில் (network) உள்ள எந்த சாதனத்தையும் அடையாளம் காண உதவும் எண்களின் தொடர். கணினிகள் இணையம் மற்றும் பிற நெட்வொர்க்குகளில் ஒன்றோடு ஒன்று தொடர்புகொள்வதற்கு IP முகவரிகளைப் பயன்படுத்துகின்றன.

மின்கொள்முதல் அமைப்பு ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கப்பட்ட கணினியின் IP முகவரியைப் பதிவுசெய்கிறது. ஒரே IP முகவரியில் இருந்து ஒரே டெண்டருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தபுள்ளிகளை சமர்ப்பிப்பது, ஒப்பந்தபுள்ளிகளை சமர்ப்பிக்க ஒரே கணினி பயன்படுத்தப்பட்டது என்பதைக் காட்டுகிறது. இது ஒப்பந்ததாரர்களிடையே கூட்டு இருப்பதின் குறிகாட்டியாகும். டெண்டர் அழைக்கும் நிறுவனத்தின் IP முகவரிகளில் இருந்து ஒப்பந்தபுள்ளிகள் சமர்பிக்கப்பட்டால், ஒப்பந்ததாரர்களுக்கும் துறை அதிகாரிகளுக்கும் இடையே கூட்டு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அத்தகைய இனங்கள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்படுகின்றன.

### 5.6.1 கொள்முதல் நிறுவனத்தின் கணினிகளைப் பயன்படுத்தி ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பித்தல்

சேலம் DRDAல், 2016–22 ஆண்டுகளில் மின்கொள்முதல் முறையில் நிதி மதிப்பீட்டு நிலையை எட்டிய 73 விழுக்காடு டெண்டர்கள் (1,741 டெண்டர்களில் 1,265 டெண்டர்கள்) சேலம், DRDAன் IP முகவரியில் இருந்து பதிவேற்றம் செய்யப்பட்டன (**அட்டவணை 5.8**).

**அட்டவணை 5.8: அதே IP முகவரியைப் பயன்படுத்தி பதிவேற்றப்பட்ட டெண்டர்களின் விவரங்கள்**

| IP முகவரி | பதிவேற்றப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|
| *45.116.113.120* | 879 |
| *45.116.113.121* | 259 |
| *45.116.114.129* | 89 |
| *45.116.114.15* | 38 |
| மொத்தம் | **1,265** |

(ஆதாரம்: மின்கொள்முதல் அமைப்பின் தரவு)

மின்கொள்முதல் அமைப்பு பாதுகாப்பான பொது விசை உள்கட்டமைப்பு மறைகுறியீட்டு முறையாகக் கருதப்படுவதால் (secured Public Key Infrastructure encrypted system), துறையின் வளாகத்தில் உள்ள கொள்முதல் நிறுவனத்தின் கணினிகளைப் பயன்படுத்தி ஒப்பந்தபுள்ளிகளைச் சமர்ப்பிப்பது தரவு ரகசியத்தன்மையை பாதிக்கிறது.

இது சுட்டிக்காட்டப்பட்டபோது, ஒப்பந்ததாரர்களால் DRDA வளாகத்தில் ஒப்பந்தபுள்ளிகளை சமர்பிக்க அனுமதி அளிக்கப்பட்டது, புதிய ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தபுள்ளி ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றுவதற்கு வழிகாட்டு வகையாகும் என்றும், எதிர்காலத்தில் இந்த நடைமுறையிலிருந்து விலகுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கொள்முதல் நிறுவனம் (நவம்பர் 2022) பதிலளித்தது.

DRDA பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் 73 விழுக்காடு அதன் வளாகத்தில் இருந்தே சமர்ப்பிக்கப்பட்டவை என்பதாலும், இது ஒப்பந்ததாரர்கள் மற்றும் கொள்முதல் நிறுவனப் பணியாளர்களிடையேயான கூட்டைக் குறிக்கும் வகையிலும், போட்டித் தன்மைக்கு எதிரான நடைமுறையாகவும் இருப்பதாலும் துறையின் பதில் ஏற்கத்தக்க தல்ல.

நிறைவுக் கூட்டத்தில் (பிப்ரவரி 2023), கொள்முதல் நிறுவனத்தின் பதில் பொருத்தமானதல்ல என்று அரசு அறிவித்தது.

### 5.6.2 ஒரே IP முகவரியிலிருந்து வெவ்வேறு ஒப்பந்ததாரர்களால் டெண்டருக்கான ஒப்பந்தபுள்ளி சமர்பிக்கப்படுதல்

வெவ்வேறு புவியியல் இடங்களிலுள்ள வெவ்வேறு ஒப்பந்ததாரர்களால் ஒரே IP முகவரியிலிருந்து ஒரு டெண்டருக்கான ஒப்பந்தபுள்ளிகளை குறுகிய காலத்திற்குள் சமர்ப்பிப்பது கூட்டு ஏல முறை மற்றும் வணிகக் கூட்டமைப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது.

மின்கொள்முதல் அமைப்பு மூலம் செயலாக்கப்பட்ட டெண்டர்களின் தரவு பகுப்பாய்வில், இணையதளத்தில் வெளியிடப்பட்ட 1.34 இலட்சம் டெண்டர்களில், 0.44 இலட்சம் டெண்டர்களில் (33 விழுக்காடு) ஒரு டெண்டருக்காக ஒரே IP முகவரியிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் எண்ணிக்கை 2 முதல் 33 வரை இருப்பது தெரியவந்தது.

மாதிரி கொள்முதல் நிறுவனங்களில், ஒரே IP முகவரியிலிருந்து 232 மாதிரி டெண்டர்களில் ஒப்பந்தப்புள்ளிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விவரங்கள் **இணைப்பு 5.1** காட்டப்பட்டுள்ளன. இரண்டு விளக்க நேர்வுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

DRDA, சேலத்தில், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி (Infrastructure Gap Filling Fund)– 2016–17ன் கீழ் பல்வேறு தொகுதிகளில் தண்ணீர், சுவர் மற்றும் சாலைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக 33 டெண்டர்கள் (தலா இரண்டு ஒப்பந்தபுள்ளிகளுடன் 31 மற்றும் தலா நான்கு ஒப்பந்தபுள்ளிகளுடன் இரண்டு) வெளியிடப்பட்டன. 33 டெண்டர்களில் 29ல், ஒவ்வொன்றிற்கும் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் (ஒன்றுக்கு மேற்பட்டவை) ஒரே IP முகவரியிலிருந்து பதிவேற்றப்பட்டவை, மேலும் இந்த டெண்டர்களுக்கு பெறப்பட்ட 70 ஒப்பந்தபுள்ளிகளில், 35 ஒப்பந்தபுள்ளிகள் ***27.62.119.224*** IP முகவரியிலிருந்து

பதிவேற்றப்பட்டவை. கோயம்புத்தூர் DRDAல் வெவ்வேறு பணிகளுக்கான 33 டெண்டர்களில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் திரு. K.செல்வராஜ், திரு. R. ராஜேந்திரன் ஆகியோர் பங்கேற்ற டெண்டர்கள் ஆய்வு செய்யப்பட்டது. 33 டெண்டர்களில் 22ல், ஒவ்வொரு டெண்டருக்கும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் ஒரே IP முகவரியிலிருந்தே பதிவேற்றப்பட்டவை.

DRDA, சேலம் தணிக்கை குறிப்பை ஏற்றுக்கொண்டு (நவம்பர் 2022) அனைத்து ஒப்பந்ததாரர்களும் தங்கள் ஆவணங்களை ஒரே இணையதள மையத்திலிருந்து (browsing centre) பதிவேற்றியதாகவும், அதனால் ஒப்பந்தபுள்ளிச் சமர்ப்பிப்பு தொடர்ச்சியாக நடந்ததாகவும் கூறினார். பணிச்சுமை மற்றும் ஆள் பற்றாக்குறை காரணமாக ஒப்பந்ததாரர்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்த ஆவணங்களை சரிபார்க்க முடியவில்லை என்றும் கூறியது. மேலும் DRDA, சேலம் தனது பதிலில் (டிசம்பர் 2022) தணிக்கை குறிப்பை ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாது என்று கூறியது. இது சம்பந்தமாக, DRDA கோயம்புத்தூர் பதிலளித்ததில் (அக்டோபர் 2022), ஒப்பந்ததாரர் இணைய வழியில் பதிவேற்றிய ஆவணங்களை சரிபார்க்கவில்லை என்றும், அதே IPல் இருந்து ஒப்பந்தபுள்ளிச் சமர்ப்பித்தது மற்றும் ஒப்பந்ததாரர்களிடையே வணிகக் கூட்டமைப்பு இருப்பதை சரிபார்க்க முடியவில்லை என்றும், எதிர்காலத்தில் அத்தகைய குறைபாடுகள் ஏற்படாது என்றும் உறுதியளித்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது (பிப்ரவரி 2023) இணையதளத் தரவு மற்றும் IP முகவரியின் பகுப்பாய்வில் இருந்து வெளிப்படும் கூட்டு ஒப்பந்தபுள்ளி முறை குறித்து NICயிடம் இருந்து விரிவான பதில் கோரப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்தது.

## 5.7 EMD செலுத்தல்களில் இருந்து அறியப்பட்ட ஏலமுறை பாங்குகள்

டேவணித் தொகை (Earnest Money Deposit EMD) என்பது ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு ஒப்பந்ததாரர் தனது விருப்பத்தை குறிக்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தும் தொகையாகும். அனைத்து ஒப்பந்ததாரர்களும் டெண்டர் ஆவணங்களுடன், இதை விதிவிலக்கு இல்லாமல் செலுத்த வேண்டும். டேவணித் தொகை (EMD) பொதுவாக கொள்முதல் மதிப்பில் ஒரு விழுக்காட்டிற்கு மிகாமல் இருக்கும்[5]. ஒப்பந்த செயல்திறனுக்கான உத்திரவாதமாக, வழங்கப்பட்ட ஆணைகளின் மதிப்பில் ஐந்து விழுக்காட்டிற்கு மிகாமல் ஒரு பிணை வைப்புத் தொகை (Security Deposit SD) வெற்றிகரமான ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்[6].

DRDAன் தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களில், EMD அகல்நிலை பயன்முறையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, இதில் ஒப்பந்ததாரர் தன் அசல் EMDஐ கொள்முதல் நிறுவனத்திடம் நேரடியாக சமர்ப்பித்து, பின் கூடுதலாக அதன் நகலை ஒப்பந்தபுள்ளி

---

[5] TNTIT விதிகள், 2000 - விதி 14(1).

[6] TNTIT விதிகள், 2000 - விதி 14(3).

ஆவணங்களுடன் இணையதளத்தில் பதிவேற்றுகிறார். EMD ஆவணங்களை ஆய்வு செய்ததில் காணப்பட்ட ஒப்பந்ததாரர்களின் கூட்டு குறிக்கும் பாங்குகள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன:

### 5.7.1 ஏலத்திற்கு முன்பே ஒப்பந்தம் வழங்கப்படும் என்ற உறுதி பெற்றிருந்த ஒப்பந்ததாரர்கள்

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை, ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பில் ஒரு விழுக்காடு EMD மற்றும் வெற்றிகரமான ஒப்பந்ததாரருக்கு ஏற்புக் கடிதம் வழங்கப்பட்ட 15 நாட்களுக்குள் ஒப்பந்த மதிப்பில் இரண்டு விழுக்காடாக SD ஆகிய இரண்டையும் சமர்பிக்க வேண்டும் என்று கூறுகிறது. ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட EMDன் தரவு பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- 2016–22 வரையிலான ஆண்டிகளில் DRDAக்கள் வெளியிட்ட 29,284 டெண்டர்களில், 2,213 டெண்டர்களில், இரண்டு மடங்கு EMD தொகையை முன்பே செலுத்திய ஒப்பந்ததாரர்கள் அந்தந்த டெண்டர்களில் L1 ஆக இறுதி செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.
- மேலே உள்ள 2,213 டெண்டர்களில், 1,472 டெண்டர்களில் L1 மற்றும் L2 ஒப்பந்ததாரர்கள் தங்கள் ஒப்பந்தப்புள்ளியை ஒரே IP முகவரியிலிருந்து சமர்ப்பித்தனர்.

இரண்டு மடங்கு EMD தொகையை வழங்கிய ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தத்தை பெறுவது பற்றிய முன்னறிவிப்பு இருந்ததும் இந்த எல்லா நிகழ்வுகளிலும் கூட்டு ஏலமுறை சாத்தியக்கூறுகளை நிராகரிக்க முடியாது என்பதும் மேலே கூறப்பட்டவற்றிலிருந்து தெளிவாகிறது. DRDA, கோயம்புத்தூர் (47 வழக்குகள்) இது போன்ற இனங்கள் எதிர்காலத்தில் அனுமதிக்கப்படாது என்று பதிலளித்தது (அக்டோபர் 2022).

### 5.7.2 ஒப்பந்ததாரர்களால் மின்கொள்முதல் இணையதளத்தில் குறியிடப்பட்ட EMD ஆவணத்தை சமர்ப்பித்தல்

இணையதளத்தின் MIS அறிக்கைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அலகுகளில் உள்ள மாதிரி டெண்டர்களின், L1 மற்றும் L2 ஒப்பந்ததாரர்களால் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றப்பட்ட EMD ஆவணத்தின் பெயரில் முறையே 'L1', 'ori', 'orginal', 'DDO' மற்றும் 'L2', 'dum', 'dummy', 'DDD' போன்ற எழுத்துக்கள் இருப்பதைக் காண முடிந்தது.

2016-22 வரையிலான ஆண்டிகளில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளைப் பெற்ற 61,533 டெண்டர்களில் 1,917ல் பதிவேற்றப்பட்ட EMD ஆவணம் அத்தகைய எழுத்துக்களைக் கொண்டிருந்தது என்று தரவுகளின் பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

'L1', 'orginal', 'L2', 'dummy', போன்ற எழுத்துக்களைக் கொண்டு பதிவேற்றப்பட்ட EMD ஆவணங்கள் மூலம் ஒப்பந்ததாரர் அவர் தான் L1(அசல்)/L2(டம்மி) ஒப்பந்ததாரர் என்பதைத் தெரிவிக்கும் குறியீட்டுத் தொடர்பு ஆகும். இது, ஒப்பந்ததாரர்கள் மற்றும் கொள்முதல் நிறுவனத்தின்

அதிகாரிகளுக்கு இடையேயான முறைகேடான கூட்டு செயல்முறையையும் வெளிப்படுத்துகிறது.

DRDA, கரூர் சுட்டிக்காட்டிய தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்டு, (டிசம்பர் 2022) டெண்டர் ஆவணங்களை பதிவேற்றுவது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் முறைகேடுகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்களை இணையதள தடுப்புப்பட்டியலில் சேர்ப்பதன் மூலம் தீவிரமாகப் கண்காணிக்கபடும் என்றும் பதிலளித்தது.

### 5.7.3 தொடர்ச்சியான எண்களைக் கொண்ட EMD ஆவணங்கள்

EMD சமர்ப்பிப்பின் அகல்நிலைப் முறையில், EMDஐ ஸ்கேன் செய்து, ஒப்பந்தப்புள்ளிக்கான கட்டணம்/முன்–தகுதி/தொழில்நுட்ப பாக்கெட்டில் பதிவேற்ற வேண்டும். மின்கொள்முதல் இணையதளத்தின் MIS அறிக்கைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அலகுகளில் உள்ள மாதிரி டெண்டர்களை ஆய்வு செய்ததில் இருந்து, டெண்டர் பெற்றவர்கள் 76 மாதிரி டெண்டர்களில் ஒரே வங்கியின் ஒரே கிளையால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான எண்களுடன் EMD வழங்கியிருப்பது கண்டறியப்பட்டது. **(இணைப்பு 5.2)**. இது ஒப்பந்ததாரர்களின் கூட்டு ஏலமுறையின் அறிகுறியாகும். இதுபோன்ற இரண்டு நேர்வுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

- DRDA, சேலம் மூலம் வெளியிடப்பட்ட 37 பணிகள்[7] தொடர்பான டெண்டர்களில், ஒரே ஜோடி ஒப்பந்ததாரர்கள் பங்கேற்று, ஒரே வங்கிக் கிளையால் வழங்கப்பட்ட தொடர்ச்சியான எண்களுடன் வரைவோலை வடிவில் EMDஐ வழங்கினர். இந்த அனைத்து டெண்டர்களிலும், ஒவ்வொரு டெண்டருக்கும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் ஒரே IP முகவரியில் இருந்து பதிவேற்றப்பட்டன (IP ***45.116.113.120*ல்** இருந்து 21 ஒப்பந்தபுள்ளிகள் மற்றும் IP ***45.116.114.15*ல்** இருந்து 17 ஒப்பந்தபுள்ளிகள்) அவை கொள்முதல் நிறுவனத்தின் IP முகவரிகளாகும். இரண்டு ஒப்பந்ததாரர்களால் மேற்கோள் காட்டப்பட்ட விலைகளின் பகுப்பாய்வு, அந்தந்த டெண்டர்களில் உள்ள மாறுபாடு 0.02 முதல் 0.47 விழுக்காடு வரை இருந்ததை தெரிவித்தது.
- கோயம்புத்தூரில் DRDAல் உள்ள பல்வேறு திட்டங்கள் தொடர்பான 19 மாதிரி டெண்டர்களை ஆய்வு செய்ததில், நான்கு டெண்டர்களில், போட்டியிட்ட இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒரே நாளில் ஒரே வங்கிக் கிளையால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட எண்களுடன் வரைவோலை வடிவில் EMDஐ வழங்கியது தெரியவந்தது. நான்கு டெண்டர்களில் மூன்றில், ஒவ்வொரு டெண்டருக்கும் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் ஒரே IP முகவரியிலிருந்து பதிவேற்றப்பட்டன.

7 கிராமப்புற வீடுகளுக்கு குழாய் இணைப்பு வழங்குதலுக்கான 'ஜல் ஜீவன் மிஷன்' திட்டத்தின் அமலாக்கம்.

மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டபோது, DRDA, சேலம் தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்டு (டிசம்பர் 2022) இது போன்ற குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாது என்று பதிலளித்தது. DRDA, கோயம்புத்தூர் ஒப்பந்ததாரர்கள் ஒரே நாளில் ஒரே வங்கிக் கிளையால் தொடர்ச்சியான எண்களுடன் சமர்ப்பித்த வரைவோலை/FDகளை பணிச்சுமை காரணமாக சரிபார்க்க முடியவில்லை, எதிர்காலத்தில் இதுபோன்ற குளறுபடிகள் ஏற்படாது என்று பதிலளித்தது (அக்டோபர் 2022).

### 5.7.4 SDக்கு எதிராக சரிசெய்வதற்காக L2ன் EMDஐ L1 சமர்ப்பித்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களில் ஒன்றான DRDA, சேலத்தில் டெண்டர் ஆவணங்களை கைமுறையாக ஆய்வு செய்ததில், 31 டெண்டர்களில், தோல்வியுற்ற L2 ஒப்பந்ததாரர்களுக்கு EMD திருப்பி அளிக்கப்பப்பட்டது கண்டறியப்பட்டது. அந்த EMD, SDக்கு மாற்றாக L1 ஒப்பந்ததாரர்களால் அவரது அதே டெண்டர்/மற்ற டெண்டருக்காக மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. இது ஒப்பந்ததாரர்களிடையே உள்ள கூட்டு நடைமுறையை குறிக்கிறது.

DRDA, சேலம் தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்டு (டிசம்பர் 2022), பிணை வைப்புத்தொகையாக L2 ஒப்பந்ததாரர் EMDஐ L1 ஒப்பந்ததாரர் பயன்படுத்துவது அவசரகால நோக்கத்தின் காரணமாக இருக்கலாம் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதாகவும் பதிலளித்தது.

## 5.8 முடிவுரை

கூட்டு ஏலமுறை அல்லது ஒப்பந்தபுள்ளியில் வணிகக் கூட்டமைப்பு டெண்டர் செயல்முறையின் நோக்கத்தை பாதிக்கிறது மற்றும் ஒப்பந்தபுள்ளி போட்டிமுறைக்கு எதிரானது. தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்களின் ஆய்வு, ஏலமுறையில் பல பாங்குகளை வெளிப்படுத்தியது. அதாவது, ஒப்பந்தபுள்ளி சுழற்சி, குடும்ப உறுப்பினர்களான ஒப்பந்ததாரர்கள், கொள்முதல் நிறுவன கணினியிலிருந்தே ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், வெவ்வேறு ஒப்பந்ததாரர்கள் ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தபுள்ளி சமர்ப்பித்தல், இரட்டை EMD, ஒப்பந்ததாரர்களின் குறியீட்டு தகவல் பதிவேற்றம் மற்றும் தொடர்ச்சியான EMD ஆவண எண்கள் ஆகியவை ஒப்பந்தபுள்ளி முறைகேடு மற்றும் வணிகக் கூட்டமைப்பைக் குறிக்கும். ஒப்பந்ததாரர்களின் இந்த முறைகேடான நடைமுறைகள் மற்றும் டெண்டர் மதிப்பீடு/அனுமதிப்பு அதிகாரிகளின் தோல்வி, ஒப்பந்ததாரர் பங்கேற்பை அதிகரிக்க, செலவைக் குறைக்க மற்றும் கொள்முதல் முறையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளைத் பாதிக்கிறது. அரசு தணிக்கை குறிப்புகளை ஏற்றுக்கொண்டு (பிப்ரவரி 2023), 1 ஏப்ரல் 2023 முதல் செயல்படுத்தப்படும் புதிய இணையதளத்திற்கு இவை பயனுள்ளதாக இருக்கும் என்று கூறியது.

## 5.9 பரிந்துரைகள்

- ஒரே பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும்/அல்லது ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கும் ஒப்பந்தபுள்ளிகளை சுட்டிக்காட்டும் வகையில் மென்பொருளை அரசு மறுவடிவமைப்பு செய்ய வேண்டும்.
- தணிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்ட ஏலமுறையில் கூட்டு மற்றும் வணிகக் கூட்டமைப்பு நேர்வுகளுக்கு அரசு விசாரணை நடத்தி பொறுப்பை நிர்ணயிக்க வேண்டும்.
- டெண்டர்களை மதிப்பீடு செய்து இறுதி செய்வதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், MISன் 'டெண்டர் டிஸ்கர்சிவ் அறிக்கை' பயன்படுத்தி இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட ஆவணங்களை கவனமாக ஆராய வேண்டும். இவ்வறிக்கை, IP முகவரி, EMD, GST போன்ற அனைத்து ஒப்பந்தபுள்ளி தொடர்பான தகவல்களையும் வழங்குவதன் மூலம் ஒப்பந்ததாரர்களின் முறைகேடான கூட்டு செயல்முறைகளுக்கு எதிராக பாதுகாக்க உதவும். கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் தங்கள் அலுவலக கணினியில் ஒப்பந்தபுள்ளி சமர்ப்பிக்க ஒப்பந்ததாரர்களை அனுமதிக்கக் கூடாது.

**(சி. நெடுஞ்செழியன்)**

சென்னை — முதன்மை கணக்காய்வு தலைவர் (தணிக்கை),

நாள் 10 மே 2023 — தமிழ்நாடு

மேற்கையொப்பமிடப்பட்டது

**(கிரீஷ் சந்திர முர்மு)**

புது டில்லி — இந்தியக் தணிக்கைத் துறைத் தலைவர்

நாள் 11 மே 2023

# இணைப்புகள்

## இணைப்பு 1.1

### (பார்வை: பத்தி 1.8 (i); பக்கம் 6)

### மாதிரி மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் பட்டியல்

| வ.எண் | கொள்முதல் செய்யும் நிறுவனத்தின் பெயர் | வெளியிடப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 500க்கு மேல் |
| 2 | தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் | |
| 3 | நகர ஊராட்சி இயக்குநரகம் | |
| 4 | நெடுஞ்சாலைத் துறை | |
| 5 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | |
| 6 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | |
| 7 | தமிழ்நாடு மின்சார வாரியம் | |
| 8 | தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை | 500க்கும் குறைவு |
| 9 | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை | |
| 10 | பொதுப்பணித்துறை | |
| 11 | பொதுப்பணித்துறை – உலக வங்கி டெண்டர்கள் | |
| 12 | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) | |
| 13 | பட்டு வளர்ப்பு துறை | |
| 14 | தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் | |

## இணைப்பு 1.2

### (பார்வை: பத்தி 1.8 (ii); பக்கம் 6)

### டெண்டர் தேர்ந்தெடுப்பில் பயன்படுத்தப்பட்ட இடர் அளவுருக்கள்

| இடர் வகை | இடர் வகையின் மதிப்பு | இடர் அளவுரு | இடர் மதிப்பெண் |
|---|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிகள் | 50 | ஒரே ஒப்பந்தப்புள்ளி | 15 |
| | | இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே | 12 |
| | | ரத்து செய்யப்பட்ட/மீண்டும் டெண்டர் செய்யப்பட்ட டெண்டர்கள் | 10 |
| | | அண்மையில் L1 ஆன ஒப்பந்தப்புள்ளி | 7 |
| | | அதிகபட்ச AOC பெறும் ஒப்பந்ததாரர்கள் | 4 |
| | | ஒரு நிறுவனத்தில் உள்ள ஒரே தொகுப்பு ஒப்பந்ததாரர்கள்- முதல் 5 | 2 |
| IP முகவரி | 30 | துறையின் ipல் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் சமர்பித்த டெண்டர்கள் | 20 |
| | | ஒரே IPல் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் சமர்பித்த டெண்டர்கள் | 10 |
| நிதி | 20 | ₹2 கோடிக்கும் அதிகமான டெண்டர்களுக்கு - வெளியிடப்பட்ட தேதிக்கும் சமர்ப்பித்த தேதிக்கும் இடையே 15 நாட்களுக்கு (விதிமுறை 30 நாட்கள்) குறைவான அல்லது அதற்கு சமமான நாட்கள் கொண்டவை | 8 |
| | | ₹2 கோடிக்கும் குறைவான டெண்டர்களுக்கு - வெளியிடப்பட்ட தேதிக்கும் சமர்ப்பித்த தேதிக்கும் இடையே 7 நாட்களுக்கு (விதிமுறை 15 நாட்கள்) குறைவாகவோ அல்லது சமமாகவோ உள்ளவை | 6 |
| | | டெண்டர் மதிப்பு ₹1 கோடிக்கு மேல் | 4 |
| | | டெண்டர் மதிப்பு ₹1 கோடிக்கும் குறைவு | 2 |
| **மொத்தம்** | **100** | | **100** |

## இணைப்பு 2.1
### (பார்வை: பத்தி 2.2; பக்கம் 10)
### மின்கொள்முதல் இணையதள உபயோகத்தை இடைநிறுத்தம் செய்த கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள்

| வ.எண் | பெயர் | முதல் டெண்டர் வெளியிடப்பட்ட தேதி | இறுதி டெண்டர் வெளியிடப்பட்ட தேதி | பயன்படுத்தப் பட்ட மாதங்களின் எண்ணிக்கை | வெளியிடப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | தொழில் துறை | 10/02/2020 | 10/02/2020 | 0 | 1 |
| 2 | தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை | 23/09/2016 | 23/09/2016 | 0 | 1 |
| 3 | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 20/04/2018 | 08/05/2018 | 1 | 2 |
| 4 | பெருநகர போக்குவரத்து கழகம் (சென்னை) | 13/11/2021 | 13/12/2021 | 1 | 4 |
| 5 | மாநில விரைவு போக்குவரத்து கழகம், தமிழ்நாடு | 08/11/2021 | 09/12/2021 | 1 | 6 |
| 6 | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 18/10/2021 | 27/11/2021 | 1 | 2 |
| 7 | மாநில திட்ட மேலாண்மை அலகு-ஜல் ஜீவன் மிஷன் | 27/08/2021 | 01/11/2021 | 2 | 3 |
| 8 | இந்து சமய அறநிலையத்துறை, சென்னை | 13/08/2019 | 22/02/2020 | 6 | 10 |
| 9 | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை | 28/05/2018 | 01/02/2019 | 8 | 2 |
| 10 | தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் | 13/08/2019 | 10/06/2020 | 10 | 5 |
| 11 | பொதுப்பணித்துறை | 21/02/2018 | 15/02/2019 | 12 | 88 |
| 12 | தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC) - உலக வங்கி / MDB டெண்டர்கள் | 29/09/2020 | 30/12/2021 | 15 | 14 |
| 13 | சென்னை மத்திய கூட்டுறவு வங்கி, சென்னை | 07/02/2018 | 17/10/2019 | 20 | 2 |
| 14 | காவல்துறை | 14/02/2020 | 30/12/2021 | 23 | 5 |
| 15 | அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை | 19/05/2017 | 27/10/2020 | 41 | 3 |
| 16 | தமிழ்நாடு சாலைத் துறை திட்டம் | 05/07/2017 | 22/01/2021 | 43 | 34 |
| 17 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 17/07/2017 | 08/02/2021 | 43 | 173 |
| 18 | வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் | 11/10/2017 | 30/12/2021 | 51 | 56 |

**இணைப்பு 2.2**

**(பார்வை: பத்தி 2.4; பக்கம் 15)**

**GePNIC பயன்படுத்தும் பிற மாநில அரசுகளுடன் ஒப்பிட்டு தமிழக அரசால் வெளியிடப்பட்ட டெண்டர்களின் புதுப்பிப்புக்கான நிலை**

| வ.எண் | மாநிலத்தின் பெயர் | 2020-22ல் வெளியிடப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை | 2020-22ல் AOCக்கு புதுப்பிக்கப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை | AOCக்கு புதுப்பிக்கப்பட்ட டெண்டர்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திரிபுரா | 17,740 | 12,181 | *68.66* |
| 2 | கேரளா | 1,89,509 | 97,541 | *51.47* |
| 3 | மேற்கு வங்காளம் | 1,99,341 | 92,184 | *46.24* |
| 4 | மத்திய பிரதேசம் | 1,20,959 | 54,908 | *45.39* |
| 5 | மகாராஷ்டிரா | 3,44,790 | 1,56,370 | *45.35* |
| 6 | பஞ்சாப் | 88,147 | 38,243 | *43.39* |
| 7 | ஹரியானா | 1,07,815 | 45,492 | *42.19* |
| 8 | ஒடிசா | 72,732 | 27,237 | *37.45* |
| 9 | இமாச்சல பிரதேசம் | 33,299 | 8,398 | *25.22* |
| 10 | உத்தரப்பிரதேசம் | 3,98,625 | 64,187 | *16.10* |
| 11 | **தமிழ்நாடு** | **71,372** | **8,041** | ***11.27*** |
| 12 | உத்தரகாண்ட் | 21,490 | 891 | *4.15* |
| 13 | டெல்லியின் N.C.T. | 43,014 | 1,697 | *3.95* |
| 14 | ராஜஸ்தான் | 1,48,029 | 5,456 | *3.69* |
| 15 | ஜார்கண்ட் | 18,151 | 382 | *2.10* |

# இணைப்பு 3.1

## (பார்வை: பத்தி 3.2.1 (i); பக்கம் 24)

## ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டதை விட குறைவான காலவரம்புடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் கொள்முதல் நிறுவனம் வாரியான விவரங்கள்

| வ.எண் | கொள்முதல் நிறுவனம் | நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட (15 நாட்கள்) குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு காலத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் துறை வாரியான விவரங்கள் (மதிப்பு <= ₹2 கோடி) | | | | நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட (30 நாட்கள்) குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு காலத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் துறை வாரியான விவரங்கள் (மதிப்பு > ₹2 கோடி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டெண்டர்கள் எண்ணிக்கை | மதிப்பு (₹ கோடியில்) | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அதிகபட்ச எண்ணிக்கை | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை | டெண்டர்களின் எண்ணிக்கை | மதிப்பு (₹ கோடியில்) | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அதிகபட்ச எண்ணிக்கை | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை |
| 1 | சென்னை அண்ணா பல்கலைக்கழகம் | 8 | 1.42 | 4 | 1 | 2 | 18.50 | 7 | 3 |
| 2 | CMWSS வாரியம் | 280 | 200.69 | 15 | 1 | 51 | 3,238.77 | 8 | 1 |
| 3 | பெருநகர சென்னை மாநகராட்சி | 18,370 | 1,824.22 | 19 | 1 | 1,030 | 8,644.98 | 14 | 1 |
| 4 | தகவல் தொழில்நுட்பத் துறை | 3 | 0.00 | 6 | 2 | 1 | 4.00 | 3 | 3 |
| 5 | பட்டு வளர்ப்பு துறை | 4 | 1.83 | 13 | 3 | 1 | 3.20 | 6 | 6 |
| 6 | சர்க்கரை பிரிவு (தமிழ்நாடு கூட்டுறவு சக்கரை இணையம்) | 10,595 | 69.61 | 22 | 1 | 75 | 1,618.47 | 19 | 1 |
| 7 | தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் | 4,615 | 7.14 | 25 | 1 | 0 | 0.00 | 0 | 0 |
| 8 | பேரூராட்சிகள் இயக்ககம் | 6,600 | 1,193.64 | 6 | 1 | 144 | 502.11 | 3 | 1 |
| 9 | பெருநகர சென்னை மாநகராட்சி - ADB டெண்டர்கள் | 0 | 0.00 | 0 | 0 | 1 | 53.82 | 0 | 0 |
| 10 | ELCOT | 5 | 0.00 | 5 | 2 | 0 | 0.00 | 0 | 0 |
| 11 | நெடுஞ்சாலைகள் | 393 | 300.52 | 11 | 1 | 1,057 | 8,481.38 | 12 | 1 |
| 12 | இந்து சமய மற்றும் அறநிலையத்துறை | 3 | 1.72 | 6 | 2 | 2 | 8.49 | 6 | 4 |
| 13 | தொழில் துறை | 0 | 0.00 | 0 | 0 | 1 | 10.76 | 35 | 35 |
| 14 | நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை | 22,551 | 3,088.08 | 19 | 1 | 1,654 | 11,528.89 | 8 | 1 |
| 15 | பெருநகர போக்குவரத்து கழகம் (சென்னை) | 4 | 0.00 | 66 | 3 | 0 | 0.00 | 0 | 0 |
| 16 | குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் | 74 | 27.95 | 18 | 1 | 5 | 63.95 | 5 | 2 |
| 17 | NIC TNSU | 1 | 0.11 | 2 | 2 | 1 | 10.00 | 3 | 3 |
| 18 | காவல்துறை | 0 | 0.00 | 0 | 0 | 1 | 4.80 | 4 | 4 |
| 19 | பொதுப்பணித் துறை (Public Works Department -PWD) | 33 | 36.09 | 8 | 2 | 46 | 290.98 | 8 | 1 |
| 20 | PWD - WB / MDB டெண்டர்கள் | 22 | 2.16 | 5 | 1 | 0 | 0.00 | 0 | 0 |
| 21 | வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் | 21 | 10.66 | 5 | 2 | 2 | 9.88 | 4 | 4 |
| 22 | SE- (RD),TN | 23,871 | 9,901.53 | 14 | 1 | 627 | 3,363.39 | 12 | 1 |

| வ.எண் | கொள்முதல் நிறுவனம் | நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட (15 நாட்கள்) குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு காலத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் துறை வாரியான விவரங்கள் (மதிப்பு <= ₹2 கோடி) | | | | நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட (30 நாட்கள்) குறைவான ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பு காலத்துடன் வெளியிடப்பட்ட டெண்டர்களின் துறை வாரியான விவரங்கள் (மதிப்பு > ₹2 கோடி) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | டெண்டர்கள் எண்ணிக்கை | மதிப்பு (₹ கோடியில்) | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அதிகபட்ச எண்ணிக்கை | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை | டெண்டர்களின் எண்ணிக்கை | மதிப்பு (₹ கோடியில்) | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் அதிகபட்ச எண்ணிக்கை | ஒரு டெண்டருக்குப் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை |
| 23 | அரசு விரைவு போக்குவரத்து கழகம், தமிழ்நாடு | 6 | 1.44 | 41 | 6 | 0 | 0.00 | 0 | 0 |
| 24 | மாநில திட்ட மேலாண்மை அலகு-ஜல் ஜீவன் மிஷன் | 3 | 0.47 | 4 | 3 | 0 | 0.00 | 0 | 0 |
| 25 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 43 | 26.07 | 9 | 1 | 1 | 3.25 | 2 | 2 |
| 26 | தமிழ் நாடு வெள்ளைக்கல் (Magnesite) நிறுவனம் | 0 | 0.00 | 0 | 0 | 1 | 35.00 | 12 | 12 |
| 27 | தமிழ்நாடு கனிம நிறுவனம் | 2 | 1.25 | 6 | 4 | 12 | 88.00 | 9 | 1 |
| 28 | தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் | 476 | 348.06 | 15 | 1 | 154 | 1,303.28 | 15 | 1 |
| 29 | தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக்கழகம் | 237 | 43.51 | 12 | 1 | 7 | 70.28 | 9 | 2 |
| 30 | தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு | 137 | 78.12 | 19 | 1 | 46 | 464.44 | 7 | 1 |
| 31 | தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் | 55 | 8.64 | 11 | 1 | 8 | 1,470.50 | 17 | 1 |
| 32 | தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) | 7 | 5.00 | 8 | 2 | 1 | 3.40 | 5 | 5 |
| 33 | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகம் | 0 | 0.00 | 0 | 0 | 16 | 87.11 | 5 | 1 |
| 34 | டைடல் பார்க், சென்னை | 1 | 1.55 | 6 | 6 | 3 | 34.70 | 6 | 3 |
| 35 | TN சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் | 214 | 88.49 | 30 | 1 | 63 | 1,769.33 | 40 | 1 |
| 36 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் | 536 | 66.36 | 8 | 1 | 44 | 419.66 | 6 | 1 |
| 37 | தமிழ்நாடு மின்சார வாரியம் (TNEB) | 26,731 | 2,145.51 | 33 | 1 | 396 | 13,617.41 | 93 | 1 |
| 38 | TNEB - WB / MDB டெண்டர்கள் | 1 | 0.00 | 2 | 2 | 0 | 0.00 | 0 | 0 |
| 39 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 207 | 21.90 | 8 | 1 | 27 | 1,101.04 | 7 | 1 |
| | மொத்தம் | 1,16,109 | | | | 5,480 | | | |

## இணைப்பு 5.1

(பார்வை: பத்தி 5.6.2; பக்கம் 74)

### ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள்

| வ.எண் | மாதிரி அலுவலகம் | ஒரே IP முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி எடுக்கப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் | 76 |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 92 |
| 3 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர் | 2 |
| 4 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 17 |
| 5 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் | 24 |
| 6 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர் | 6 |
| 7 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், சென்னை | 10 |
| 8 | சென்னை மாநகராட்சி | 5 |
| | **மொத்தம்** | **232** |

## இணைப்பு 5.2

(பார்வை: பத்தி 5.7.3; பக்கம் 77)

### தொடர்ச்சியான EMD ஆவண எண்களுடன் ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பித்த கொள்முதல் நிறுவனங்களின் விவரங்கள்

| வ.எண் | மாதிரி அலுவலகம் | தொடர்ச்சியான EMD ஆவண எண்களுடன் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட டெண்டர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிர்வாக பொறியாளர், பொதுப்பணித்துறை, WRO, GWC சேலம் (உலக வங்கி டெண்டர்கள்) | 2 |
| 2 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம் | 59 |
| 3 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் | 4 |
| 4 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி | 5 |
| 5 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் | 3 |
| 6 | சென்னை மாநகராட்சி | 3 |
| | மொத்தம் | 76 |

சுருக்கங்களின் சொற்களஞ்சியம்

| சுருக்கங்கள் | முழு படிவம் |
|---|---|
| AOC | ஒப்பந்தம் வழங்கப்படுதல் |
| BEP | அலுவல் தொடர்ச்சி திட்டம் |
| BOQ | அளவுகளின் பட்டியல் |
| CPC | கிரையோஜெனிக் செயல்முறை கட்டுப்பாடுகள் |
| CVC | மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் |
| DOF | நிதித்துறை |
| DOS | பட்டு வளர்ப்பு இயக்குநர் |
| DOTE | தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் |
| DRDO | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| DSC | டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ் |
| EE | நிர்வாக பொறியாளர் |
| EMD | டேவணித் தொகை |
| GEM | அரசு மின்-சந்தை |
| GEPNIC | தேசிய தகவல் மையத்தின் அரசாங்க மின் கொள்முதல் அமைப்பு |
| GIGW - 2018 | இந்திய அரசு இணையதளங்களுக்கான வழிகாட்டுதல்கள் |
| GoI | இந்திய அரசு |
| GoTN | தமிழ்நாடு அரசு |
| GWC | நிலத்தடி நீர் வட்டம் |
| HSN | சீர்முறை பெயரிடல் |
| IP | இணைய நெறிமுறை |
| IT | தகவல் தொழில்நுட்பம் |
| L1 | வெற்றிகரமான ஏலதாரர் |
| LoA | ஏற்புக் கடிதம் |
| MEITY | மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் |
| MIS | மேலாண்மை தகவல் அமைப்பு |
| MOPS | பல தரப்பட்ட கட்டணம் செலுத்தும் முறை |
| MSME | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனம் |

| சுருக்கங்கள் | முழு படிவம் |
|---|---|
| NDCSP | சாஸ்திரி பூங்காவில் உள்ள தேசிய தரவு மையம் |
| NIC | தேசிய தகவல் மையம் |
| NIT | டெண்டர் அழைப்பு அறிவிப்பு |
| NSIC | தேசிய சிறுதொழில் கழகம் |
| PAN | நிரந்தர கணக்கு எண் |
| PKI | பொது விசை உள்கட்டமைப்பு |
| SBI | பாரத ஸ்டேட் வங்கி |
| SD | பிணை வைப்புத் தொகை |
| SRS | மென்பொருள் தேவை விவரக்குறிப்புகள் |
| SSIs | சிறு தொழில் நிறுவனங்கள் |
| STQC | தரப்படுத்தல், சோதனை மற்றும் தர சான்றிதழ் |
| TAC | டெண்டர் ஏற்புக் குழு |
| TIA | டெண்டர் அழைப்பு அதிகாரி |
| TNTIT Rules | தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படைத்தன்மை விதிகள் |
| TSC | டெண்டர் ஆய்வுக் குழு |
| WRD | நீர்வளத்துறை |

© இந்திய தணிக்கைத் துறைத் தலைவர்
www.cag.gov.in

http://www.cag.gov.in/ag1/tamil-nadu/en